உங்கள் குறைகளும், பலவீனங்களும் உங்கள் வாழ்க்கையையே சீரழிக்கும் அளவுக்குப் பெரிதாக இல்லாதவரை நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. சிலவற்றில் நீங்கள் பூஜ்ஜியமாகக் கூட இருக்கலாம். உங்களைச் சுற்றியுள்ள பலரும் அவற்றில் பெரிய திறமையாளர்களாகக் கூட இருக்கலாம். யாராவது அதுபற்றிக் கேட்டால் சொல்ல தர்மசங்கடமாக இருக்கக் கூடும் என்றாலும் உங்கள் வாழ்க்கை அந்த ஒன்றிலேயே தீர்மானிக்கப்பட்டு விடுவதில்லை என்பதை உறுதியாக அறிந்திருங்கள். உங்கள் இயல்பிலேயே இல்லாத திறமை, எவ்வளவு முயன்றாலும் புளியங்கொம்பாக இருக்கின்ற திறமை என்றால் அது உங்களுக்கானதல்ல என்பதை உணர்ந்து ஏற்றுக் கொண்டு விடுங்கள். அதற்காக நீண்ட காலம் போராடி வாழ்க்கையை வீணாக்காதீர்கள்.

எனவே உங்களுக்கு என்னவெல்லாம் தெரியாது என்று உலகம் கேட்கப் போவதில்லை. அதைப் பற்றி அது கவலைப்படுவதுமில்லை. உங்களுக்கு என்ன தெரியும், எந்த அளவு தெரியும், அதில் கூடுதலான உங்கள் தனித்திறமை என்ன என்று தான் உலகம் பார்க்கிறது. அதை வைத்தே உலகம் உங்களை உபயோகப்படுத்துகிறது. எனவே எல்லாவற்றையும் தெரிந்து கொள்கிறேன் என்று எல்லாவற்றையும் ஓரளவு தெரிந்து கொள்வதை விட உங்கள் உண்மையான திறமையைக் கண்டு பிடித்து அதை நன்றாக வளர்த்துக் கொள்ளுங்கள். அது தான் உங்கள் வாழ்க்கையை நிர்ணயிக்கப் போகும் பலம். அப்படி ஒரு பலம் உங்களுக்கு உறுதியாகக் கிடைத்து விட்டால் உலகிற்கு நீங்கள் கண்டிப்பாகத் தேவைப்படுவீர்கள். அதற்கான விலையாக உங்களுக்கு வேண்டியதை இந்த உலகம் கண்டிப்பாக கொடுத்தே தீரும்.

*- என். கணேசன்*

# பாராளுமன்றத் தேர்தல்: யாருக்கு வாக்களிப்பது ?



கோபி
ஒரு பேப்பர்

தாய்ப் பாராளுமன்றம் என்றழைக்கப்படும் வெஸ்மின்ஸ்ரர் பாராளுமன்றம் 1801ம் ஆண்டு உருவாக்கம் பெற்றது. அதன் 55வது பாராளுமன்றத்திற்கான தேர்தல் இன்னும் ஐந்து நாட்களில் நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் வெற்றி பெற்று யார் ஆட்சியமைக்கப் போகிறார்கள் என்று எதிர்வு கூற முடியாதவகையில் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையை பெற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதனை தேர்தல் தொடர்பான கருத்துக் கணிப்புகள் காட்டுகின்றன. தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை கட்சிகளின் செல்வாக்கு ஏறத்தாள ஒரே நிலையிலே காணப்படுகிறது. முதன்மைக் கட்சிகளான கொன்சவேர்ட்டிவ்கட்சியும், தொழிற்கட்சியும் தலா 34, 33 விழுக்காடு ஆதரவினைப் பெற்றுள்ளன. மீதமுள்ள முப்பத்திமூன்று விழுக்காடு ஆதரவினைப் பெற்றுள்ள இதர கட்சிகளின் நிலையிலும் மாற்றத்தை காண முடியவில்லை எனினும் இத்தேர்தலில் சில புதிய வரவுகள் செல்வாக்குச் செலுத்துவதனைக் காணலாம். 650 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் ஆகக் குறைந்தது 325 ஆசனங்களைக் பெற்றுக் கொள்ளும் ஒரு தனிக்கட்சி அல்லது கட்சிகள் இணைந்த கூட்டணியே ஆட்சி அமைக்க முடியும். தற்போதைய கணிப்புகளின்படி கூட்டு ஆட்சி அமைவதற்கான வாய்ப்பே அதிகமாகக் காணப்படுகிறது.

பிரித்தானிய அரசியலில் முதன்மை பெறும் விடயங்களாக,

- பொருளாதாரம், வரி அறவிடல், வீட்டுகடனுக்கான வட்டி வீதம்
- கல்வி, வேலைவாய்ப்பு
- பொது சுகாதார சேவை (NHS)
- ஐரோப்பிய ஒன்றியம் உட்பட வெளிவிவகாரக் கொள்கை
- வீட்டு வசதி
- சமூகக் கொடுப்பனவுகள்
- சட்டம் ஒழுங்கு

ஆகியவை அமைந்திருக்கின்றன. இவ்விடயாங்களில் கட்சிகள் வழங்கும் உறுதிமொழிகளின் அடிப்படையில் யாருக்கு வாக்களிப்பது என்பதனை பிரித்தானிய மக்கள் தீர்மானிக்கிறார்கள். வாக்காளர்கள் தமது பொருளாதார நிலைமை ஒட்டியே, தமக்கு வாய்ப்பாக அமைந்துள்ள கொள்கையுடையவர்களை ஆதரிப்பார்கள் என்பதனால் பெரும்பாலும் பொருளாதார அடிப்படையிலான வர்க்கப் பிரிவுகளை கவர்வதற்காகவே கட்சிகளின் கொள்கைகள் வகுக்கப்படுகின்றன. எல்லாத்தரப்புகளையும் திருப்திப்படுத்தக்கூடிய பொருளாதாரக் கொள்கைகளை வகுக்க முடியாதிருப்பதால், எந்தக்கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறமுடியாத நிலை காணப்படுகிறது.

### ◆ மத்தியதர வர்க்கத்தின் ஆதரவைப்பெறும் கொன்சவேர்ட்டிவ் கட்சி

கடந்த பாராளுமன்றத்தில் ஆட்சியிலிருந்த கொன்சவேர்ட்டிவ் கட்சி லிபரல் டெமொக்கிறற் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைத்தது. உலக பொருளாதாரத்தின் தேக்க நிலைமை, வங்கிகளின் சரிவு போன்ற பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் பதவியேற்ற கொன்சவேர்ட்டிவ் கட்சியின் ஐந்தாண்டு ஆட்சிகாலத்தில் double dip recession எனப்படும் இரட்டை பொருளாதாரச் சரிவு நிலையேற்பட்டது. AAA நிலையில் இருந்த பிரித்தானியாவின் கடன் தர நிலமை AA+ ஆக தரக் குறைப்பிற்கு உள்ளானது. இது சர்வதேச முதலீடுகளில்பாதிப்பினை ஏற்படுத்தியது. ஐரோப்பிய ஒன்றியத்தில் சில நாடுகளின் பொருளாதாரம் அதல பாதாளத்தை நோக்கிச் சென்றது. இத்தகைய அக, புறச் சூழ்நிலையிலும் பிரித்தானியாவின் பொருளாதாரத்தை பாதுகாத்து வளர்ச்சிப் போக்குக்கு கொண்டு வந்ததில் கொன்சவேர்ட்டிவ் கட்சியினதும், அதன் நிதியமைச்சர் ஜோர்ஜ் ஒஸ்போனினதும் பங்கு கவனத்திற்கொள்ளப்படுகிறது. ஆகவே வசதி படைத்தவர்கள், இங்கிலாந்தின் மத்தி என்று அழைக்கப்படும் மத்தியதர வர்க்கத்தினர் மத்தியில் கொன்சவேர்ட்வ் கட்சிக்கான ஆதரவு காணப்படுகிறது. அதே சமயத்தில் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு அரச சேவைகளிலும், சமூகநல உதவிகளிலும் மேற்கொள்ளப்பட்ட குறைப்பு நடவடிக்கைகள், உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களை பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது. ஆகவே அவர்களின் ஆதரவு கொன்சவேர்ட்டிவ் கட்சிக்கு இருக்காது என்பதனையும், அவர்கள் கொன்சவேர்ட்டில் கட்சியை பதவியிலிருந்து அகற்றுவதற்காகவே வாக்களிக்கச் செல்வார்கள் எனவும் எதிர்பார்க்கலாம்.

### ◆ உழைக்கும் வர்க்கத்தின் பலத்தில் தொழிற்கட்சி

கொன்சவேர்ட்டிவ் கட்சிக்கு எதிரான வாக்குகள் என்று மட்டுமில்லாமல் தொழிற்கட்சிக்கென பாரம்பரியமான வாக்கு வங்கியும், பெரும் தொழிற்சங்கங்களின் ஆதரவும் இருக்கிறது. இருப்பினும் கருத்துக் கணிப்பில் கொன்சவேர்ட்டிவ் கட்சிக்கு சற்றுக் குறைவான நிலையிலேயே தொழிற்கட்சி காணப்படுகிறது. தொழிற்கட்சி அரசாங்கம் ஆட்சியைவிட்டுவெளியேறியபோது 'கஜானா காலி' என்பது போன்று திறைசேரி காலியாக இருந்தது என கொன்சவேர்ட்டிவ் கட்சி குற்றம் சாட்டி வருகிறது. அப்போது உலகப்பொருளாதாரம்பெரும் வீழ்ச்சியிலிருந்து என்பதனை கருத்திலெடுத்தாலும், பொதுச் செலவீனத்தில் தொழிற்கட்சி, கொன்சவேர்ட்டிவ் கட்சியைப் போன்று சிக்கனத்தை கடைப்பிடிப்பதில்லை என்று பொதுவாகக் கருதப்படுகிறது. அதுபோன்று உயர் வருமானத்தினைப் பெற்றுக்கொள்பவர்களுக்கான வரி அதிகரிப்பு, மாளிகை போன்ற வீடுகளில் (இரண்டு மில்லியன் பவுண்ஸ்க்கு மேற்பட்ட பெறுமதியுடைய வீடுகள்) வாழ்பவர்களுக்கு வரி (mansion tax) அறவிடுவது போன்ற விடயங்களும் வசதி படைத்தவர்களுக்கு உவப்பான செய்திகளாக இருக்கப்போவதில்லை.

மறுபுறத்தில், வாய்ப்புக் குறைந்த மக்களுக்கு தொழிற்கட்சியின் திட்டங்கள் உதவுவதாகவே அமைந்துள்ளன. கொன்சவேர்ட்வ் கட்சியின் ஆட்சியில் காணப்பட்ட பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு மத்தியிலும் வசதி படைத்தவர்களுக்கும் வசதி குறைந்தவர்களுக்குமிடையிலான இடைவெளி அதிகரித்துள்ளதாகவே அறியப்படுகிறது. இந்நிலையில் பொருளாதார விடயங்களில் தமக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் விடயங்களை வசதி படைத்தோர் ஆதரிக்கப் போவதில்லை.

### ◆ இதர கட்சிகளின் நிலை

கடந்த தேர்தலில் ஐம்பத்தாறு ஆசனங்களைப்பெற்று, கட்சிகளின் வரிசையில் மூன்றாவது இடத்தைப்பெற்ற லிபரல் டிமொக்கிரட் கட்சியானது கொன்சவேர்ட் கட்சியுடன் ஆட்சியில் இணைந்து கொண்டது. கட்சியின் தலைவர் நிக் கிளெக் உதவி பிரதமராகவும், வின்ஸ் கேபிள் உட்பட சிலருக்கு அமைச்சுப் பதவிகளும் கிடைத்தன. ஆனால் பெரும்பாலும் கொன்சவேர்ட்டிவ் கட்சியின் கொள்கைகளுக்கு ஏற்ப நடக்கவேண்டியிருந்தமையால், லிபரல் டிமொக்கிரட் அதன் கொள்கைப்படி நடக்க முடியவில்லை. அதன் விளைவாக அதன் ஆதரவுத்தளம் அரைப்பங்காகக் குறைந்துவிட்டது. இம்முறை இருபத்தைந்து ஆசனங்களே இக் கட்சிக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த தேர்தலில் எந்த ஆசனத்தையும் பெற்றுக் கொள்ளாத யுகிப் எனப்படும் யுகே இன்டிப்பென்டன்ற் கட்சி (UKIP) இம்முறை பலரதும் கவனத்தை ஈர்த்துள்ளது. குடிவரவுக் கொள்கையில் இறுக்கமான நிலைப்பாடு என வலதுசாரிக் கொள்கைகளுடன், கொன்சவேர்ட்டிவ், தொழிற் கட்சி, லிபரல் டிமொகிரட் கட்சி ஆகியவற்றின் வாக்குத் தளத்தில் சிறிதளவை தனதாக்கிக் கொள்ள அது முனைகிறது. தாம் எதிர்நோக்கும் எல்லாப் பிரச்சனைகளுக்கும் குடியேறிகள் மீது குற்றஞ்சாட்டும் வழக்கம் பூர்வீக மக்கள் மத்தியில் இருப்பதனால் அதனை தமக்கு வாய்ப்பாகக் கொண்டு வாக்குத் தேடுகிறது யூக்கிப். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையையும் அது முன்வைக்கிறது. பதினான்கு வீத ஆதரவைப் பெற்றுள்ளதாக கணிப்பிடப்படும் இக்கட்சி நான்கு ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இத் தேர்தலில் குறித்தளவு தாக்கத்தினை ஏற்படுத்தப்போகும் கட்சி என்றால் எது வித தயக்கமுமின்றி ஸ்கொற்றிஸ் நசனல் கட்சி என்று கூறு முடியும்.

### ◆ எழுச்சி பெறும் ஸ்கொற்லாந்து தேசியக் கட்சி

ஐக்கிய இராட்சியத்திலிருந்து ஸ்கொற்லாந்து பிரிந்து செல்வதனை வலியுறுத்தும் பிராந்தியக் கட்சியான ஸ்கொற்றிஸ் நசனல் கட்சி (SNP) கடந்த தேர்தலில் 7 ஆசனங்களைப் பெற்றிருந்தது. ஆனால் இந்தத் தேர்தலில் அது ஐம்பத்தாறு ஆசனங்களைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் அதனுடன் இணைந்து தொழிற்கட்சி ஆட்சி அமைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எஸ்என்பியின் வளர்ச்சியினால் பாதிக்கப்பட்டிருக்கும் தொழிற்கட்சி ஸ்கொற்லாந்தில் தமது கோட்டை எனக் கருதப்பட்ட தொகுதிகளைக்கூட எஸ்என்பியிடம் இழந்துவிடும் நிலையே காணப்படுகிறது. வெஸ்றமின்ஸ்ரர் பாராளுமன்றத்தின் அதிகாரத்திலிருந்து ஸ்கொற்லாந்தை பிரித்தெடுக்கவேண்டும் என எதிர்பார்க்கிற எஸ்என்பி அதே அரசாங்கத்தில் இணைந்து கொள்வது முரண் நகையாகத் தோன்றலாம். இருப்பினும் ஸ்கொற்லாந்து சுதந்திரத்திற்கான ஒப்பங்கோரல் வாக்கெடுப்பில் தோல்வி கண்டுள்ளபோதிலும், இன்னமும் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிடாத எஸ்என்பியின் வளர்ச்சி இங்கிலாந்துக்கு அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளது.

### ◆ தலைவர்களுக்கிடையிலான தெரிவு

இந்தத் தேர்தலில் கட்சிகளின் தலைவர்களை நோக்கிய விமர்சனங்கள் வழமையை விட அதிகரித்துள்ளமையைக் காணலாம். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பாக PPE எனப்படும் அரசியல்-தத்துவம்-பொருளாதாரம் கற்கைநெறியை கற்ற கொன்சவேற்றிவ் கட்சியின் தலைவர் டேவிட கம்ரனும், தொழிற்கட்சித் தலைவர் எட் மிலிபான்டும் ஒரே தரத்தில் இருந்தாலும் அவர்களது பின்புலம் வேறானவை. குடியேறிகளான யூத பெற்றோருக்கு பிறந்து அரச பாடசாலைகளில் கற்று முன்னுக்கு வந்தவர் எட் மிலிபான்ட். வசதிபடைத்த ஆங்கிலேய குடும்பத்தில் பிறந்து பிரபலமான தனியார் கல்லூரிகளில் கற்றவர் டேவிட் கம்ரன். அவர்களுக்கு இடையிலான இடைவெளியும் அவர்களது பொருளாதாரக் கொள்கைகளை பிரதிபலிப்பதாகவே அமைந்துள்ளன.

கருத்துக்களுக்கு -
facebook.com/orupaper @orupaper

## ஒரு பேப்பர்

கிடைக்குமிடங்கள்

| | |
|---|---|
| **New Malden** | |
| Ayngaran | 020 8949 6734 |
| Megaa Superstore | 020 8336 0061 |
| Vaaniyan | 020 8605 0434 |
| Murugan Kovil | 020 8942 4475 |
| Vaishna Superfoods | 020 8399 4488 |
| Stoneleigh Amman | 020 8393 8147 |
| **Tooting** | |
| Yhaal House | 020 8767 8585 |
| Rainbow Restaurant | 020 8640 4230 |
| Selvarajah Gold house | 020 8767 3795 |
| Niru Con.Store | 020 8672 3200 |
| Ayngaran | 020 8540 1500 |
| Suvai Aruvi | 020 8543 6266 |
| Adchaya | 020 8540 8192 |
| **Croydon** | |
| Best Foods | 020 8684 6269 |
| Haran Bros | 020 8686 2552 |
| Chennai dosa | 020 8665 9192 |
| Eelam Video | 020 8664 8351 |
| Spice Land | 020 8667 1700 |
| **Lewisham** | |
| Chandra | 020 8333 8680 |
| Eelam Shop | 020 8690 6545 |
| Katpagam | 020 8694 8810 |
| AJ Video | 020 8691 8888 |
| Sivan Kovil | 020 8318 9844 |
| KRS Supermarket | 020 8297 9432 |
| Best Food | 020 8692 9811 |
| **Eastham** | |
| Seelans | 020 8471 5733 |
| Sakthi Cash & Carry | 020 8394 4560 |
| Murugan Temple | 020 8478 8433 |
| Station Super Store | 020 8503 4711 |
| Best Food | 020 8552 9578 |
| Akilan Enterprise | 020 8548 0033 |
| Anjappar | 020 8552 1155 |
| **Ilford** | |
| Vinnayagar Kovil | 020 8911 8934 |
| Nathan | 020 8514 1744 |
| Angels | 020 8553 0490 |
| Sri store ltd | 020 8553 7737 |
| **Edmonton** | |
| New Kannan Stores | 020 8884 4979 |
| Sayas | 020 8805 9529 |
| Nagapoosani Temple | 020 8884 3333 |
| **Walthamstow** | |
| Vinayagar Kovil | 020 8527 3819 |
| Kumarans | 020 7609 1912 |
| Prabas | 020 8509 3322 |
| **Harrow** | |
| Tsk food & Wine | 020 7622 4258 |
| North Harrow C&C | 020 8863 6160 |
| Prabhas | 020 8866 0977 |
| South Harrow F&W | 020 8423 6321 |
| Best foods | 020 8423 9933 |
| Sambal Express | 020 8799 7171 |
| **Wembley** | |
| Malar Super Market | 020 8795 5797 |
| Ganapathy C & C | 020 8795 4627 |
| Best foods | 020 8900 0100 |
| Vahizan Disc | 020 8795 0648 |
| **Ealing** | |
| Amman kovil | 020 8810 0835 |
| **Greenford** | |
| Ambiha | 020 8813 0967 |
| **Coventry** | |
| Eellakanthan Temple | 02476663554 |
| **South hall** | |
| Thamilini C & C | 020 8606 9900 |
| Abi Fast Food | 0208 813 9494 |
| Palm Palace Restaurant | 020 8574 9209 |
| Spicy Palace Restaurant | 020 8574 4087 |
| Luxmys C & C | 020 8571 4599 |
| Tamilan C & C | 020 8561 8174 |
| Lady Margret | 020 8571 4434 |

PIONEERS IN CHETTINAD CUISINE WITH SINCE 1964

*Eatin' good in the neighbourhood*

HALAL INDIA

# ANJAPPAR

Chettinad A/C Restaurant

FOOD HYGIENE RATING
0 1 2 3 4 5

Quality and Service is our Motto

*High Class Indian Veg & Non Veg Restaurant*

## @ EAST HAM, LONDON



**233-235 High Street North, East Ham, London, E6 1JG**
**Email : anjapparlondon@hotmail.com**

## Tel : 0208 552 1155

**Opening Hours : 12.00 to 23.00**





**INDIA ◇ SINGAPORE ◇ MALAYSIA ◇ DUBAI ◇ ABUDHABI ◇ QATAR ◇ KUWAIT ◇ AUSTRALIA ◇ USA ◇ CANADA**

# PLEASE COLLECT DISCOUNT VOUCHER IN A SHOP

# தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணயக் கோரிக்கைக்கு ஆதரவு வழங்குகிறேன்



தொழிற்கட்சி வேட்பாளர் உமா குமரன்

"தமிழ் மக்களுக்கு நடைபெற்றுவரும் அநீதிகளுக்கும், 2009ம் ஆண்டில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மனிதவுரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள், இனப்படுகொலை போன்றவையும் விசாரிக்கப்பட்டு நீதி வழங்கப்பட வேண்டும் என இலங்கையில் உள்ள தமிழ் மக்களும், உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் நீண்ட காலமாகவே கோரி வருகிறார்கள். இவ்விடயத்தில் வெளிப்படைத்தன்மையுடனும் பக்கச்சார்பற்ற முறையிலும் பன்னாட்டு விசாரணை நடாத்தப்பட வேண்டும், இவ்விசாரணை ஐ.நா. அமைப்பினால் நடாத்தப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு நான் ஆதரவு வழங்குகிறேன். சாட்சிகளை வழங்க முன்வந்த ஊடகவியலாளர்களும் மற்றவர்களும், பல்வேறு நெருக்குவாரத்திற்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தமையும், அவர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டமையும் நாங்கள் அறிந்ததுதான். ஆகவே அதற்கு இடமளிக்க முடியாது. சாட்சிகளை வழங்க முன்வருபவர்களுக்கான பாதுகாப்பினை ஐ.நா. உறுதி செய்ய வேண்டும். சிறிலங்கா அரசின் உள்ளக விசாரணைகள் இவ்விடயத்தில் சரியான தீர்வினை பெற்றுதர மாட்டாது என்பதனையும் நாம் அறிவோம். அவ்வாறான விசாரணை ஒருபக்கச் சார்பானதாகவே அமையும் என்பதனால் அதனை ஏற்க முடியாது"

இவ்வாறு வரும் 7ம் திகதி நடைபெறவிருக்கும் பிரித்தானிய பாராளுமன்றத் தேர்தலில் ஹரோ கிழக்கு தொகுதியில் தொழிற்கட்சியின் சார்பில் போட்டியிடும் செல்வி. உமா குமரன் ஒரு பேப்பர்'க்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டார். பரப்புரை நடவடிக்கைகளில் மிகவும் தீவிரமாகச் செயற்பட்டுவரும் உமா, தனது நேரப்பற்றாக்குறைக்குமத்தியிலும் சமுகநிகழ்வுகளில் உற்சாகமாகக் கலந்துவருவதனை அவதானிக்க முடிகிறது. அதனிடையே ஒரு பேப்பர்'க்கு செவ்வி வழங்குமாறு கேட்டபோது எதுவித தயக்கமுமின்றி உடன்பட்டார். ஒரு பேப்பர்'ன் செய்தியாளர் ரெபிக்கா அருள்பிரகாசம் ஆங்கிலத்தில் இச்செவ்வியினை கண்டிருந்தார். இதன் இன்னொரு பகுதி 14ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

> **நான் ஒரு தமிழச்சி என்ற வகையில் பெருமை கொள்கிறேன். என்னுடைய பெற்றோர்கள் தங்களது தாயகத்தில் வாழ முடியவில்லை. அதனால் நான் இங்கு பிறந்திருந்தாலும், தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவு வழங்குகின்றேன்.**

கடந்த தேர்தலில் 3,000 அதிகப்படியான வாக்குகளைப்பெற்று ஹரோ கிழக்கு தொகுதியின் உறுப்பினராகத், தெரிவு செய்யப்பட்ட கொன்சவேர்ட்டிவ் கட்சியைச் சேர்ந்த பொப் பிளாக்மன் உடன் போட்டியில் இறங்கியிருக்கும் உமாவின் வெற்றி வாய்ப்பு அதிகரித்து வருவதாக மைய ஊடகங்களில் வெளிவரும் தகவல்களிலிருந்து அறிய முடிகிறது. ஆசிய இனத்தவர்களும், யூத இனத்தைச் சேர்ந்தவர்களும் அதிகமாக வாழும் இத்தொகுதியில் போட்டியிடும் முன்னணி வேட்பாளர்கள் இவ் இனங்களை பிரதிநிதித்துவப்படுபவர்களாக உள்ளதாக ஜூவிஸ் ரைம்ஸ் பத்திரிகையில் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. யூத இனத்தவரின் நலன்சார்ந்த செயற்பாடுகளில் பொப் பிளாக்மன் ஈடுபட்டு வந்துள்ளதாக அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இங்கு அகதி தஞ்சம் கோரும் தமிழர்களைத் திருப்பி அனுப்ப முனையும் நடவடிக்கைகள் பற்றிக் கேட்டபோது, அதற்குப் பதிலளித்த உமா, "இது நடைபெறக் கூடாது, அவ்வாறான முயற்சிகள் நிறுத்திவைக்கப்பட வேண்டும் என எதிர்பாரக்கிறேன். இதுவே தமிழ் மக்களுக்கான அனைத்துக்கட்சி பாராளுமன்றக் குழுவின் (APPGT) நிலைப்பாடும் ஆகும். சித்திரவதைகளை மேற்கொண்டவர்கள், குறிப்பாக அரசாங்கத்தின் உயர்மட்டத்திலுள்ளவர்கள் விசாரிக்கப்பட்டு அவர்களுக்கு தண்டனை வழங்கப்படும்வரை, தஞ்சம் கோருபவர்களை திருப்பி அனுப்பக்கூடாது" எனக் கூறினார்.

நீங்கள் தெரிவு செய்யப்பட்டால் தமிழ் மக்களுடைய பிரச்சனைகளுக்காக குரல் கொடுப்பீர்களா என்ற கேள்விக்கு பதிலளித்த உமா, "நான் தெரிவு செய்யப்பட்டால் அனைத்துகட்சி பாராளுமன்றக் குழுவில் இணைந்து கொள்வேன். தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக நீதி கோருவது கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டது. ஆகவே இதில் தொழிற்கட்சி, கொன்சவேற்றிவ் கட்சி என்று பார்க்கத் தேவையில்லை. அனைவரும் இணைந்து செயற்படவேண்டும்" என்றார்.

சிறிலங்காவின் தற்போதைய அரசாங்கம் பற்றிக் கருத்து வெளயிட்ட உமா, "தற்போதைய அரசாங்கம் எல்லாச் சமுகங்களும் வழங்கிய ஆதரவினால் தெரிவு செய்யப்பட்டது. மக்கள் மகிந்த இராஜபக்சவை அகற்றுவதற்கு விரும்பினார்கள் என்பதனை நீங்கள் அறிவீர்கள். ஆனால் புதிய அரசாங்கம் இராஜபக்சவையும், முன்னைய அரசாங்கத்தில் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டதாககுற்றஞ்சாட்டப்படுபவர்களையும் பாதுகாப்பதாக உறுதியளித்துள்ளது. இது தவறானது. புதிய அரசாங்கம், இவ்வாறான விடயங்களில் ஒத்துழைப்பு வழங்காமல், வடக்கு கிழக்கில் இராணுவமயமாக்கலை தொடர்ந்து வந்தால், அவர்கள் மீது குறிவைக்கப்பட்ட முறையில் பொருளாதாரத் தடைகளை கொண்டுவருவது அவசியமானது என நான் கருதுகிறேன்." எனக் குறிப்பிட்டார்.

ஐ.நா. மனிதவுரிமைச்சபையின் விசாரணை அறிக்கை வெளியிடுவதனைத் தாமதப்படுத்தியமை தொடர்பாகக் கேட்டபோது. "விசாரணை அறிக்கை மேலும் காலம் தாழ்த்தாது செப்ரெம்பரில் வெளியிடப்படவேண்டும் என்பதனை அழுத்திக் கூற விரும்புகிறேன். ஏற்கனவே, மார்ச் மாதத்தில் வெளியிடப்படவிருந்த இவ்வறிக்கை செப்ரெம்பருக்கு பிற்போடப்பட்டுள்ளது. டேவிட் கமரன் மார்ச் மாதத்தில் அறிக்கை வெளியிடப்படும் என முன்னர் கூறியிருந்தபோதிலும், அவரால் இவ்விடயத்தில் எதனையும் செய்ய முடியாது போய்விட்டது." என்றார்.

இறுதியாக, தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலை தொடர்பில் விசாரணை நடாத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை பற்றி உமாவிடம் கேட்டோம். "நான் இந்த விடயத்திற்கு ஆதரவு வழங்குகிறேன். போர்க்குற்றங்கள் பற்றி விசாரணை நடாத்தப்பட வேண்டும் என்று கேட்கும்போது, போர்குற்றம் பற்றியா அல்லது இனப்படுகொலை பற்றியா விசாரணை நடாத்தப்பட வேண்டும் என்ற கேள்வி அவசியமற்றது. ஆகவே விசாரணையின் போது போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் எனக் கண்டறியப்பட்டவர்களுக்கு, தண்டனை வழங்கப்பட வேண்டும். இனப்படுகொலை நடைபெற்றதா என்பதனை கண்டறியுமாறு ஐ.நா. வை நாம் வற்புறுத்த வேண்டும். அவ்வாறு விசாரணை நடாத்துவதா இல்லையா என்பது ஐ.நா. வை பொறுத்தது.

> **"விசாரணை அறிக்கை மேலும் காலம் தாழ்த்தாது செப்ரெம்பரில் வெளியிடப்படவேண்டும் என்பதனை அழுத்திக் கூற விரும்புகிறேன். ஏற்கனவே, மார்ச் மாதத்தில் வெளியிடப்படவிருந்த இவ்வறிக்கை செப்ரெம்பருக்கு பிற்போடப்பட்டுள்ளது. டேவிட் கமரன் மார்ச் மாதத்தில் அறிக்கை வெளியிடப்படும் என முன்னர் கூறியிருந்தபோதிலும், அவரால் இவ்விடயத்தில் எதனையும் செய்ய முடியாது போய்விட்டது."**

நான் ஒரு தமிழச்சி என்ற வகையில் பெருமை கொள்கிறேன். என்னுடைய பெற்றோர்கள் தங்களது தாயகத்தில் வாழ முடியவில்லை. அதனால் நான் இங்கு பிறந்திருந்தாலும், தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு எனது ஆதரவினை வழங்குகின்றேன்." என முடித்துக் கொண்டார்.

> **கடந்த தேர்தலில் 3,000 அதிகப்படியான வாக்குகளைப்பெற்று ஹரோ கிழக்கு தொகுதியின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட கொன்சவேர்ட்டிவ் கட்சியைச் சேர்ந்த பொப் பிளாக்மன் உடன் போட்டியில் இறங்கியிருக்கும் உமாவின் வெற்றி வாய்ப்புகள் அதிகரித்து வருவதாக மைய ஊடகங்களில் வெளிவரும் தகவல்களிலிருந்து அறிய முடிகிறது.**

பிரித்தானியாவில் மட்டுமல்ல முழு ஐரோப்பாவிலும் ஒரு தமிழர் பாராளுமன்ற உறுப்பினராவதற்கான சந்தர்ப்பம் உமா மூலமாகக் கிட்டியுள்ளது. அதனை ஹரோ கிழக்கு தொகுதியின் தமிழ் வாக்காளர்கள் கவனத்திற்கொண்டு வாக்களிப்பார்கள் என நம்புகிறோம்.

CARLTON LEISURE
Worldwide Travel & Tours
IATA

இலங்கைக்கு விமானச்சீட்டுக்கள் விற்பதில் முதல் இடத்தில் இருக்கும் பிரயாண முகவர்

price match guarantee

Hundreds of airlines and thousands of destinations worldwide

Book online@ www.carltonleisure.com

Summer Super Sale
HURRY! LIMITED SEATS
COLOMBO From £729
INCLUDING TAXES
Travel between 15th July and 5th September 2015
Book by 10th May

Fare includes taxes, subject to availability and terms & conditions apply.

RAYNERS LANE 020 8426 1266 | ILFORD 020 8554 4200 | EAST HAM 020 8552 6125 | TOOTING 020 8672 5757

# மே தின வரலாறு

**ஈழத்து நிலவன்**

மே தினம் எனப்படும் உலகத் தொழிலாளர் தினம் ஆண்டுதோறும் மே முதலாம் திகதி (மே1) உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுவதாகும்.

### ◆ தொழிலாளர் போராட்டம்

18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் – 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வேகமாக வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளிகள் பலரும் நாளொன்றுக்கு 12 முதல் 18 மணி நேரக் கட்டாய வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதற்கெதிரான குரல்களும் பல்வேறு நாடுகளில் ஆங்காங்கே எழத் துவங்கியது. இதில் குறிப்பிடத்தக்கது இங்கிலாந்தில் தோன்றிய சாசன இயக்கம் (chartists). சாசன இயக்கம் 6 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து தொடர் இயக்கங்களை நடத்தியது. அதில் குறிப்பிடத்தக்கது 10 மணி நேர வேலை கோரிக்கை.

### ◆ பிரான்ஸில் தொழிலாளர் இயக்கம்

1830களில் பிரான்சில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளிகள் தினமும் கட்டாயமாக 15 மணி நேரம் உழைக்க வேண்டி இருந்தனர். இதை எதிர்த்து அவர்கள் பெரும் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தினர். 1834இல் ஜனநாயகம் அல்லது மரணம் என்ற கோஷத்தை முன்வைத்து பெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இவையனைத்தும் தோல்வியில் முடிவடைந்தன.

### ◆ ஆஸ்திரேலியாவில் தொழிலாளர் இயக்கம்

ஆஸ்திரேலியாவில் மெல்பேர்னில் கட்டிடத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளிகள் உலகிலேயே முதன் முதலாக 8 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து 1856இல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, வெற்றியும் பெற்றனர். இது தொழிலாளி வர்க்க போராட்டத்தின் மைல் கல்லாக அமைந்தது.

### ◆ ரஷ்யாவில் மே தினம்

முதல் மே நாளின் போது உருசியாவில் ஒட்டப்பட்ட சுவரொட்டி சார் மன்னரின் ஆட்சியின் கீழ் ரஷ்யத் தொழிலாளிகள் பெரும் துன்பங்களுக்கு ஆளானார்கள். இங்கும் 1895 – 1899க்கு இடைப்பட்ட காலத்தில் நூற்றுக்கணக்கான வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன.

1896 ஏப்ரல் மாதத்தில் லெனின் மே தினத்திற்காக எழுதிய சிறு பிரசுரத்தில், ரஷ்யத் தொழிலாளிகளின் நிலைமை குறித்து விரிவாக அலசியதோடு, ரஷ்யத் தொழிலாளர்களின் பொருளாதார போராட்டம் – அரசியல் போராட்டமாக எழுச்சிக் கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்தினர். தொழிலாளிகளின் 8 மணி நேர வேலைக்கான போராட்டங்களே ரஷ்யப் புரட்சிக்கு வித்திட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### ◆ அமெரிக்காவில்..

அமெரிக்காவில் 1832இல் பொஸ்டனில் கப்பலில் பணியாற்றிய தச்சுத் தொழிலாளர்கள் 10 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்தனர்.

அதே போல், 1835இல் பிலடெல்பியாவிலும், பென்சில்வேனியாவிலும் இதே கோரிக்கையை முன்வைத்து இயக்கம் நடத்தப்பட்டது. பென்சில்வேனியாவில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களும், இரயில்வே தொழிலாளர்களும் குறைவான வேலை நேரத்தை வலியுறுத்தி 1877இல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள தொழிலாளர் இயக்கங்களை இணைத்து "அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பு" என்ற இயக்கம் உருவாக்கப்பட்டது. இவ்வியக்கம் 8 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து தொடர்ந்து இயக்கங்களை நடத்தியது. அத்தோடு மே 1, 1886 அன்று நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தது. இவ்வியக்கமே மே தினம் பிறப்பதற்கு காரணமாக அமைந்தது.

தொழில் நகரங்களான நியூயார்க், சிகாகோ, பிலடெல்பியா, மில்விக்கி, சின்சினாட்டி, பால்டிமோர் என அமெரிக்கா முழுவதும் 3,50,000 தொழிலாளர்கள் பங்கேற்ற மாபெரும் வேலை நிறுத்தம் துவங்கியது. இவ்வேலை நிறுத்தத்தில் 1200க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்கள் பங்கெடுத்துக் கொண்டனர்.

தொழிலாளர்களின் எழுச்சிமிக்க வேலை நிறுத்தத்தினால், அமெரிக்க பெரு நிறுவனங்கள் மூடப்பட்டன. இரயில் போக்குவரத்து நடைபெறவில்லை. வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற தொழிலாளர் ஊர்வலங்கள் அமெரிக்காவை உலுக்கியது. மிச்சிகனில் மட்டும் 40,000 தொழிலாளர்களும், சிக்காகோவில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.

### ◆ சிக்காகோ பேரெழுச்சி

மே 3, 1886 அன்று "மெக்கார்மிக் ஹார்வஸ்டிங் மெஷின் நிறுவனத்தின்" வாயிலில் 3000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அணி திரண்டு கண்டனக் கூட்டத்தை நடத்தினர். இங்கு இடம்பெற்ற கலவரத்தில் 4 தொழிலாளர்கள் காவற்துறையினரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாயினர். இச்சம்பவத்தை கண்டிக்கும் வகையில் ஹேமார்க்கெட் சதுக்கத்தில் மே 4 அன்று மாபெரும் கண்டன கூட்டம் ஒன்றை நடத்தினர் தொழிலாளர்கள்.

2500 தொழிலாளர்கள் கலந்து கொண்ட கண்டனக் கூட்டம் அமைதியான முறையில் நடைபெற்றது. இந்நேரத்தில் காவல்துறையினர் அனைவரையும் கலைந்து செல்லுமாறு கூறினர். இவ்வேளையில் திடீரென்று கூட்டத்தில் வெடிகுண்டு வீசப்பட்டதில் அந்த இடத்திலேயே ஒரு காவல்துறையினர் பலியானார். பின்னர் பொலீசார் கூட்டத்தினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தித் தொழிலாளரைத் தாக்கினர். அத்துடன் தொழிலாளர் தலைவர்களை கைது செய்து வழக்குத் தொடுத்தனர்.

இந்த வழக்கு ஜூன் 21, 1886 அன்று துவங்கியது. 7 பேருக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. இந்நிகழ்வு ஹேமார்க்கெட் படுகொலை என அழைக்கப்படுகிறது. இந்த நிகழ்வினை ஒட்டி அந்த ஹேமார்க்கெட் சதுக்கத்தில் நினைவுச் சின்னம் உருவாக்கப்பட்டுள்ளது.

### ◆ அமெரிக்காவின் கறுப்பு தினம்

நவம்பர் 11, 1887 அன்று தொழிலாளர் தலைவர்கள் ஆகஸ்ட் ஸ்பைஸ், ஆல்பேர்ட் பார்சன்ஸ், அடொல்ஃப் ஃபிஷர், ஜோர்ஜ் ஏங்கல் ஆகியோர் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர். நவம்பர் 13, 1887 அன்று நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில் அமெரிக்க தேசமே அணி திரண்டது. நாடு முழுவதும் 5 லட்சம் பேர் இவர்களது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டதோடு, அமெரிக்கா முழுவதும் கறுப்பு தினமாக அனுஷ்டிக்கப்பட்டது. அமெரிக்க தொழிலாளர்களின் 8 மணி நேர வேலைக்கான போராட்டமும், சிகாகோ தியாகிகளின் தியாகமும் தான் இன்றைக்கு மே தினமாக உழைப்பவர் தினமாக நம்முன்நிற்கிறது.

### ◆ அனைத்து நாடுகளிலும் மே தினம்

1889 ஜூலை 14 அன்று பாரீசில் சோசலிசத் தொழிலாளர்களின் 'சர்வதேச தொழிலாளர் பாராளுமன்றம்' கூடியது. 18 நாடுகளில் இருந்து 400 பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். பிரெட்ரிக் ஏங்கெல்ஸ் உட்படப் பலர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் கார்ல் மார்க்ஸ் வலியுறுத்திய 8 மணி நேர போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என்றும், சிக்காகோ சதியை இம்மாநாடு கடுமையாக கண்டித்ததோடு, 1890 மே 1 அன்று அனைத்துலக அளவில் தொழிலாளர்கள் இயக்கங்களை நடத்திட வேண்டும் என்றும் அறைகூவல் விடப்பட்டது.

இந்த அறைகூவலே மே முதல் நாளை, சர்வதேச தொழிலாளர் தினமாக, மே தினமாக அனுஷ்டிப்பதற்கு வழிவகுந்தது.









# என்ன நினைக்கிறது வடக்கு ?

சிறிலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்று நூறுநாட்கள் கழிந்துள்ள நிலையில், தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்த ஆட்சிமாற்றம் பயனைத் தந்திருக்கிறதா என அரசியல் அவதானிகளின் கருந்தறிந்து ஒரு செய்திக்கட்டுரையை கொழும்பு மிரர் இணைய தளத்தின் சிறப்புச் செய்தியாளர் ஜெரா வரைந்திருக்கிறார். அதிலிருந்து சில பகுதிகளை இங்கு பிரசுரிக்கிறோம். நன்றி. colombomirror.com

## இராஜபக்சவை வைத்துத் தான் எது சட்டத்தின் ஆட்சி, நல்லாட்சி என முடிவு செய்யப் போகின்றோமா?

- குமாரவடிவேல் குருபரன்

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்ட விரிவுரியாளரும், தற்போது லண்டன் பல்கலைக்கழக கல்லூரியில் சர்வதேச சட்டவியல் துறையில் ஆய்வு மாணவராகவும் உள்ள திரு. குமாரவடிவேல் குருபரன் வழங்கிய கருத்து.*

"நல்லாட்சியைக் கொண்டு வருவோம் என்று சொல்லி ஆட்சிக்கு வராத அரசாங்கங்களை இலங்கையில் விரல் விட்டு எண்ணலாம். ஆனால் ஆட்சிக்கு வந்தவுடன் ஆட்சியில் எப்படி தொடர்ந்து இருப்பது என்பது தான் மேலோங்கும். இம்முறையும் அதுவே நடந்திருக்கின்றது. பொதுவாக அனைத்து 'சனநாயக' நாடுகளிலும் நடக்கும் விடயம் இது. ஆனால் இலங்கையில் இதற்கொரு மேலதிகமான முக்கிய குணாம்சம் உள்ளது. தமிழர்கள் நலன் சார் விடயங்களில் நல்லாட்சி அமைக்க முடியாமைக்கும் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட முடியாமைக்கும் இனப்பிரச்சனையையும் போரையும் அதன் விளைவான அரசியல் சூழலையும் சாட்டுச் சொல்வதே அது.

கடந்த நூறு நாட்களில் அரசாங்கத்திற்கு இருந்த பிரதான இலக்கு பொதுத் தேர்தலில் மீண்டும் மகிந்த ராஜபக்ச ஆட்சிக்கு வந்து விடக் கூடாது என்பது மட்டுமே. தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் எந்தவொரு விடயத்திலும் அடிப்படை மாற்றங்கள் கொண்டு வரப்படாமைக்கு சொல்லாமல் சொல்லப்படும் காரணம் அப்படி செய்தால் மகிந்த ராஜபக்ச மீண்டும் ஆட்சிக்கு வந்து விடுவார் என்பதே. தமிழ் மக்கள் விடயத்தில் நீதியின் வழி செயற்படுவது சிங்கள மக்களின் வாக்குகளை இழப்பதற்கு சமனாகும் என்ற கணக்கு இந்த அரசாங்கத்தின் மனதிலும் உள்ளது. அதனால் தான் தமிழர் சார்ந்த பிரச்சனைகளில் மேலோட்டமாக சில நடவடிக்கைகளோடு மைத்திரி அரசாங்கம் சுருண்டுவிட்டது.

நூறு நாள் திட்டத்தில் சட்டத்தின் ஆட்சி தொடர்பில் சொல்லப்பட்டிருந்த சில விடயங்களில், இந்த ஆட்சி எப்படி நடந்து கொண்டுள்ளது என்பதைப் பார்ப்போம்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பில் வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருந்தன. பல்வேறு தேசிய நிறைவேற்றுச் சபைக் கூட்டங்களில் இவ்விடயம் பேசப்பட்டதாக திரு. மனோகணேசனும், திரு. சுமந்திரனும் சொல்லி வந்தனர். ஆனால் எத்தனை பேர் விடுதலை செயப்பட்டனர் ? சுதந்திர தினம் அன்று சிலர் விடுவிக்கப்படக் கூடும் என்று கூட்டமைப்புக்கு சொல்லப்பட்டாலும் அது நிறைவேறவில்லை (ஆனால் அது எமது தலைவர்கள் சுதந்திர தினத்தில் பங்கெடுக்கும் தீர்மானத்தைப் பாதிக்கவில்லை)

திருமதி. ஜெயக்குமாரி பாலேந்திரன் பிணையில் விடுதலை செய்யப்பட்டது மகிழ்ச்சியே. ஆனால் அவருக்கெதிரான வழக்கு முற்றாகக் கைவிடப்படவில்லை. சட்டத்துக்கு முரணாக ஒரு வருடத்திற்கு மேல் தடுத்து வைக்கப்பட்டதற்காக உண்மையில் அவருக்கும் விபூசிகாவுக்கும் அரசு நட்டஈடு வழங்க வேண்டும். செய்யப்படுமா என்பது சந்தேகமே. சட்டமா அதிபர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பிணை விண்ணப்பத்தை ஆட்சேபிப்பதில்லை என்ற பொதுவான கொள்கை முடிவை (பயங்கரவாத தடைச் சட்டத்தின் பிரிவு 7 (1) இன் கீழ்) எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எடுக்காமல் ஜெயகுமாரியை மட்டும் விடுவிக்க எடுத்த முடிவைப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வருகைக்கு முன் எடுக்கப்பட்ட ஓர் அரசியல் முடிவாகவே கருத வேண்டியுள்ளது. தொடர்ந்து அரசியல் கைதிகள் விடயத்தில் முன்னேற்றம் இல்லாதிருக்கின்றமை இதனையே காட்டுகின்றது. புனர்வாழ்வை ஏற்றுக் கொள்ள அரசியல் கைதிகளை இந்த அரசாங்கம் நிர்ப்பந்தம் செய்வதாக சிரேஸ்ட சட்டத்தரணிகள் குற்றம் சாட்டியுள்ளனர். பயங்கரவாதத் தடை சட்டம் இல்லாதொழிக்கப்படுவதே சுமூக நிலைக்குத் திரும்புவதற்கான உண்மையான குறியீடாக இருக்கும். ஆனால் அதைப் பற்றி பேசுவதற்குக் கூட அரசாங்கம் தயாரில்லை.

### சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டம்

சாட்சிகளைப் பாதுக்காக்கும் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளமையை இந்த அரசாங்கத்தின் சாதனையாகச் சொல்லுகின்றனர். சட்டப் புத்தகங்களில் இவ்விடயம் சேர்க்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதே. ஆனால் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டமையால் நடைமுறையில் என்ன பயன் ஏற்பட்டுள்ளது என்றே கேட்கத் தோன்றுகின்றது. சாட்சிகளைப் பாதுகாக்கும் பொறுப்பு காவல்துறையிடமே இருக்குமென்றால் காவல் துறையை நம்பி சாட்சி சொல்ல எத்தனை பேர் தயார் ? குற்றச்சாட்டுக் காவல் துறைக்கு எதிரானது எனின் யார் பாதுக்காப்பளிப்பது? தகவலறியும் உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட உள்ளதாக சொல்லப்படுகின்றது. கொண்டுவரப்பட்டாலும் உதாரணமாகக் காணமல் போனோரைக் கண்டறிய அச்சட்டம் உதவுமா என்றால் விடை இல்லை என்பதே ? தேசிய பாதுகாப்பு என்று காரணம் சொல்லி தகவல் வழங்க மறுக்கலாம். தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் அனைத்து மனித உரிமைகளும் (சட்டப் பிராகாரமும், சட்டத்திற்குப் புறம்பாகவும்) மீறப்பட்டமையை எமக்கு வரலாறு சொல்லுகின்றது. தகவலறியும் உரிமைக்கும் அதே கதி தான்.

நீதித் துறையின் சுயாதீனம் தொடர்பில் வாக்குறுதி அளிக்கப்பட்டது. அரச வலிமையைப் பாவித்து அன்று மொஹான் பீரிஸை பிரதம நீதியரசர் கதிரையில் மகிந்த ராஜபக்ச அமர்த்தினார். அதே அரச வலிமையை பாவித்து சிராணி பண்டாரநாயக்க மீண்டும் பிரதம நீதியரசராக்கினார்கள். சனாதிபதி சிறிசேன மொஹான் பீரிசின் நியமனம் ஆரம்பத்திலிருந்தே செல்லுபடி அற்றது என்று கடிதம் அனுப்பியமை சட்ட ரீதியில் சரியானது என வாதிட முடியும். எனினும் அதன் பின் மொஹான் பீரிஸ் இல்லாத நேரம் பார்த்து அவரின் கதிரையில் சிராணி பண்டாரநாயக்கவை இருத்தியமை நீதித்துறையின் சுயாதீனத்துக்கு வலுச் சேர்க்கும் நடவடிக்கை அல்ல என்றே கருதுகிறேன். அதனை உணர்ந்துதான் போலும் சிராணி பண்டாரநாயக்க ஒரே நாளில் பதவியைத் துறக்குமாறு கேட்கப்பட்டார். தமிழ்ப் பார்வையில் சிராணி பண்டாரநாயக்க பதவியில் இருந்து அகற்றப்பதுவதற்கு வெகு நீண்ட காலத்திற்கு முதலே நீதித்துறையின் சுயாதீனம் பறிபோய்விட்டது என்பதே உண்மை. தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற உயர்நீதிமன்றம் ஒத்துழைத்த போதிருந்து நீதித்துறை தமிழர் விடயங்களில் சுயாதீனமற்ற நிறுவனமாகவே இருந்து வந்துள்ளது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் காணிகளை விடுவிக்கும் திட்டத்திலும் எந்தக் கொள்கையும் கோட்பாடும் இருப்பதாகத் தெரியவில்லை. வலிகாமம் வடக்கில் குளறுபடிகளோடு செயப்பட்டுள்ள சில காணிகளின் விடுவிப்பு இவ்விடயம் தொடர்பில் இந்த அரசாங்கத்திடம் நீண்ட காலத் திட்டமில்லை என்பதையே காட்டுகின்றது. வேறு பல இடங்களில் இராணுவத்திற்கான காணி சுவீகரிப்பு தொடர்வதாக தகவல்கள் உள்ளன. காணி விடுவிப்பு தொடர்பில் பொதுவான காத்திரமான நிலைப்பாடு இல்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

### ராஜபக்ச அளவுகோல்

100 நாட்களை வைத்து இந்த அரசாங்கத்தை எடை போடக் கூடாது என்று சொல்பவர்கள் உண்டு. நீண்ட காலம் புரையோடிப் போன பிரச்னைகளுக்குத் தீர்வுகள் காலமெடுக்கும் என்று சமாதனப்படுத்தப்படுத்த முயற்சிக்கின்றனர். இதில் உண்மை உண்டு. ஆனால் மாற்றத்துக்கான ஆரம்ப அறிகுறிகளாவது தென்பட வேண்டும். ராஜபக்சவோடு ஒப்பிட்டால் இந்த அரசாங்கம் பரவாயில்லைத்தான். ஆனால் ராஜபக்சவை வைத்துத் தான் எது சட்டத்தின் ஆட்சி, நல்லாட்சி என முடிவு செய்யப் போகின்றோமா ?

## தமிழர்கள் பேரம் பேசும் சந்தர்ப்பத்தை தவறவிட்டுள்ளார்கள்

- நிலாந்தன்

*அரசியல் விமர்சகர் நிலாந்தன் வழங்கிய கருத்தினை இங்கு தருகிறோம்.*

"ஆட்சிமாற்றத்துக்குப் பின்னர் தமிழ் மக்களின் வெளிப்பேரம் பேசும் சக்தி வீழ்ச்சி கண்டுள்ளது. ஆட்சிமாற்றத்துக்கு முன்பு வரை தமிழ் மக்களின் பிரச்சினையை மஹிந்த ராஜபக்சவுக்கு எதிரான ஒரு துருப்பாக மேற்குநாடுகளும், இந்தியாவும் பயன்படுத்திவந்தன. ஆனால் ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் அந்தத் தேவை பெருமளவுக்கு குறைந்துவிட்டது. இப்போது மாற்றத்தைப் பலப்படுத்துவதற்கு மட்டுமே தமிழ் மக்கள் தேவைப்படுகின்றனர். அடுத்து வருகின்ற பொதுத் தேர்தல் வரையில் தமிழ் மக்களின் தேவையிருக்கின்றது. ஆக ஒரு கட்டம் வரை தமிழ் மக்களை அரவணைக்க வேண்டியுள்ளது. அதுகூட சிங்கள கடும்போக்காளர்களை சீண்டாத எல்லை வரையிலும் தான் தமிழ் மக்களை அரவணைக்கலாம்.

ஆட்சி மாற்றத்தின்போது தமிழ் மக்கள் தரப்பில் எந்தப் பேரமும் நடக்கவில்லை. பேரம் என்றில்லை, நிபந்தனையின்றியே ஆட்சிமாற்றத்துக்கு தமிழர்கள் வாக்களித்திருக்கிறார்கள். உண்மையில் இந்தச் சந்தர்ப்பம் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் இராஜதந்திரத் தவறு. இந்த இடத்தில் தமிழர்கள் ஜனநாயகத் திசையில் பேரம் பேசும் சந்தர்ப்பத்தை தவறவிட்டுள்ளார்கள்.

இப்போது மீளவும் ஒரு பேரத்துக்கான சந்தர்ப்பம் வருகின்றது. பொதுத் தேர்தலையொட்டி இந்தப் பேரம்பேசலை செய்யலாம். ஆனால் பேரம்பேசலை செய்கையில் மீளவும் ஒரு பிரச்சினை வரும், தமிழ் மக்களுடன் இணைந்தால் அது சிங்கள கடும்போக்காளர்களுக்கு அது வலுச்சேர்க்கும் என்று. மாற்றத்தை உறுதிப்படுத்தும் தரப்பினர் திரும்பத்திரும்ப ஒரு விடயத்தை வலியுறுத்துகின்றார்கள். பாதிக்கப்பட்ட தரப்பை காத்திருக்கக் கேட்கிறார்கள். பாதிக்கப்பட்ட தரப்பையே சுதாகரிக்கவும் கேட்கிறார்கள்.

(தொடர்ச்சி 26ம் பக்கம்)



✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Company Formation
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# பிளவடைந்த இங்கிலாந்தும் ஒன்றுபட்ட ஸ்கொட்லாந்தும்



**வேல் தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

இம்முறை அரசு அமைப்பதில் SNP எனப்படும் ஸ்கொட்லாந்துத் தேசியக் கட்சி காத்திரமான பங்கு அளிக்கப் போகின்றது. தீவிர வலதுசாரிகளின் வாக்குக்களை UKIP என்னும் ஐக்கிய இராச்சியச் சுதந்திரக் கட்சியிடம் இழந்த கொன்சர்வேர்டிவ் கட்சியினர் அதை மீளப் பெறுவதற்கு இங்கிலாந்துத் தேசியவாதத்தை கையில் எடுத்தனர். இங்கிலாந்துக்கு என்று ஒரு தனியான வருமானவரி விதிப்பு முறைமை உருவாக்கப்படும் என்றும் அது தொடர்பான தீர்மானங்களில் ஸ்கொட்லாந்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்காளிக்க முடியாமல் இருக்கும் என்று ஓர் அறிக்கையை வெளிவிட்டனர். இது ஸ்கொட்லாந்து மக்களை மேலும் ஸ்கொட்லாந்துத் தேசியக் கட்சியின் பக்கம் சாய வைத்துள்ளது.

### • அரச நிதிக் கொள்கைகளும் கட்சிகளும்

எல்லாக் கட்சிகளும் அரச செலவீனங்களைக் குறைத்து பாதீட்டு துண்டுவிழ்வை இல்லாமற் செய்ய வேண்டும் என்ற கொள்கையுடன் இருக்கின்றன. கொன்சர்வேட்டிவ் கட்சி 2018-ம் ஆண்டில் வரவையும் செலவையும் ஈடு செய்வோம் என்கின்றது. அதேவேளை வருமான வரி விதிப்பு, விற்பனைவரி (VAT), தேசியக் காப்புறுதி போன்றவற்றில் அதிகரிப்பு செய்யப் போவதில்லை என்கின்றது. தொழிற்கட்சி தான் வெற்றி பெற்றவுடன் வருவாய் அதிகமான பாதீடு உருவாக்கப்படும் என்கின்றது. ஊழியர்களின் குறைந்த அளவு ஊதியத்தை மணித்தியாலத்திற்கு எட்டுப் பவுண்களாக உயர்த்துவேன் என்கின்றது. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ள திட்டங்களை மேலதிகக் கடன் படாமல் தமது அரசு நிறைவேற்றும் என்கின்றது தொழிற்கட்சி. வருமான வரி ஏய்ப்புச் செய்வோரை கண்டுபிடிப்பதும், வருமானவரிச் சட்டங்களில் உள்ள ஓட்டைகளைப் பாவித்து வரித் தவிர்ப்புச் செய்வோரையும் வரசெலுத்தச் செய்வதும் தமது பணி என்கின்றது தொழிற்கட்சி. லிபரல் டெமொகிறட்டிக் கட்சி அல்லது தாராண்மைவாத மக்களாட்சிக் கட்சி வருமான வரி அதிகரிப்பும் செலவீனக் குறைப்பும் இணைத்துச் செயற்படுத்தப்படும் என்கின்றது. மேலும் அது வங்கித் துறையிடமிருந்து மேலதிகமாக ஒரு பில்லியன் கூட்டாண்மை வரி (corporation tax) மூலம் அறவிடப்படும். UKIP வெளிநாடுகளுக்குச் செய்யும் நிதி உதவிகளைக் குறைப்பதன் மூலம் எட்டு பில்லியன் பவுண்களைச் சேமிக்க முடியும் என்கின்றது. அத்துடன் அடிப்படை வரிவிழுக்காட்டை 35 ஆக உயர்த்த வேண்டும் என்கின்றது. மேலும் அது செல்வந்தர்களை அதிகம் பாதிக்கும் வாரிசுரிமை வரியை (inheritance tax) இல்லாமற் செய்ய வேண்டும் என்கின்றது. பசுமைக் கட்சி ஊழியர்களின் குறைந்த அளவு ஊதியத்தை 10 பவுண்களுக்கு உயர்த்த வேண்டும் என்கின்றது. குறைந்த வருமானம் உள்ளவர்கள் மீதான வரியைக் குறைக்க வேண்டும் என்கின்றது. ஸ்கொட்லாந்துத் தேசியக் கட்சி ஸ்கொட்லாந்தில் 1. ஒருஇலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு தொழிற்பயிற்சி வழங்க வேண்டும் 2. 450 மில்லிய பவுண் உதவி சிறுதொழில்களுக்கு வழங்கப்பட வேண்டும் போன்ற கொள்கைத் திட்டங்களை முன்வைக்கின்றது. ஆனால் அரச நிதி தொடர்பான நிபுணர்கள் அரச நிதி தொடர்பாக எல்லாக் கட்சிகளும் உண்மைக்கு மாறான கருத்துக்களை முன்வைக்கின்றன எனக் குற்றம் சாட்டுகின்றனர். கொன்சர்வேர்டிவ் கட்சி ஆட்சிக்கு வந்தால் பல சமூக நலக் கொடுப்பனவுகள் நிறுத்தப்படும் எனவும் கருதப்படுகின்றது. இது தொடர்பான அதன் இரகசியத் திட்டத்தை தாராண்மை வாதக் மக்களாட்சிக் கட்சி அம்பலப்படுத்தியுள்ளது.

### • கருத்துக் கணிப்பும் பந்தயங்களும்

தேர்தல் வரும் முன்னரே கருத்துக் கணிப்புக்கள் பரவலாக அடிபடத் தொடங்கிவிடும். கருத்துக் கணிப்புக்கள் நாளுக்கு நாள் வேறுபட்டுக்கொண்டே போகும். கருத்துக் கணிப்புக்களின் கருத்துக் கணிப்பு என ஒரு கருத்துக் கணிப்பு உண்டு. பிரித்தானியாவில் அரச குடும்பத்தில் இருந்து அடிமட்டக் குடிமகன் வரை பந்தயங்களில் அதிக விருப்பமுடையவர்கள். தொழிற்கட்சி பெரும்பான்மை வலுப் பெற்வதற்கான நிகழ்தகவு 33/1 என்றும் அதுவே பழமைவாதக் கட்சிக்கு 33/2 என்றும் ஒரு பந்தய நிறுவனம் சொல்கின்றது. ஆனால் அடுத்த தலைமை அமைச்சராக வரும் வாய்ப்பு எட் மிலிபாண்டுக்கே அதிகம் உள்ளது என்கின்றது ஒரு பந்தய நிறுவனம். இதற்குக் காரணம் ஸ்கொட்லாந்தில் அமோக வெற்றியீட்டப் போகும் ஸ்கொட்லாந்து தேசியக் கட்சி கொன்சர்வேர்ட்டிவ் கட்சியுடன் கூட்டுச் சேரும் வாய்பு மிக அரிது. ஆனால் தொழிற்கட்சியுடன் கூட்டுச் சேரும் வாய்ப்பு அதிகம். இதனால் யாருமே அறுதிப் பெரும்பான்மையில்லாத நிலையில் தொழிற்கட்சியும் ஸ்கொட்லாந்துத் தேசியக் கட்சியும் இணைந்து ஆட்சியைப் பிடிக்கும் வாய்ப்புக்கள் அதிகம் என பந்தய நிறுவனம் மதிப்பிட்டுள்ளது.

### • ஸ்கொட்லாந்தும் தொழிற்கட்சியும்

இம்முறை தொழிற்கட்சியின் கோட்டையாக நீண்ட காலமாக இருந்த ஸ்கொட்லாந்து முற்றாகத் தகர்ந்து போவதற்கான ஆபத்து உருவாகியுள்ளது. ஏப்ரல் 29-ம் திகதி வெளிவந்த கருத்துக் கணிப்புக்களின் படி தொழிற்கட்சி இம்முறை ஒரு தொகுதியில் கூட வெற்றி பெற வாய்ப்பில்லை. சென்ற ஆண்டு ஸ்கொட்லாந்து பிரிந்து செல்வதா என்பது பற்றிய கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பின் போது 'இல்லை' என்ற கருத்துக்கு ஆதரவாக தொழிற்கட்சியினரே கடுமையாக உழைத்தனர். இது பல ஸ்கொட்லாந்தியரை ஆத்திரப் படுத்தியுள்ளது. தொழிற்கட்சியின் ஸ்கொட்லாந்துக் கிளையின் தலைவர் ஜிம் மேர்ஃபியை கண்டதும் மக்கள் துரோகி எனச் சத்தமிடுகின்றனர். ஜோன் ஸ்மித், கோர்டன் பிரௌன், றொபின் ஹூக் டொனால்ட் டேவர் போன்ற அரசியல் புலமை மிக்கவர்களை தொழிற்கட்சிக்குக் கொடுத்த ஸ்கொட்லாந்தை தொழிற்கட்சி இழப்பது அவர்களைப் பொறுத்தவரை கவலைக்குரியது. தனிப்பட்ட ரீதியில் எட் மில்லிபாண்டை ஸ்கொட்லாந்தியர்களுக்குப் பிடிக்கவில்லை எனவும் கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. இங்கிலாந்தில் வாழும் மக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் தொழிற்கட்சியும் ஸ்கொட்லாந்துத் தேசியக் கட்சியும் இணைந்து ஆட்சி அமைப்பதை இட்டு அச்சமடைந்துள்ளனர். அப்படி ஓர் ஆட்சி அமையுமிடத்தில் ஸ்கொட்லாந்து தேசியக் கட்சி தனக்குத் தேவையானவற்றைச் சாதித்துக் கொள்ளும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

### • நிதிச் சந்தையும் தேர்தலும்

எப்போதும் உறுதியான அரசை விரும்பும் நிதிச் சந்தை குழப்பமான கூட்டணி அரசைப் பெரிதும் விரும்புவதில்லை. ரோனி பிளேயர் இடது பக்கத்தில் இருந்து மையத்தை நோக்கி இழுத்து வந்த தொழிற்கட்சியை எட் மிலிபாண்ட் மீண்டும் இடது பக்கம் இழுத்துச் செல்ல முயல்வதை நிதிச் சந்தை விரும்பவில்லை. ஊழியர்களின் குறைந்த அளவு ஊதியம் கண்டபடி அதிகரிக்கப்படுவதையும் நிதிச்சந்தை விரும்பவில்லை. டேவிட் கமரூனின் ஆட்சி உலகப் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பிரித்தானியாவின் பொருளாதாரத்தை திறம்பட நிர்வகித்ததாக நிதிச் சந்தை திருப்தியடைந்துள்ள வேளையில் கொன்சர்வேர்ட்டிவ் கட்சி அதை மக்கள் மத்தியில் தமது கட்சியின் செல்வாக்கை வளர்ப்பதை விட்டு தனிமனிதத் தாக்குதல் மூலம் தேர்தல் பரப்புரை செய்வதை யிட்டு அதிருப்தியடைந்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா விலகுவதையோ அல்லது கொன்சர்வேர்டிவ் கட்சியின் அது தொடர்பான கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பையோ நிதிச் சந்தை விரும்பவில்லை.

### • தேர்தல் முடிவுகள் எப்படி இருக்கும்?

UKIP கட்சியினதும் தாராண்மைவாதக் கட்சியினதும் தலைவர்கள் தோல்வியடைவார்கள் என நம்பப்படுகின்றது. கருத்துக் கணிப்புக்கள் இரு பெரும் கட்சிகளிடையே கடும் போட்டி நிலவுவதாகச் சொல்கின்றன. இதே மாதிரித்தான் 2014-ம் ஆண்டு நடந்த இந்தியத் தேர்தலின் போதும் அண்மையில் நடந்த நைஜீரியத் தேர்தலின் போதும் சொல்லப்பட்டன. ஆனால் தேர்தல் முடிவுகள் பிரமிக்க வைத்தன. கடைசி நேரப் பரப்புரைகள் பல மாறுதல்களைக் கொண்டுவரக்கூடியன. இங்கிலாந்தில் அப்படிச் செய்யக் கூடிய ஊடக வலு கொன்சர்வேர்டிவ் கட்சிக்கே அதிகம் உண்டு. அதற்கான முன்னெடுப்புக்கள் பலவற்றை இதை வாசிக்கும் போது அறிந்து கொள்வீர்கள். பிரித்தானியத் தேர்தல் முடிவும் பிரமிக்க வைக்கும். இலண்டன் நகரபிதா தேர்தல் களத்தில் இறங்கிப் பெரும் மாறுதல் செய்யக் கூடிய பரப்புரை செய்வார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் கொன்சர்வேர்டிவ் கட்சியின் வெற்றியிலும் பார்க்க தோல்வியில் அதிக நன்மை அடையக்கூடிய நிலையில் இருக்கின்றார். அவரது கட்சி தோல்வியடைந்தால் அவர் கட்சிக்குத் தலைமை தாங்கும் வாய்ப்பு உண்டு.

### • சின்னப்புத்திதனமான இங்கிலாந்து பிராந்தியவாதம்.

ஸ்கொட்லாந்து மக்கள் ஒன்று பட்டு ஒரே கட்சியைத் தேர்வு செய்யும் வேளையில் இங்கிலாந்து மக்கள் இரு பெரும் கட்சிகளிடையே குழம்பிப் போயுள்ளனர். ஸ்கொட்லாந்துத் தேசியக் கட்சியின் பிராந்தியவாதத்தை ஈடு செய்ய கொன்சர்வேர்ட்டிவ் கட்சி இங்கிலாந்துப் பிராந்தியவாதத்தை கையில் எடுத்தது. ஸ்கொட்லாந்துப் பிராந்தியவாதம் ஸ்கொட்லாந்து தேசியக் கட்சிக்குக் கொடுக்கவிருக்கும் வெற்றி வேல்ஸ் மக்களையும் பிராந்தியவாதத்துக்கு அங்குள்ள கட்சிகள் இட்டுச் செல்லலாம். அதே வேளை வட இங்கிலாந்து இலண்டனுடன் ஒப்பிடுகையில் மோசமாகப் பின் தங்கியுள்ளது. அதை ஒட்டியும் ஒரு பிராந்தியவாதம் உருவாகலாம். இங்கிலாந்தில் வாழும் ஆங்கிலேயர்களில் மிகப் பெரும்பான்மையானோர் தொழிற்கட்சியும் ஸ்கொட்லாந்துத் தேசியக் கட்சியும் இணைந்து நடாத்தும் அரசை ஒட்டி அதிக கவலையடைந்துள்ளனர் என அறிந்த கொன்சர்வேர்டிவ் கட்சியின் ஊதுகுழலான சன் நாளேடு இந்த அச்சத்தில் இருந்து விடுபட கொன்சர்வேர்டிவ் கட்சிக்கு வாக்களிக்குமாறு கூறியுள்ளது. பிரித்தானியத் தேசிய ஒன்றியத்திற்கு அதிகமான ஆபத்து ஸ்கொட்லாந்தில் இருந்து வருவதிலும் பார்க்க இங்கிலாந்தில் இருந்து அதிகம் வருகின்றது என பிரபல ஆங்கிலப் பத்தி எழுத்தாளரான ஜன்ன் கணேஷ் ஃபினான்சியல் ரைம்ஸ் பத்திரிகையில் எழுதியுள்ளார். இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து ஆகிய தேசங்களின் ஒன்றியம் எனப் பெருமைப் பட்டுக் கொண்ட பெரிய பிரித்தானிய தன் சிறுமைத் தனத்தால் சிறிய இங்கிலாந்தாக மாறுமா?


கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?
தனிநபரோ... வியாபாரமோ...
▶ கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
▶ Bankruptcyயை தழுவ அல்லது தவிர்க்க...
▶ வியாபாரத்தை பலப்படுத்த...
▶ TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

BBK PARTNERSHIP
R3
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்
உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்
www.bbkca.com
Email: admin@bbkca.com



Chartered Accountants and Business Recovery Professionals
- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Bookkeeping

BARNET-LONDON 020 8216 2520 MR. ANANDAN
CROYDON 020 8150 9950 MR. SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN
SOUTHGATE 020 8886 9589 MR. KANDEE

# The Folly of Eelam



By D. Sivaram

[In the 10th death anniversary D. Sivaram, the well-known political analyst and a senior editor for TamilNet, we reproduce an article written by him for North Eastern Herald in 2003]

Today it is clear beyond all reasonable doubt that India and the US-UK-Japan Bloc are trying to influence and manage Sri Lanka's peace process to promote and consolidate their respective strategic and economic interests.

I have been ceaselessly drumming this point wherever I got a hearing here and abroad.

But the obfuscation of the political reality caused among Tamils is so great that it is well-nigh impossible as the days pass by to cut through the thick layers of rhetoric and rigmarole surrounding the so called peace process and to show our people the stark truth.

This is not to say that the peace talks should be called off completely. On the contrary, if it suits the long term strategic and economic interests of the Tamils then the LTTE should stick to it for all its worth. But it should do so if and only if it can make an intense endeavour to shake the people out of their current political stupor.

Those who say that we should keep quiet — not rock the boat by clamouring about the true motives of the US-UK-Japan Bloc — while certain objectives are being achieved through the peace process, should remember the developments which led up to the Indo Lanka Treaty and the arrival of the Indian army.

From 1983 to 86, it was taboo among Tamils to propagate the truth that India was exploiting their cause to gain a foothold in Sri Lanka. The few who dared to speak about India's hegemonistic designs were admonished not to be too rash lest we provoke Delhi's ire and cause a disruption in the weapons handouts by the RAW.

> America might be mighty but that cannot detract an iota from our right to live with honour, dignity and freedom in the land of our forebears. It cannot for a moment make us give up an inch of our lands to help the US Bloc or India stabilise the Sri Lankan state.

Nevertheless, a very small group of intellectuals both within and on the fringes of the armed Tamil Eelam movement did their best to awaken the people from their awesomely naive Indophile proclivities.

Their ideas were placed before the Tamil public at the time chiefly in two works — the book-let, Vankam Thantha Paadam and the street play, Maayamaan. But these were mere enlightening drops in the ocean of obfuscation about India and its role in the negotiations between the armed Tamil movement and the Sri Lankan government between 1983 and 87.

Tamil political pundits who were dealing with India would tell us: "Hush, don't rock the boat. Speak not too loudly, lest someone record your utterances and take the cassette to Delhi and get us into trouble".

There were also those who acknowledged that Delhi had ulterior intentions which would eventually be detrimental to the Tamil cause but felt that it was prudent to keep silent about the matter with a view to enhancing the armed movement's power by availing of India's 'hospitality' and weapons handouts.

These men realised the truth from their experience and associations in India but were scared that any concerted attempt to educate the Tamil masses might alarm and antagonise Delhi into denying us political status and the valuable rear base in Tamil Nadu.

Another pet theme of theirs was that we may eventually be able to coax or convince Delhi to politically recognise the armed Eelam groups as comprising a legitimate national liberation movement.

That Indira Gandhi had recently recognised the Palestinian Liberation Organisation (PLO) as a national liberation movement fuelled false hope among some Eelam political pundits. They believed that if we behaved ourselves with India then we may get the same legitimacy and political status and this, according to their skewed wisdom, would inexorably speed up the realisation of Eelam.

Their argument sounded so credible at the time that the obvious and logically simple truth was completely overlooked.

Even as it provided military training and arms supplies to the Tamil liberation groups Delhi continued to state quite un-equivocally and consistently that it stands by the unity and territorial integrity of Sri Lanka.

Therefore it was clear as crystal that the arms and support given by Delhi for the Tamil movement were not to achieve Eelam but for bringing pressure on the Sri Lankan state in order to make it toe the line.

> LTTE officials too should stop making pedestrian, boringly predictable utterances on public forums and, instead, make every endeavour to stir the people's reason, intellectual curiosity, their sense of community, their imagination and their intellectual fervour.

Even a brief perusal of the strategic issues, which were at stake in the Indian Ocean at the time in easily and widely accessible documents would have made it amply clear what India was really after in Sri Lanka.

Yet the Eelam pundits who were pontificating from their offices in Madras saw not the larger than life writing on the wall — that the whole Eelam episode between 1983 and 87 was choreographed by Delhi to achieve a permanent strategic foothold in Sri Lanka by treaty.

But this simple, logically obvious truth was never visible even faintly to the vast mass of the Tamils in the northeast because their perceptions were totally obfuscated by the ups and downs, the sideshows, personalities, the high lights, the break downs, the communiqués, letters, revelations, analysis, photo spreads, etc., etc., of the 'process to settle the conflict and meet the legitimate political aspirations of the Tamils' mediated by India.

In the end what did the foolish Eelam pundits get in return for the Tamil cause by keeping the lid on the truth about India's real intentions, by preventing the mobilisation of our people politically against external aggression on our soil? Nothing.

They got no political recognition or legitimacy for the Tamil liberation movement. The training and arms were useless.

And above all, when faced with the dire prospect of foreign aggression we saw the people of Jaffna welcoming the Indian army warmly, as their true saviours. At Suthumalai, to the eternal shame of the Tamil cause, they urged the LTTE leader to hand over his organisation's weapons to the Indian army. Also, the Tamil community was deeply divided then. There was no national political or defence plan to face the situation.

The price the Tamil liberation movement as a whole had to pay for not educating the people about the truth of India's intentions was high.

At this juncture, even a doddering dullard would find the déjà vu inescapable. The Tamil nation cannot afford to make the same mistake again.

The current peace process is moving along a path trodden before by India and Sri Lanka. The obfuscators, both professional and casual, in the media, academia and the diplomatic corps are active again with greater vigour and sophistication, aided in no small measure by the continuing folly of Eelam punditry, inducing widespread political dullness and apathy among the Tamil masses. We see the carrots of political recognition and assistance being dangled before the LTTE for the sole purpose of stabilising the Sri Lankan state in a manner that would make it sufficiently pliable to accommodate the strategic and economic interests of the US-UK-Japan Bloc.


We already hear fools (and there are many of the educated variety among Tamils) declaring that we should swallow our-pride and yield to the dictates of the world's sole super power that the US would bomb the Vanni back to the Stone Age if the LTTE does not toe the line.

Any foreign force can have its way in a country only if its people are divided, politically obfuscated and are hopelessly sunk in political stupor. The creeping intellectual/political barrenness in the northeast should be stopped without further delay.

LTTE officials too should stop making pedestrian, boringly predictable utterances on public forums and, instead, make every endeavour to stir the people's reason, intellectual curiosity, their sense of community, their imagination and their intellectual fervour. This is the only way forward to decisively break the vicious circle of political obfuscation. America might be mighty but that cannot detract an iota from our right to live with honour, dignity and freedom in the land of our forebears. It cannot for a moment make us give up an inch of our lands to help the US Bloc or India stabilise the Sri Lankan state.



Mass Global Shipping
Reliable, Dependable and honourable







Special Offer
Freight + Wooden Box
£65.00



உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதுகாப்பாகவும் துரிதமாகவும்
குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.

CITY WAREHOUSE
Located at: BIG YELLOW STORAGE, Wandsworth
Mass Global Shipping - 100 Garratt Lane, London. SE18 4DJ
T: 020 8864 4244 M: 07940108177

Special Offer Within London Collection £10/-*
* Within London Postcode Only
Door 2 Door Island-wide within Colombo £40*

VEHICLES SHIPMENT
From £725 all inclusive*
Conditions Apply
No Hidden Charges
No 3rd Party Agents
Fully Gated Yard Facility 24/7 CCTV Monitoring

No. 58, THE ARCHES, HARROW, HA2 8AA
Tel : 0208 422 1232, 0208 864 4244
Opening Times - Monday to Friday 9am - 6pm | Saturday 9am-6pm
E-Mail: info@massshipping.com Web : www.massshipping.com
4 Collection Points : Harrow, Watford, Knightsbridge, Croydon

# Uma is proud to be representing Tamils



*An exclusive interview with Uma Kumaran, Labour candidate for Harrow East.*

**By Rebecca Arulpiragasm**

It has always been important to stand tall and to stand proud of being a Tamil, and one young woman who is doing a splendid job of this is none other than Oru Paper's very own Uma Kumaran. Uma is the Labour party's parliamentary candidate for Harrow East, and yes, we can proudly call her family as Uma was a regular columnist for *Oru Paper* and was part of our team who made the paper what it is today.

Uma's parents fled the civil war in Sri Lanka decades ago and sought refuge here in the UK, and now their daughter is creating a storm in politics and is making every Tamil proud! Uma told us how her Appappa (her paternal grandfather) was one of the first ever Trade Unionist in Jaffna and toured the country standing up for worker's rights and her Ammappa (maternal grandfather) worked for the benefits department helping under privileged Tamil people get back on their feet, so it is no surprise that Uma has a natural knack for politics. During her school days Uma would huddle in a corner with her class mates planning how to oppose unwelcomed rules enforced by her teachers, and her interest in standing up against social injustices was further fuelled by the fact her parents were always open about what they faced in Sri Lanka. Having studied Politics at Queen Mary's University, Uma says if she could re-live her educational life with the aide of hindsight she would have chosen to study Law as although politics is an interesting subject it was not necessary to become a politician, a career line she did not intend to take. Uma originally hoped to become a a journalist/newsreader.

Uma's love for the Labour party not only comes from the fact her parents application to claim refuge in the UK was supported by Labour MP, Jeremy Corbyn, but also due to her social values for a free NHS, tackling social injustices, having a fairer society that allows those who aren't born in to money the chance to succeed are mirrored by the Labour party's values. She has been a member of the Labour party for some ten years now and is currently Labour's choice in the fight for the Harrow East seat. Uma has been working tirelessly in this role for as long as I have been following her on social media and her support is forever growing. She has the full support of the Tamil community in her constituency. Uma is proud to be representing her fellow Tamils in her fight to make history and become the first Tamil elected not only in the British parliament but also in the whole of Europe. She is keen to be the Tamil voice in the UK parliament bringing the plight of her fellow Tamils to the forefront and believes that being a second generation Tamil who was born and bred in this country with a solid knowledge of her background and heritage will be of advantage in doingso. She is also big on representing matters that affect the whole community and the common good of all irrespective of race or class such as matters of free medical care (NHS), cost of living, better education in her borough and lowering tuition fees. All values she believes are shared by and affects the Tamil community.

When questioned on her plans for Harrow East if and when she wins the seat Uma spoke of her local hospital, Northwick Park, and of its struggles in the recent years to meet its demands. Uma volunteers for the hospitals radio station and since the A&E department saved her father's life after he suffered a heart attack she has been an avid supporter for better services, more nurses and doctors, reducing A&E waiting times (the longest in the country) and to make the hospital more efficient. She says making all these a reality would be her first task if successful on the 7th May.

She is keen to be the Tamil voice in the UK parliament bringing the plight of her fellow Tamils to the forefront and believes that being a second generation Tamil who was born and bred in this country with a solid knowledge of her background and heritage will be of advantage in doing so. She is also big on representing matters

Uma's advice for those who are considering a life in politics is to believe in oneself. She admits politics is a complicated game and self-belief is of utmost importance. She also says you don't necessarily need to have studied politics to enter in to its domain so to follow whatever career path you chose and to always stand up for what you believe and for those you represent.

..she would want to eliminate poverty, increase the minimum wage, lower fuel bills and university tuition fees..

We threw in a jovial question and asked Uma if like in the Tamil blockbuster movie Mudhalvan she had the opportunity to run the country for a day what she would hope to achieve in that time. Uma replied by firstly admitting that Mudhalvan is one of her favourite films, with some of her favourite songs, and if like in the movie she was given the same opportunity (leaving aside the feasibility of the scenario) she would want to eliminate poverty, increase the minimum wage, lower fuel bills and university tuition fees and her biggest aim would be to put pressure on the UN to publish their report on the war crimes investigation in Sri Lanka by their deadline in September this year.

I'm sure you will all join me in wishing Uma all the very best for the 7th May and for the future.

**ABRA WHOLESALE LTD**
LONDON'S LEADING WHOLESALER & EXPORTER
5 PICKETTS LOCK LANE
EDMONTON, LONDON N9 0AS
proud to be a member of LANDMARK WHOLESALE, LONDON CHAMBER
ALCOHOL - TOBACCO - GROCERY - CONFECTIONERY - SOFT DRINKS - TOILETRIES - HOUSEHOLD

**VACANCIES**
- Accounts Assistant -
Package – Up to £17,000 PA + Bonus
Location: North London

**Role and responsibilities**
Invoice coding /matching /batching/ posting /
ensure swift payment of invoices
Assist in preparation of the financial statement
Plan, organise and manage your own workload
Provide support to the financial team members
Any other duties that may be require appropriate to this role

To Apply: Email your CV with detail of your current package to sales@abrawholesales.co.uk
accounts@abrawholesales.co.uk

UWPS
UNIQUE WEDDING PARTY SERVICES
திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்த நாள் நிகழ்வுகள் மற்றும் அனைத்து தேவைகளுக்கும்
Inspire your guests by creating an event that's truly unique, Passion, Experience & Creativity, we have the perfect formula in UWPS where the occasion always exceeds your expectations



Wedding Decoration | Ballons Decoration | Stage Arrangement
Banqueting Hall Decoration | Videography & Photography
Catering | LCD Backdrop Hire | Fresh Flower Bouquet
Gifts | Party Planning | Chair Cover | Marquee
Table & Chair Hire | Table Cloth Hire | Centre Piece Arrangement
Tel: 0203 086 9915 Mob: 0795 083 3135 – 0787 201 5560
London, UK, Europe
www.uwps.co.uk | uwps@hotmail.co.uk

# KIDS பேப்பர்

## Where Do The Children Grow

When you see a smiling face
Their happiness all over
the place
Singing, laughing, cries of glee,
Come they say, Play with me
The slide, the swing,
the monkey bars.
Look at them close to see
who they are.
Lots of races, Ready, Set, Go.
This is how the children grow.
If you watch them everyday
You'll see they learn as they play
They'll do what they see,
and say what they hear.
You're their teacher throughout
the years.
Their ideas and thoughts in
their eyes shine.
Imagination is a glimpse of
their mind
When you're not looking,
don't you know
This is when the children grow.
Watch them as they learn to walk
Listen to them when they talk
Keep them safe, away from harm
Wrap them gently within
your arms
Teach them to share and
how to take turns.
Set good examples from
which they will learn.
At home, at school,
wherever they go
This is where the children grow.

## My Brother

My Little Brother is cheeky and
makes lots of mischief!
Yes! He is amazing.
Bouncing up and down he plays
on the trampoline.
Rolling round and round he rides
on his bicycle.
Orange is his favourite colour and
fruit.
Tyrannosaurus-rex is his favourite
dinosaur toy
He is very playful and emotional
Elephants are his favourite animal
Rock pop is his favourite
television show.


*By: Vigaashan Asokan*

## Colouring - 241




## Issue 240 Winner
**Priyangen Mangalaruban**

## Level 1 Sudoku




Draw out the shapes below. Place the shape in a square so that no row, column or group of any 4 squares has the same shape more than once.



## Sea Word Search

SEA
FISH
WHALE
WATER
WET
SEAL
BLUE

| | | | | |
|---|---|---|---|---|
| W | F | B | S | W |
| E | I | R | E | A |
| T | S | E | A | T |
| W | H | A | L | E |
| B | L | U | E | R |



## Dear Kids...

Colour and Send in a picture to ORU PAPER. you could be the lucky winner Gift from Orupaper Team.

நீங்களும் ஒரு பேப்பர் வழங்கும் பரிசினைப் பெற படத்திற்கு அழகுற வர்ணம் தீட்டி எங்களுக்கு அனுப்பி வையுங்கள்..

**Visit our Web: www.facebook.com/ orupaper**



**Vithoosha Chandra**




**M. Priyangen**

## Riddle

Q1: What has a foot but no legs?
Q2: Poor people have it. Rich people need it. If you eat it you die. What is it?
Q3: What comes down but never goes up?
Q4: I'm tall when I'm young and I'm short when I'm old. What am I?
Q5: If I drink, I die. If I eat, I am fine. What am I?
Q6: What goes up when rain comes down?



Answers
A1: A snail
A2: Nothing
A3: Rain
A4: A candle
A5: A fire!
A6: An umbrella!



## நாள் ஒரு குறள்

*செய்தக்க அல்ல செயக்கெடும்
செய்தக்க செய்யாமை யானும்
கெடும்.*

விளக்கம்: செய்ய வேண்டாதன செய்வதாலும் கேடு வரும்? செய்ய வேண்டியனவற்றைச் செய்யாவிட்டாலும் கேடு வரும்.

Taking upon acts that do not benefit one, or failing to perform bounden duties both lead to ruin.



## Word of the week

**giggle**

Giggle is another word for laugh.
"Stop giggling, it's not that funny."
"I can't stop. It's so funny!"



## My Bed is a Boat

My bed is like a little boat;
Nurse helps me in when
I embark;
She girds me in my sailor's
coat
And starts me in the dark.
At night I go on board and
say
Good-night to all my
friends on shore;
I shut my eyes and sail away
And see and hear no more.
And sometimes things to bed
I take,
As prudent sailors
have to do;
Perhaps a slice of
wedding-cake,
Perhaps a toy or two.
All night across the
dark we steer;
But when the day
returns at last,
Safe in my room
beside the pier,
I find my vessel fast.


CELEBRATIONS by
SHREE VENILALS UK
SPECIAL OFFER
EXCLUSIVE
SAREES
DESIGNER
LEHNGA
SUITS
DESIGNER
PAVADAI & HALF
SAREES
DESIGNER
SALWAR
SUITS
DESIGNER
COSTUME
JEWELLERY
EXCLUSIVE
KANCHEEPURAM
SAREES
மங்கையர்
மனங்கவர்
ஆடைகளின்
சங்கமம்!
ராசியான
கூறைப்புடவைகள்
அனைத்து
வகையான
சாறிகள் மற்றும்
சிறுவர்களுக்கான
உடைகளைத் தரமாக
பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்
Introducing For The First Time..
Shree Venilal's
115/117 Ealing Road
Wembley.
HA0 4BP
Tel: 020 8903 3144
Celebrations
by Shree Venilal's
99/103 Ealing Road
Wembley, HA0 4BP
Tel: 020 8795 3051
Warehouse by
Shree Venilal's & Celebrations
95/97 Ealing Road
First Floor
Behind Bus Stop / On Top Of Jalaram Sweets Wembley.
விலைச் சலுகைகளைத் தவற விடாதீர்கள் இன்றே நாடுங்கள்!!!
உங்கள் அன்புக்கும், ஆதரவுக்கும் நன்றிகள்...



மறைமுக கட்டணம் இல்லை
SRI LANKA SPECIALISTS
தனி நபர் கவனிப்பு • அதிகப்படியான போதி • இடமாற்றம்
* இலவசபெட்டிகள்
* பொறுப்பேற்றல் / விநியோகித்தல்
* தொழில்முறை ஆலோசனை
£ 15.00 limited offer
20'
24'
15'
T/CHEST
வீட்டுக்கு வீடு சேவை
இலங்கையில் உள்ள உடன்பாட்டாளர் பெறுபவர் வீட்டிற்கே விநியோகம் செய்வோம்
from £ 685*
கப்பல் மூலம் வாகனம் அனுப்புதல்
* பணியக உதவிகள்
* கடன் கடிதங்கள்
* சுமை அகற்றல் /
* ஏற்றல் இறக்கல்
இயந்திரங்கள் • உபகரணங்கள் • உதிரிப்பாகங்கள்
* விசேட விலைகள்
* தகர்த்தல் மற்றும் தயாரித்தல்
from £ 1.90*
வாணிப சரக்கு நிலையம்
* LCL & FCL * சுங்கம் ஏற்றுமதி
* ஆவணங்கள் / செயலாக்கம்
* இறுதி வரை கையாளுதல் மற்றும் சேவைகள்
* conditions apply
ஏமாறாதீர்கள் !! முதலில் எம்மோடு உரையாடுங்கள் !!
எமது சேவைகள்
* களஞ்சியம் * காப்புறுதி
* திறந்த வெளி இட வசதி
* பொறுப்பேற்றல் மற்றும் விநியோகம்
AGILOGIX
connecting the world
CALL – 02033711272
OFFICE
46, Mead Court, Buck Lane, Kingsbury
London NW9 0XN
Tel: 020 33711272 Mob: 079 13846625
email: sales@agologix.co.uk
WAREHOUSE & YARD
Units 1 & 2, Renwick Industrial Estate, Renwick Road
Barking IG11 0SD
Tel: 020 33711272 Mob: 079 13846625
email: sales@agologix.co.uk
முகவர்களாக இணைந்து சிறந்த வருமானம் ஈட்டுங்கள் (லண்டனுக்கு வெளியில்)

# சையெனத் திரியேல்

உண்ணும் உணவுகளில் எது நல்லது எது கெட்டது என்று தெரியாது போனாலும் அதை ஜீரணிக்கச் செய்து இரத்தமாக மாற்றமடையும் போது நல் இரத்தமெனவும் கெட்ட இரத்தமெனவும் பிரித்து கெட்ட இரத்தத்தை வெளியேற்றும் தகமை உடலுக்கு இயற்கையாகக் கிடைத்த வரப்பிரசாதம். இந்த உடலை வைத்து வாழும் மனிதர்களால், ஒழுக்கத்தில் எது கெட்டது எது நல்லதென பிரித்தாழ முடியாமல் அருவருக்கத்தக்க செயல்களில் அனேகர் ஈடுபடுவதினால் இவர்களை சமூகத்தில் சையென விலக்கி விடுவது இன்று காணப்படும் யதார்த்த நிலைமை அதனால் தான் ஔவையார் சமூகத்தின் நன்மை கருதி, சையெனத் திரியேல் என வேண்டுகோள் விடுக்கிறார்.

எடுத்ததுக்கெல்லாம் பொய் கூறும் பழக்கம் சிலரிடையே இருப்பதை அவதானிக்கலாம். இப்பழக்கம், பிறப்பில் ஒருவருக்கும் வந்துவிடுவதில்லை. அவரவர் வாழும் சூழ்நிலை தான் இப்பழக்கத்தை தூண்டுகிறது. ஒரு பொய் சொல்லும் பழக்கம் வந்துவிட்டாலே அதை மறைக்க பல பொய்கள் கூற வேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிடும். இறுதியில் உண்மை வெளிவரும்போது பொய் பேசியவர் வெறுக்கப்படுவர். அந்த வெறுப்பிலிருந்து மீள வேண்டுமாயின், பொய் பேசி? மற்றவர் இகழும்படியாக சீயெனத் திரியேல் என்பதே ஔவையாரின் அறிவுரை யாகும்.

பிறருக்குச் சொந்தமான பொருளை, அவர்களுக்குத் தெரியாமல் களவெடுப்பது, நாகரிகமடைந்த நாடுகளில் நடப்பதை செய்திகள் கூறுகின்றன. இத்தகைய களவுகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதால், உண்மையான குற்றவாளிகள் சிக்குவது மிகச் சிரமமாக இருந்தாலும், பல நாள் கள்ளன் ஒரு நாள் அகப்படுவான் என்பது போல அவர்கள் அறியாது விட்டுச் செல்லும் தடயங்கள் மூலம் நிச்சயமாகக் கண்டு பிடிக்கப்படுவர். இதன்பின்னர், இவர்களை சமூகம் சீயென வெறுக்கும் அத்தகைய இழிவு நிலைக்குப் போகாமல் சையெனத் திரியேல் என்பது ஔவையாரின் புத்திமதியாகும். ஏமாறும் மக்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். தொழில் சம்பந்தமாகவும், பொருள் சம்பந்தமாகவும் ஏமாறும் சம்பவங்கள் மலிந்துவிட்ட இக்காலத்தில், அப்பாவி மக்கள் அநியாயமாக ஏமாற்றப்பட்டு பொருளைத் தொலைத்தும் மரணங்களை எதிர்கொள்ளும் ஆபத்தான பயணங்களை மேற்கொள்வதும், சமீபகாலத்தில் அப்பாவி மக்கள் அநியாயமாக ஏமாற்றப்பட்டு பொருளை தொலைத்தும் மரணங்களை எதிர் கொள்ளும் ஆபத்தான பயணங்களை மேற்கொள்வதும் சமீப காலத்தில் கிடைக்கும் நம்பகரமான செய்திகள்.

ஒரு சில ஏமாற்றுக்காரர்களால் விடுக்கப்படும் ஆசை வார்த்தைகளை நம்பி அநியாயமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்தால் சீ இவர்களும் ஒரு மனிதர்களா என்று வெறுக்கத்தான் செய்கிறது. இவர்கள் திருந்தவே மாட்டார்களா என்ற நப்பாசையுடன் ஔவையார் விடுக்கும் வேண்டுகோள் தான் சையெனத் திரியேல்.

# கைத்தொலைபேசிக்கு கை கொடுக்கும் காகித ஒலிவாங்கி

சுவாரஸ்யமாக பேச்சுக்கு நடுவே, கைத்தொலைபேசியில் தொடர்பு துண்டிக்கப்படும் போது சம்பந்தப்பட்டவர்களின் சம்பாஷணை மட்டும் நின்றுவிடுவதில்லை. அவர்களின் மனோநிலையே மாறிவிடுவதாக ஆராய்ச்சியாளர்கள் அவதானித்துள்ளனர். இதற்கு மாற்றுவழி கிடையாதா என ஆராய்ந்த போது, தபால் முத்திரையின் அளவில் காகிதத் தாள்களில் தயாரிக்கப்பட்ட சிறிய ஒலிவாங்கி, கைத்தொலைபேசிக்கு தேவைப்படும் மின்சக்தியை மீட்பதற்கு பயன்படுத்த முடியுமென அறிமுகப்படுத்தியுள்ளனர்.

அட்லாண்டாவை தளமாகக் கொண்ட, ஜோர்ஜிய தொழில்நுட்பக் கல்லூரியின் ஆய்வாளர் சொங் வாங் என்பவரும் அவரது சகாக்களும் மேற்கொண்ட ஆராய்ச்சியில் மெல்லிய சிறிய காகிதத் தாளில் தபால் முத்திரையின் அளவில் மிகச்சிறிய ஒலிவாங்கியை தயாரித்துள்ளனர். அதிசயமான இந்தத் தொழில்நுட்பத்தினால், ஒரு சதுர மீற்றர் அளவில் உபயோகப்படுத்தும் காகிதத் தாளில் 121 மில்லி வாட்ஸ் மின்சக்தியைப் பெற முடியுமெனவும், காகிதத்தின் அளவு அதிகரிப்புக்கேற்றவாறு மின்சக்தி அதிகரிக்குமெனவும் கூறப்படுகிறது.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

சாதாரணமாக ஒரு பலூனை தலைமுடியில் உராய்ந்தால், அதனால் உண்டாகும் அதிர்வில் கிளம்பும் ஒலி அலைகள் போன்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள இச்சிறிய ஒலிவாங்கி கைத்தொலைபேசிகளுக்கு மிக் சக்தியை தற்காலிகமாக மீட்கும் என்பதில் சந்தேகமில்லையென ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

காகிதத்தின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட ஒலிவாங்கி, கழிவுகளை வீணாக்காமல் பயனுள்ள சக்தியாக மீட்பதற்கு அடிகோலியுள்ளதாக வாங் கூறுகின்றார். இலவசமாகக் கிடைக்கப் போகும் மின்சக்தியை எவர்தான் வேண்டாமென்று சொல்வார்கள். சுற்றுச் சூழல் மாசுபடாமலும் வீசப்படும் கழிவுகளை வீணாக்காமலும், காகித ஒலிவாங்கியின் கண்டுபிடிப்பு, தொழில்நுட்பத் துறையில் கிடைத்த அரிய பரிசாகும்.

# குடிநீரும் குடாநாடும்

யாழ்.குடாநாட்டில் கிளம்பியிருக்கும் குடிநீர்ப் பிரச்சினை அரசியலாக மாறி வருவதை அவதானிக்க முடிகிறது. இந்தப் பிரச்சினையை அரசியலாக்க வேண்டாமென வடமாகாண முதலமைச்சர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தாலும் அதனை அரசியல் இலாபம் கருதுபவர்களிடமிருந்து பிரித்துவிட முடியாது என்பது தான் உண்மை. யாழ்.குடாநாட்டின் மத்திய பகுதியாகக் கருதப்படும் சுன்னாகம் பகுதியில், கிணறுகளில் கசிந்ததாகக் காணப்பட்ட கழிவுப் பொருட்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டபோதும், அதன் தெளிவான முடிவுகள் கிடைக்கப் பெறவில்லை என்பதே இதுவரை கிடைத்த செய்தி.

எது எப்படியோ, அந்தப் பகுதியில் வாழும் மக்கள் குடிநீர்ப்பிரச்சினையால் அவதிப்படுவது அறிந்ததே. இப்பகுதி மக்கள் மட்டுமல்ல, யாழ்.குடாநாட்டில் ஏனைய பகுதிகளில் வாழும் மக்களும் இன்னும் 50 வருடங்களில் குடிநீர்ப் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியிருக்குமென நோர்வேயைச் சேர்ந்த ஆய்வாளர் எச்சரித்துள்ளதை இப்பொழுது ஞாபகப்படுத்தலாம்.

இயற்கையின் வரப்பிரசாதத்தால் யாழ்.குடாநாட்டுக்குத் தேவையான குடிநீர், நிலத்துக் கடியில் காணப்படும் சுண்ணாம்பு படிவங்களில் சேகரித்து வைக்கப்பட்டு கிணறுகளில் கிடைக்கும் நீர் ஊற்றுக்கள் மூலம் கிடைப்பது தெரிந்ததே. இந்த வளம் அதிக பாவனையால் நாளுக்கு நாள் வற்றிக் கொண்டு போவதால் இக்கிணறுகளில் உவர் நீர் கலப்பது பரிசோதனைகளில் கண்டறியப்பட்ட தகவல்கள்.

எனவே, வருங்காலத்தில் ஏதோ ஒரு கட்டத்தில் குடாநாட்டு மக்கள் குடிநீருக்காக மாற்று வழிகளைத் தேடவேண்டிய அவசியம் உண்டு. இதன் அடிப்படையில் தான் நன்னீர் திட்டங்களும், இரணைமடுக் குளத்திலிருந்து குடிநீர் விநியோகத் திட்டமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களை நிறைவேற்ற எதிர்ப்புகளும் இல்லாமல் இல்லை. ஆளுக்காள் அறிக்கைகள் விடுவதினாலும், அரச இயந்திரங்களுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தியும், போராட்டங்கள் நடத்தினாலும், குடாநாட்டு மக்களின் குடிநீர்ப் பிரச்சினை தீர வேண்டுமாயின், நடைமுறையில் சாத்தியப்படக் கூடிய நல்வழிகளை நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும் என்பதே யாழ். ஒளிபரப்பின் மக்கள் மன்ற நிகழ்ச்சியில் பங்குபற்றிய பிரமுகர்களின் செய்தியாக இருந்ததாக அறிகிறோம். நிலத்தின் அடிக்குள் செல்லும் மழைநீரை, சேகரித்து வைக்கும் குளங்கள், துரவுகள், தூர்ந்துள்ளதால், அவற்றை புனருத்தானம் செய்ய அரச இயந்திரங்களை நம்பி இராமல், சமூகப் பணிகள் மூலம் செயல்படுத்த யாழ்.மக்கள் முன்வர வேண்டுமென்பதே தணியாத தாகம்.


THE MORTGAGE ORGANISATION


AUTHORISED BY THE FINANCIAL CONDUCT AUTHORITY

RESIDENTIAL MORTGAGES & COMMERCIAL MORTGAGES

Contact:
David Eva
OR
Ernest Sri
258- High Street North
Manor Park, London E12 6SB
Tel: 020 8475 0755
Fax: 020 8470 4755
Mob: 07803 600 543

Commercial Loans
- Petrol Stations, Social Clubs
- Hotels, Restaurants &
- Takeaways
- Convenience Shops
- Pharmacies, Care Homes,
- Optician, Dentist
- Children Nurseries

Residential Mortgages
- Re-Mortgages
- Buy to Let
- Bridging Loans
- Right to Buy
- Help to Buy




Loans can be arranged for leasehold and freehold businesses

Arrangements are made to meet senior business manager from leading banks in our premisesTHE MORTGAGE ORGANISATION

How will a 'YES' make you feel ?

YOUR HOME MAY BE REPOSSESSED IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON YOUR MORTGAGE

# வடதுருவத்தில் ஒரு பனிப்போர்




**வேல் தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

பூமியின் வட பகுதியில் அறுபத்தி ஆறரை டிகிரி அட்ச ரேகை வரையுள்ள வட்டப் பகுதியானது ஆர்க்டிக் வளையம் என்று அழைக்கப்படுகிறது. ஆர்க்டிக் வளையம் என்னும் இந்தக் கற்பனைக் கோட்டுக்கு வடக்கே இருக்கும் 1.1 மில்லியன் சதுரமைல் பிரதேசம் ஆர்க்டிக் கண்டம் எனப்படும். உதவாத பனிப்பாறைகளைக் கொண்ட பிராந்தியம் என பல ஆண்டுகளாக கருதப்பட்டு வந்த ஆர்க்டிக் கண்டம் தற்போது உலகின் முக்கியத்துவம் வாய்ந்த பிராந்தியங்களில் ஒன்றாக கருதப்படுகின்றது.

### ◆ முன்னை நட்ட கொடி

1909-ம் ஆண்டு ஆர்க்டிக் கண்டத்துக்கு முதலில் சென்ற அமெரிக்கரான ரொபேர்ட் பியரி வடதுருவம் எனப்படும் பூமியின் வட முனையில் அமெரிக்கக் கொடியை நாட்டி இந்தப் பிராந்தியம் அமெரிக்காவினுடையது எனப் பிரகடனப்படுத்தினார். தற்போது நோர்டிக் நாடுகள் என அழைக்கபடும் டென்மார், பின்லாந்து, ஐஸ்லாந்து, நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகளும் இரசியாவும், கனடாவும் ஐக்கிய அமெரிக்காவும் இந்த ஆர்க்டிக்கண்டத்தில் ஆதிக்கம் செய்யப் போட்டி போடுகின்றன.

### ◆ ஆடாத ஆர்க்டிக் சபை

ஆர்க்டிக் கண்டம் தொடர்பாக ஒரு காத்திரமான உடன்படிக்கை ஏதும் செய்யப்படவில்லை. டென்மார், பின்லாந்து, ஐஸ்லாந்து, நோர்வே, சுவீடன் ஆர்க்டிக் சபை என ஒன்றை நிறுவியுள்ளன. இவை ஆர்க்டிக்கின் சூழல் பாதுகாப்பு தொடர்பாகவும் அங்கு சிக்குப்பட்டவர்களை மீட்பது தொடர்பாகவும் உடன்பாட்டுக்கு வந்துள்ளன. இந்தச் சபை ஒரு அதிகாரமற்ற சபையாகும். ஆர்க்டிக் கண்டத்தின் மீதான உரிமைக்கு என ஒரு பன்னாட்டுச் சட்டமோ அல்லது உடன்படிக்கையோ இல்லை. இந்த ஆண்டில் இருந்து இரண்டு ஆண்டுகளுக்கு ஆர்க்டிக் சபை அமெரிக்காவின் தலைமையில் கீழ் இயங்கவிருக்கின்றது. உக்ரேனின் கிறிமியாவை இரசியா தன்னுடன் இணைத்ததைத் தொடர்ந்து ஆர்க்டிக் சபையின் மற்றநாடுகள் இரசியாவுடன் கடுமையாக முரண்படுகின்றன.

### ◆ இரசிய அமெரிக்கப் போட்டி

ஐக்கிய நாடுகள் சபையின் கடற்சட்டத்திற்கான உடன்படிக்கையின்படி ஆர்க்டிக் கண்டத்துடன் எல்லையைக் கொண்டுள்ள நாடுகளுக்கு 200 கடல்மைல்கள் தூரம் வரை பொருளாதார உரிமம் உண்டு எனச் சொல்லாம். அதன் கடற்படுக்கைக்கும் எந்த நாடும் உரிமை கொண்டாட முடியாது. அது ஐக்கிய நாடுகளின் கடற்படுக்கைச் சட்டத்திற்கான உடன்படிக்கையின் படி உலக மக்களுக்கு சொந்தமானது. இதனால் ஆர்க்டிக் கண்டத்தின் கடற்படுக்கை ஐக்கிய நாடுகள் சபையின் கடற்படுக்கை அதிகார சபைக்கு சொந்தமானதாகின்றது. 2007-ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2-ம் திகதி ஆர்க்டிக்கா 2007 என்னும் பெயரில் இரசியா ஆர்க்டிக் கடற்படுக்கைகு சிறு நீர்மூழ்கிக்கப்பல்களை அனுப்பி அதன் இயந்திரக் கரங்கள் மூலம் கடற்படுக்கையில் தனது கொடியை நாட்டி அங்கிருந்து மணலையும் நீரையும் ஆய்வுகளுக்காக அள்ளிக் கொண்டது. ஆய்வில் கலந்து கொண்ட நிபுணர் ஆதர் சிலிங்கரோவ் ஆர்க்டிக் கண்டம் என்றும் இரசியாவிற்கு சொந்தமானது என்றார். இதைத் தொடர்ந்து அமெரிக்கா தனது Coast Guard icebreaker, the USCGC Healy என்னும் கப்பலை ஆர்க்டிக் கண்டத்திற்கு அனுப்பியது.

### ◆ எல்லாமே எண்ணெய்க்குத்தான்.

ஆர்க்டிக்கண்டத்தில் ஆதிக்கம் செலுத்த பல நாடுகளும் முயல்வதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று அங்கு இருக்கும் பெருமளவு எரிபொருள் வளம். இரண்டாவது அங்கு பனிப்பாறைகள் தொடர்ந்து உருகிக் கொண்டிருப்பதால் அதனூடாக கப்பற் போக்கு வரத்துச் செய்ய வாய்ப்புண்டு. இதனால் வட அமெரிக்கா, வட ஐரோப்பா, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளிடையான வர்த்தகம் இலகுவாகவும் மலிவாகவும் நடக்க வாய்ப்புண்டு. ஆர்க்டிக் கண்டத்தினூடாக ஐந்து வேறு வேறு கடற்பாதைகள் இனம் காணப்பட்டுள்ளன. உலகின் கைத்தொழில் உற்பத்தியில் 80 விழுக்காடு உலகின் வட பிராந்தியத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றது. மேலும் ஆர்க்டிக்கில் பெரும் கடலுணவுகளும் கனிம வளங்களும் இருக்கின்றன. ஆனால் ஆர்க்டிக்கில் எண்ணெய் அகழ்வு செய்வது செலவு மிகுந்தது. எரிபொருள் விலை வீழ்ச்சியடையும் நிலையில் அங்கு எண்ணெய் அகழ்வது இலாபகரமானது அல்ல. ஆனால் காலப்போக்கில் எரிபொருள் விலை அதிகரிக்கும் போது அங்குள்ள எரிபொருள் மிகவும் தேவையானதாக மாறும். அத்துடன் சூழல் வெப்பமடைவதால் பனிப்பாறைகள் உருக எரிபொருள் அகழ்வது மலிவானதாக மாறலாம். உலகின் பாவனைக்கு உட்படுத்தப்படாத எண்ணெய் வள இருப்பின் 13 விழுக்காடும், எரிவாயு இருப்பின் 30 விழுக்காடும் ஆர்க்டிக் கண்டத்தில் இருப்பதாக நம்பப்படுகின்றது. யூரேனியம், இரும்பு, செப்பு, நிக்கல் ஆகிய உலோகங்களும் ஆர்க்டிக்கில் இருக்கின்றன.

### ◆ ஆளில்லாக் கண்டத்தில் ஆளில்லாப் போர்விமானங்கள்.

2015-ம் ஆண்டு மார்ச் மாதம் இரசியா 80,000 படையினரையும், 220 போர் விமானங்களையும் 41 கப்பல்களையும் 15 நீர் மூழ்கிக் கப்பல்களையும் கொண்டு ஒரு பாரிய போர் ஒத்திகையை ஆர்க்டிக் பிராந்தியத்தில் செய்தது. 2018-ம் ஆண்டளவில் ஆர்க்டிக் கண்டத்தில் ஒரு தன்னிறைவான படைத்தளம் ஒன்றை அமைக்கும் திட்டம் இரசியாவிடம் உண்டு. நோர்வேயும் "Operation Cold Response" என்னும் குறியீட்டுப் பெயருடன் பல படைத்துறைப் பயிற்சிகளில் நேட்டோப் படைகளுடன் இணைந்து செய்து வருகின்றது. இரசியாவை ஒட்டிய ஆர்க்டிக் கண்டத்தில் உள்ள எரிபொருள் வளங்களை பெறுவதற்கு அது ஆண்டு தோறும் 100 பில்லியன் பெறுமதியான முதலீடுகளைச் செய்ய வேண்டும். அமெரிக்காவின் செய்மதிப்படங்களில் இருந்து இரசியா தனது ஓர்லன் - 10 என்னும் உத்திசார் ஆளில்லாப் போர்விமானங்களை ஆர்க்டிக் கண்டத்தில் நிறுத்தியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கனடாவும் தனது ஆளில்லாப் போர் விமானங்களை ஆர்க்டிக் கண்டத்தில் பறப்புகளில் ஈடுபடுத்தியுள்ளது. அமெரிக்காவின் பி-52 போர் விமானங்கள் 2015 ஏப்ரல் முற்பகுதியில் ஆர்க்டிக் கண்டத்தில் பறக்க வைத்தது. இது பயிற்சி நோக்கங்களுக்காக என வெளியில் சொல்லப்பட்டாலும் உண்மையான காரணம் இரசியாவிற்கு சவால் விடுவதாகும். ஆர்க்டிக் கண்டத்திற்குப் போட்டி போடும் எட்டு நாடுகளில் இரசியாவைத் தவிர மற்றவை நேட்டோ படைத்துறைக் கூட்டமைப்பிலுள்ள நாடுகளாகும்.

### ◆ அமெரிக்காவிற்கு விலைபோன அலஸ்க்கா

ஐக்கிய அமெரிக்காவின் ஆர்க்டிக் கண்டத்தின் மீதான உரிமை கோரல் அதற்குச் சொந்தமான அலாஸ்க்கா நிலப்பரப்பிலிருந்து உருவானது. இரசியாவிற்குச் சொந்தமாக இருந்த அலாஸ்க்கா என்னும் வடதுருவப் பிரதேசத்தை அமெரிக்கா ஐம்பது ஏக்கர் ஒரு டொலர் என்ற விலைப்படி 1867-ம் ஆண்டு வாங்கியது. சுமார் ஒரு நூற்றாண்டுக்கு மேல் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த அலாஸ்க்காவைப் பிரித்தானியப் பேரரசு ஆக்கிரமிக்கலாம் என்ற அச்சத்தில் இரசியா அமெரிக்காவிற்கு மொத்தம் 7.2 மில்லியன் டொலருக்கு விற்பனை செய்தது. ஆனால் அலாஸ்க்கா அமெரிக்காவிற்கு ஒரு பொருளாதார ரீதியில் இலாபமளிக்கக் கூடிய ஒன்றாக இதுவரை இருந்ததில்லை. இரசியாவுடன் அமெரிக்கா எல்லையைக் கொண்டுள்ளது என்றால் அது அலாஸ்க்காபிரதேசத்தில்தான். ஆனால் அலாஸ்க்காவிலும் எரிபொருள் வளம் உண்டு. கிறிமியாவை இரசியா தன்னுடன் இணைத்ததன் பின்னர் இரசியாமீது அமெரிக்கா கொண்டுவந்த பொருளாதாரத் தடையால் இரசியர்கள் மத்தியில் அமெரிக்காவிற்கு எதிரான குரோதம் வளரத் தொடங்கியது. 'கிறிமியா எங்களுடையது. அலாஸ்க்கா அடுத்தது' என்ற குரல் இரசியாவில் ஒலிக்கத் தொடங்கியது. அலாஸ்க்காவை மீளக் கையளிக்கும் கோரிக்கை 37,000 பேர்களால் கையொப்பம் இடப்பட்டு வெள்ளை மாளிகைக்கு அனுப்பப்பட்டது. 'கிறிமியா எங்களுடையது. அலஸ்க்கா அடுத்தது' என்ற பதாகையுடன் பென்குவின் பறவைகள் பல ஊர்வலம் போவது போல ஒரு படம் கணனியில் இரசியர்களால் உருவாக்கப்பட்டு பரவ விடப்பட்டது. ஆனால் கிறிமியாவை இணைத்ததன் மூலம் ஒரு பெரும் வரலாற்றுத் தவறைச் சீர் செய்த விளடிமீர் புட்டீன் அடுத்த வரலாற்றுத் தவறான அலாஸ்கா விற்பனையையும் சீர் செய்ய வேண்டும் என பல இரசியர்கள் கருதுகிறார்கள் அலாஸ்க்காவின் முப்பது இரசிய மரபுவழிக் கிறிஸ்தவ தேவாலயங்கள் உள்ளன. அலாஸ்க்காவின் ஸ்புரூஸ் தீவு இரசியத் திருச் சபைக்குச் சொந்தமானது என்றும் அதை விற்கவோ அல்லது வாங்கவோ யாராலும் முடியாது என்றும் ஒரு இரசிய சரித்திர அறிஞர் வாதிடுகின்றார். இரசியாவின் மிக் - 31, ரியூ- 95 ஆகிய போர் விமானங்கள் அலாஸ்க்காவை ஒட்டிய வான் பரப்பில் பறப்பது அண்மைக்காலங்களாக அதிகரித்து வருகின்றது.

### ◆ சீனாவா கொக்கா

சீனாவும் ஆர்க்டிக் கண்டத்தில் அதிக அக்கறை காட்டி வருகின்றது. ஆர்க்டிக் சபையில் 2007-ம் ஆண்டில் இருந்து ஒரு பார்வையாளராக இருக்கின்றது. 2013-ம் ஆண்டு ஐஸ்லாந்துடன் சீனா ஒரு வர்த்தக உடன்படிக்கையை செய்து கொண்டு. ஐஸ்லாந்தின் வடபகுதியில் உள்ள ஆர்க்டிக் பிராந்தியத்தில் பனி உடைக்கும் கப்பல்களைச் சேவையில் ஈடுபடுத்தியது. அத்துடன் நோர்வேயின் Spitsbergen தீவில் ஒரு ஆய்வு மையத்தையும் உருவாக்கியுள்ளது. தரைவழிப் பட்டுப்பாதை கடல்வழிப்பட்டுப் பாதை என தனது கொள்வனவுகளுக்கும் விநியோகங்களிற்குமான பாதையில் அதிக அக்கறை காட்டும் சீனாவிற்கு ஐரோப்பாவிற்கும் வட அமெரிக்காவிற்கும் குறுகிய ஒரு தூர வழி மிகவும் கவர்ச்சிகரமானதாகும். ஆர்க்டிக்கின் ஊடான பாதையின் நீளம் தற்போது பாவிக்கும் பாதையிலும் பார்க்க 30 விழுக்காடு குறைவானதாகும். ஆர்க்டிக் பிராந்திய ஆய்வுகளிற்காக சீனா அறுபது மில்லியன் டொலர்கள் செலவு செய்கின்றது. இது அமெரிக்கா செய்யும் செலவீனத்திலும் பார்க்க அதிகமானதாகும்.

இந்தியா, சிங்கப்பூர், தென் கொரியா, இந்தியா ஆகிய நாடுகளும் கூட ஆர்க்டிக் கண்டத்தில் அகழ்வு செய்வதற்கும் கடற்பயண உரிமத்திலும் அக்கறை காட்டுகின்றன. ஆனால் இரசியா மற்ற நாடுகளிலும் பார்க்க ஆர்க்டிக் கண்டத்தில் முன்னணியில் இருக்கின்றது. அது அங்கு ஏற்கனவே எரிபொருள் அகழ்வைத் தொடங்கி விட்டது.



# ஆவணப்பட வெளியீடு



தவில் சக்கரவர்த்தி 'லய ஞான குபேர பூபதி' வி.தெட்சணா மூர்த்தி அவர்களின் ஆவணப்பட வெளியீட்டு விழா கடந்த வாரம் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்களையே நீங்கள் மேலே காண்கிறீர்கள்

# நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**MAY 18 MONDAY**

**முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வுகள்**

முள்ளிவாய்க்கால் இன அழிப்பின் ஆறாவது ஆண்டு நினைவேந்தல் கவனயீர்ப்புப் பேரணி மற்றும் பொதுக்கூட்ட நிகழ்வுகள்.

நேரம்: மதியம் 2.00 மணி - பேரணி ஆரம்பம்
மாலை 5.00 மணி - பேரணி நிறைவு

இடம்: பேரணி ஆரம்பம் - Whitehall Place by Northumberland Avenue (WC2N 5AE)
பேரணி நிறைவு - Richmond Terrance (SW1A 2AT)

தொடர்புகளுக்கு : பிரித்தானிய தமிழர் பேரவை

**MAY 15 FRIDAY**

**குமுதினிப் படுகொலை - நினைவு நாள் நிகழ்வுகள்**

சிங்களப்படைகளால் கோரமாகக் நிகழ்த்தப்பட்ட குமுதினிப்படகு படுகொலையின் 30வது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள்.

நேரம்: காலை 11.00 மணி முதல்

இடம்: 02, Salisbury Road, Manor Park, Eastham, London, E12 6AB

**JUNE 20 SATURDAY**

**TRIPURA DIVINE FEMININE**

Vani Fine Arts Presents, Tripura Divine Feminine - Bharathanatyam Concert by Bala devi Chandrashekar

நேரம்: மாலை 06.00 மணி முதல்

இடம்: Bhavan Centre, 4A Castletown Road West Kensington, London, W14 9HE

தொடர்புகளுக்கு : 020 7386 0924

நடந்த நிகழ்வுகள் மற்றும் நடக்க இருக்கும் நிகழ்வுகளை பிரசுரிப்பதற்கு தொடர்பு கொள்ளுங்கள்

Email: info@orupaper.com


Trico Freight UK Ltd

Personal Effects

We now collect from, Sheffield, Bradford, Leeds, Manchester, Durham, Newcastle
Small cartons/ Large cartons/ Pallet boxes/ Large crates (5x5x5)
Collect from Galle/ Kurunegala and Colombo
Weekly sailing to Colombo (Loading every Monday)
Your goods arrive within 20 days.
Send a T/chest for £25.00(excluding UK collection) including freight and Srilanka ware house Charges ( Excluding Dudy / Taxes)
Book now to get most competitive Price together with fast and efficient service to srilanka.

Now track your shipment on line
Another service adding to our excellence service to serve our customers.

Ship through trico
- You can put your mind to rest,
- No need to wait for inovice to come through the post or email. Online
- Door delivery track it all the way up to to door delivery.
- Come with us you will never regret.
Trico committed to serve srilankan community

Accessible 24 hours a day seven days a week, where ever you are in the world, just log in.

STREES FREE CLEARANCE

AT ALL TRICO WAREHOUSES
FROM 1ST OF OCTOBER YOU CAN PAY ALL CLEARANCE AND WAREHOUSE CHARGES IN UK"
NOTHING TO PAY IN BELLOW WAREHOUSES EXCEPT TAXES
(COLOMBO / GALLE / KARUNEGALA).

WE MAKE IT FASTER AND EASIER FOR YOU AND YOUR LOVED ONES TO COLLECT GOODS FROM OUR WAREHOUSES CALL US OR EMAIL US FOR MORE INFORMATION

35 Years of Experience Behind US, Branch Officers World Wide,
Trico is Serving Thousands Of Sri Lankans Around The Globe.

TRY US AND SEE THE DIFFERENCE

555 White Hart Lane, London N17 7RP
Fax : 020 8809 5445
Call Us Now And Make A Booking , Send Your Booking Via Email
020 8888 8787
Email : info@tricofreight.co.uk
Visit us www.tricofreight.co.uk



ENGINE TEC MOTORS



We offer Facilities For:

- Serving
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre - MOT Checks
- All types of Repair & Body Work
- Insurance Work Undertaken

உங்கள் கார் திருத்த வேலைகளுக்கு நம்பிக்கையான நிறுவனம்.



Ask for Vel or Rajan
Tel: 02086408000 / 02086401230
Mob:07860226476 / 07860770945
Unit 5, 339 London Road, Mitcham, Surrey CR4 4BE
e mail: vel@etmluk.com Web: www.etmluk.com



ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name:
Address:
Postcode:
Telephone:

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், G11, Lombard House, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# சந்திரிகாவிற்கு பாவமன்னிப்பு வழங்கிய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு



– முத்துக்குமார்

தந்தை செல்வா ஞாபகார்த்த நினைவுப் பேருரையினை நிகழ்த்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தடவை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவினை அழைத்திருக்கின்றது. அவர் 'யுத்தத்தின் முடிவு சமாதானமாகாது' என்ற தலைப்பில் தனது நினைவுப் பேருரையை ஆற்றியிருக்கின்றார்.

தந்தை செல்வா தமிழ்த் தேசிய அரசியலின் ஒரு காலகட்டத்தை நகர்த்திய பெருமைக்குரியவர். 1949 ஆம் ஆண்டு அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியை தோற்றுவித்ததன் மூலம் தமிழ் இன அரசியலை தமிழ்த் தேசிய அரசியல் என்ற கட்டத்திற்கு வளர்த்துச் சென்றார். மக்களை இணைத்த வெகுஜனப் போராட்டம் என்ற அரசியல் அணுகுமுறையினை ஆரம்பித்து வைத்தார்.

தந்தை செல்வாவினது இந்தப் பண்புகள் அடுத்த தலைமுறைக்கு கடத்தப்பட்டபோது அவரது அரசியல் வாரிசாக பிரபாகரன் எழுச்சியடைந்தார். கொள்கை, நேர்மை, விலைபோகாமை என்ற பண்புகளை கொண்ட பிரபாகரன் அதற்கு மேலாகச் சென்று தியாகம் நிறைந்த போராட்டத்தை வளர்த்தெடுத்தார். இதனூடாக தமிழ்த் தேசிய அரசியலை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு சென்றார். பிரபாகரன் தந்தை செல்வாவின் நிழலில் நின்று அரசியல் செய்தார். இன்று அரசியல் செய்பவர்கள் அனைவரும் பிரபாகரன் வழங்கிய அடித்தளத்தில் நின்றே அரசியல் செய்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பான விமர்சனங்கள் அனைத்தும் பிரபாகரன் தந்த அடித்தளத்தில் நின்று கொண்டு தமிழ்த் தேசியத்திற்கு எதிரான அரசியல் செய்வது தொடர்பாகவே தோற்றம் பெற்றது.

இங்கே கவனிக்க வேண்டிய முக்கிய விடயம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காலூன்றி நிற்பது பிரபாகரன் உருவாக்கிய அடித்தளத்தில். ஆனால் 2009ற்கு முன்னர் புலிகள் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தீர்வை வலியுறுத்த சம்பந்தனோ அதிகாரப் பகிர்வை வலியுறுத்தியதன் மூலம் முள்ளிவாய்க்கால் பேரழிவுக்கு துணை நின்றனர். புலிகளை அழித்த பின்னர் பிரபாகரன் உருவாக்கிய அடித்தளத்தில் நின்று இன்று செய்வதோ தமிழ்த் தேசியத்திற்கு எதிரான அரசியல்.

இந்தத் தமிழ்த் தேசிய நீக்க அரசியலின் ஒரு வேலைத்திட்டம்தான் இன அழிப்புக் குற்றவாளிகளுக்கு பாவமன்னிப்பு வழங்குவது. கூட்டமைப்பினர் முதலில் இன அழிப்புக் குற்றவாளியான சரத் பொன்சோவிற்கு பாவமன்னிப்பு வழங்கினர். 2010 ஜனாதிபதி தேர்தலில் கொத்துக் கொத்தாக தமிழ் மக்களைக் கொலை செய்த சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக கூட்டமைப்பு பிரச்சாரம் செய்தது.

இரண்டாவது நிலையில் இன்னோர் இனப்படுகொலையாளியான ரணில் விக்கிரமசிங்கவிற்கு பாவமன்னிப்பு வழங்கியது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டமைப்பு மேதினத்தை நடத்தியதுமல்லாமல் ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து சம்பந்தன் யாழ் மண்ணிலேயே சிங்கக் கொடியேற்றினார்.

தற்போது மூன்றாவது பாவமன்னிப்பு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு வழங்கியுள்ளது. அதுவும் தமிழ்த் தேசியத்தின் பிதாமகன் எனக் கருதப்படுகின்ற தந்தை செல்வாவின் நினைவு தினத்தில் வழங்கியிருக்கின்றது. இதன் மூலம் தனது துரோகத்தனங்களுக்கு தந்தை செல்வாவையும் பங்காளியாக்கியிருக்கின்றது வாரிசுகள் தமது தலைவரின் பெயரை பாதுகாக்க வேண்டுமே தவிர, அவர் மீது மண் அள்ளிக் கொட்டக் கூடாது. கூட்டமைப்பு மண் அள்ளிக் கொட்டும் வேலையைச் செய்திருக்கின்றது. இன்னும் சிறிது காலத்தில் பாவமன்னிப்பு வழங்குதல் தொடர்பாக கூட்டமைப்பு கின்னஸ் சாதனை நிகழ்த்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மைத்திரியை ஆட்சிக்கு கொண்டு வந்தது போல, சந்திரிகாவும் தமிழ் மக்களுக்கு சமஸ்டித்தீர்வு தருவேன் என்று கூறிய காரணத்தால், 1994 தேர்தலில் தமிழ் மக்கள் அபரிமிதமாக வாக்களித்து ஆட்சிக்குக் கொண்டு வந்தனர். சந்திரிகா எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரும் பெறாத 62.5 வீத வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தார். அவருக்கு அதிக வாக்கு வீதத்தில் வாக்களித்தவர்கள் தமிழ் மக்களே!

ஆனால் சந்திரிகா வெற்றி பெற்றதும் முதன் முதலில் வெளியிட்ட அறிக்கையில் பெரும்பான்மை மக்கள் விரும்பாத அரசியல் தீர்வை தான் முன்வைக்கப் போவதில்லை எனக் கூறியிருந்தார். அவரது ஆட்சிக் காலத்தில் சர்வதேச நிர்ப்பந்தங்கள் காரணமாகவும் ஆயுதப் போரின் உக்கிரம் காரணமாகவும் அரசியல் தீர்வுப் பொதி ஒன்றினை முன்வைத்தார்.

ஆனால் அந்தத் தீர்வுப் பொதி மூன்று தடவைகள் வெட்டப்பட்டு வெறும் சக்கைதான் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்த முயற்சிக்கப்பட்டது. அந்தச் சக்கையினையும் நிறைவேற்றவிடாமல் ஐக்கிய தேசியக் கட்சியினர் பொதி நகலை கிழித்தெறிந்ததும், சந்திரிகா 1957 இல் அவரது தந்தையார் பேரினவாதிகளிடம் சரணடைந்தது போல சரணடைந்தார். தொடர்ந்து அதனைக் கொண்டு செல்லும் துணிவோ, விருப்பமோ அவரிடம் இருக்கவில்லை.

ரணிலுக்கும், புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையை முன்வைத்தனர். இலங்கை என்ற அரச அதிகாரக் கட்டமைப்புக்குள் தமிழ் மக்கள் ஒரு தேசமாக இணைவதற்கான யோசனைகள்தான் அது. சர்வதேச சமூகமும் அதனை வரவேற்றிருந்தது.

ஒரு நாட்டிற்குள் தீர்வைக் காணக்கூடிய இடைக்காலத் தீர்வு யோசனையை முன்வைப்பார்கள் என்பதனை சற்றும் எதிர்பாராத ரணில் அரசாங்கம் அரசியல் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் சந்திரிகாவிடம் இருந்த பேரினவாத உணர்வு கிளர்ந்தெழுந்தது. அதுவரை காலமும் தாராள முகத்தை காட்டிய சந்திரிகா பேரினவாதத்தின் கோர முகத்தைக் காட்டினார். விளைவு ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து முக்கிய அமைச்சுப் பதவிகள் பறிப்பும் தொடர்ந்து பாராளுமன்றக் கலைப்பும் இடம்பெற்றது. புலிகளின் இடைக்கால யோசனைகள் தானாகவே கிடப்புக்குள் சென்றன.

எனவே சந்திரிகா அரசியல் தீர்வு தொடர்பாக தாராளமாக நடந்து கொண்டார், தமிழ்த் தரப்பு அதனை ஒழுங்காக பயன்படுத்தவில்லை என சம்பந்தன் கதையளப்பதெல்லாம் சுத்தப் பொய். தயான் ஜயதிலக, குமார் ரூபசிங்கா போன்ற சிங்கள புத்திஜீவிகளைப் போல சந்திரிகா, சமாதானம், சமஸ்டி என நிறைய கதையளந்தாலும் இறுதியில் பேரினவாதத்திடமே தஞ்சமடைந்தார்.

இங்கேதான் இப்பத்தியாளர் தொடர்ச்சியாக வலியுறுத்துவது போல, சிங்கள சமூக உருவாக்கமும் அதன் வழி சிங்கள அரசுருவாக்கமும் மிகவும் முக்கியமானது. இதன்படி இலங்கைத்தீவு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தமானது. ஏனையவர்கள் வாழ்ந்து விட்டுப் போகலாம். ஆனால் உரிமைகள் எதுவும் கேட்கக் கூடாது. இந்த அரசுருவாக்க கருத்து நிலையை மீற எந்த சிங்கள புத்திஜீவியும் எந்த சிங்கள அரசியல்வாதியும் தயாராக இல்லை.

பண்டாரநாயக்கா தொடக்கம் சந்திரிகா ஊடாக, வாசுதேவ நாணயக்கார வரை அரசியல்வாதிகள் தொடர்பாக இதுதான் அனுபவம். அதேபோல குமார் ரூபசிங்கா தொடக்கம் தயான் ஜயதிலக வரை புத்திஜீவிகள் தொடர்பாகவும் இதுதான் அனுபவம். சந்திரிகா போன்ற சிங்களத்தவர்களிடம் விருப்பமும் இல்லை. இயலுமையும் இல்லை என்பதே உண்மை நிலை.

சந்திரிகா பேரினவாதி மட்டுமல்ல இனப்படுகொலையாளியும் கூட. யாழ்ப்பாண இடப்பெயர்வு, நவாலி தேவாலயப் படுகொலை, நாகர்கோவில் மகா வித்தியாலய மாணவர்கள் படுகொலை, கிரிசாந்தி குமாரசுவாமி படுகொலை, பண்டாரவளை பிந்தன்வேவ சிறைக்கைதிகள் படுகொலை, மாமனிதர் குமார் பொன்னம்பலம் படுகொலை என்பன சந்திரிகாவின் ஆட்சிக் காலத்திலேயே அரங்கேற்றப்பட்டன. முப்படைகளின் தலைவராக சந்திரிகா இருந்ததினால் இவரது கட்டளைகள் இன்றி இந்தப் படுகொலைகள் நடந்திருக்கும் எனக் கூற முடியாது.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் சந்திரிகா பதவியிலிருந்த காலத்தில் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினராலேயே கொலை செய்யப்பட்டார் எனக் கூறப்படுகின்றது. குமார் பொன்னம்பலம் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்னரே சந்திரிகா தன்னை கொலை செய்யலாம் எனக் கூறியிருந்தார்.

இக்காலத்தில் தமிழ் மிதவாதிகளின் அரசியல் நிலைப்பாடு வேறு, புலிகளது அரசியல் நிலைப்பாடு வேறு என்றே பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. சமாதானச் செயற்பாட்டுக்கு எதிராகப் புலிகள் உள்ளனர் என இந்த மிதவாதிகள் எனக் கூறப்படுகின்ற சம்பந்தன், நீலன் திருச்செல்வம் வகையறாக்கள் சர்வதேச ரீதியாக பிரச்சாரம் செய்தனர். குமார் பொன்னம்பலம் அதனை நிராகரித்து தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்பதனை சர்வதேச ரீதியில் வலியுறுத்தினார். அதன் மூலம் ஒரு நாட்டிற்குள் தமிழ்த் தேசத்தின் இறைமை அங்கீகரிக்கப்பட்ட தீர்வை பெறுவதே புலிகளினதும், தமிழ் மிதவாதிகளினதும் அரசியல் இலக்கு என வாதிட்டார். தேர்தல் வரும்போது புலிகள் குமார் பொன்னம்பலத்தை முதன்மைப்படுத்தக் கூடிய நிலையும் இருந்தது. குமார் பொன்னம்பலம் முன்னிலைக்கு வந்தால் புலிகள் வேறு, மிதவாதிகள் வேறு என்ற பிரச்சாரத்தைக் கொண்டு செல்ல முடியாமல் போய்விடும் என்பதற்காகவே அவர் கொலை செய்யப்பட்டார்.

இனப்படுகொலை என்பது வெறுமனவே உயிர்க்கொலை மட்டுமல்ல. ஒரு மக்கள் கூட்டத்தின் அரசியலைக் கொலை செய்வதும் இனப்படுகொலைதான். சந்திரிகா தமிழ் மக்களது அரசியலையும் தமிழ் உயிர்களையும் கொலை செய்த ஒரு இனப்படுகொலையாளி. அவரது கைகள் முழுவதிலும் தமிழனின் இரத்தக் கறை. அந்த இரத்தக்கறை காய்வதற்கு முன்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவருக்கு பாவமன்னிப்பு வழங்கியுள்ளது.

சுயமரியாதை என்பது ஒவ்வொரு இனத்திற்கும் உண்டு. அந்த இனத்திற்கு தலைமை தாங்கும் அரசியல் இயக்கத்தினாலேயே அது வெளிப்படுத்தப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திரிகாவிற்கு பாவமன்னிப்பு வழங்கியதன் மூலம் தமிழ் மக்களின் சுயமரியாதையை மிக மோசமாக அவமானப்படுத்தியுள்ளது.

*நன்றி: பொங்குதமிழ் இணையம்*






Kayaal IT Solution Ltd
EST Aug 2012
CCTV Camera Installation & Maintenance

FRIENDLY SERVICES BY QUALIFIED ENGINEER.....

- CCTV Installation and Maintainance
- Shop and House Burglar Wireless Alarm Installation & Maintenance
- We are Offering cameras 700 TVL to 1000 TVL at Different Prices from £25
- HDTV 720P, 1.3 Megapixel Camera, CMOS 1000 TVL all available all day
- Wireless HD IP Cameras also available
- DVR all quality - Sunvision make

Only 500 Pounds
4 CH DVR, 500GB Hard Disk
Camera with Night Vision
Water proof, Big TVL Sony
Ipad Setup, 30 Meter Vision

Only 300 Pounds
1 Touch Panel, 5 PIR Motion Sensors
3 Door Sensor, 3 Keys
1 Solar Siren Good Big Size
5 Numbers auto dial & all wireless

Please Contact : Jothy
Electrical & Electronic Engineer, Beng Hons
Microsoft certified for MCTC, MCP 2.0 & Guilds Certified for PAT test

Paying Method: By PayPal or Cash
83, Roberts Bridge Road, Carshalton, SM5 1AH

Tel : 07859892657 | 02034416364
E-Mail : kayaalitsolutions@hotmail.com
Web : www.kayaalitsolutionlimited.com

# நாம் ஆதரித்த அரசியலமைப்பு

பாகம் 172

இலங்கையின் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டமூலம் எதிர்க் கட்சிகள் சமர்ப்பித்த திருத்தப் பிரேரணைகளுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. மிகச்சிலபேர் வாக்கெடுப்பின் போது சமூகமளிக்காமலும் ஒரேயொருவர் மட்டும் எதிர்த்து வாக்களித்தும் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழர் தரப்பும் சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களித்திருக்கிறது.

தற்போது கைக்குக் கிடைத்துள்ள இந்த 19 ஆவது திருத்தச் சட்டமூலம் 64 பக்கங்களைக் கொண்டதாக உள்ளதால் அதனை முற்றாக வாசித்து 24 அத்தியாயங்களையும் பல செட்யூல்களெனப்படும் நியமங்களையும் கொண்ட பழைய அரசியலமைப்புடன் என்னென்ன வித்தியாசங்களைப் புதிய திருத்தப்பட்ட அரசியலமைப்புக் கொண்டுள்ளது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்வது பெரும் நேரத்தைச் செலவிடும் சிரமமான விடயமாகும். அதனால் முக்கியமான மாற்றம் என்ன என்பதை மட்டும் இப்போதைக்குப் பார்ப்பதே இலகுவாகிறது. திருத்தத்தில்:

ஜனாதிபதி நாட்டுக்கும், நிறைவேற்று அதிகாரத்திற்கும் தலைவராகவும் ஆயுதப்படைகளுக்கு கமாண்டராகவுமேயிருப்பாரென்ற வாசகமே தற்போது கூறப்பட்டுள்ளது. முன்பிருந்த 'அரசாங்கத்துக்குத் தலைவர்' என்ற சொற்றொடரை நீக்கியிருக்கிறார்கள். அதனால் ஜனாபதிபதிக்கு இருந்த பாராளுமன்றத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் இல்லாமலாக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரவலு குறைக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் மக்களாலேயே தெரிவு செய்யப்படும் ஜனாதிபதியின் பதவிக் காலமும் ஆறு வருடங்களிலிருந்து ஐந்து வருடங்களாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இவைதான் இந்தச் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்களாகத் தெரிகின்றன.

தமிழர் தரப்பு இந்த திருத்தச் சட்டத்தை ஆதரித்தாலும் இச்சட்டத்தினால் நாம் பெறக்கூடிய நன்மை என்ன என்பது தெளிவாகப் புரியவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்தச் திருத்தச்சட்டத்தை மக்கள் முன்வைத்து, தாம் எதற்காக இதனை ஆதரிக்கவிருக்கிறோமென்ற விளக்கத்தினைக் கொடுத்ததாகத் தெரியவில்லை. அவர்களுக்கும் மக்களுக்குமிடையிலான இடைவெளிமிக அதிகமாக இருப்பதால் இவற்றையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை போலத் தெரிகிறது. இலங்கையிலிருந்த சர்வாதிகார ஜனாதிபதி முறை ஓரளவு தளர்த்தப்படும் அதே வேளையில் தமிழ் தலைவர்களின் சர்வாதிகாரப்போக்கு படிப்படியாக வளர்ச்சியடைவது போலத் தோன்றுகின்றது. நம்மவர்கள் ஆதரித்த 19 ஆவது திருத்தச் சட்டம் எமக்கு என்ன நன்மையைக் கொண்டுவருமென்பதைச் சாதாரணர்களாகிய நாம் பெரிதும் அறியோம்.

உண்மையில் நாம் நமது வாக்குகளால் தெரிவு செய்து பதவியிலமர்த்திய ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்பட்டுள்ளதன் மூலம் நாமடையப் போகும் நன்மை என்னவென்பது நமக்குத் தெரியாது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி தமிழர்களின் பெருமளவு வாக்குகளை தற்போதைய ஜனாதிபதிக்குப் பெற்றுக் கொடுத்தது. ஆனால் இனி என்ன நடக்கப் போகின்றதோ தெரியவில்லை. சிங்களவர்கள் நம்மைப் பாவித்தே தங்களைச் சுற்றிப் பின்னப்பட்டிருந்த சர்வாதிகார வலையை அறுத்தெறிந்திருக்கிறார்கள்.

இலங்கையரசியலமைப்பு அதன் இரண்டாவது அத்தியாயத்தில் உள்ள ஒரேயொரு சிறிய பந்தியின் மூலம் பௌத்தத்திற்கே இந்த நாட்டில் முதலிடம் என்றும் பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பதும், அதனை வளர்ப்பதும் நாட்டின் கடமையென்றும் கூறுகின்றது. இந்த அத்தியாயத்தில் எவ்வித மாற்றங்களும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. இந்தியா இந்துக்கள் மிகப் பெரும்பான்மையினராக வாழும் நாடாக இருந்தும் இந்த அளவு முக்கியத்துவத்தை இந்து சமயத்திற்குத் தனது அரசியலமைப்பில் கொடுக்கவில்லை. 84வீதத்திற்கும் மேல் இந்துக்களைக் கொண்ட நேபாளம் மட்டுமே உலகில் தன்னை ஓர் இந்து நாடாகப் பிரகடனம் செய்துள்ளது. ஆனால் முப்பது வீதத்திற்கும் அதிகமான வேற்று மதத்தினரைக் கொண்டுள்ள சிறிலங்கா பௌத்தத்திற்கு இந்த அளவு முக்கியத்தைக் கொடுத்துள்ளமை வேற்று மதத்தினரைப் புறக்கணிக்கும் செயலாகும். மூன்றாவது அத்தியாயத்தில் சில உரிமைகளைப் பிற மதத்தினருக்கு அரசியலமைப்பு வழங்கினாலும் பௌத்தத்தின் ஆதிக்கம் ஓர் தனி அத்தியாயத்தில் முழுமையாகக் கொடுக்கப்பட்டுள்ளமையை சிறு பான்மையினரை ஒதுக்கி வைக்கும் செயலாகவே பார்க்க வேண்டும்.

**அரசியலமைப்பையல்ல அரசியலமைப்பில் 19ஆவது திருத்தச் சட்டத்தைத்தான் நாங்கள் ஆதரித்தோம் என்று த.தே கூட்டமைப்பு சப்பைக் கட்டுக் கட்டிச் சமாளிக்க முடியாது.**

இந்த அம்சத்தில் எந்தவித திருத்தமும் மேற்கொள்ளப்படாத அரசியலமைப்புக்கு தமிழர் தரப்பு ஆதரவைக் கொடுத்ததன்மூலம் இலங்கையின் அரசியலமைப்பை இந்தத் திருத்தத்துடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டு விட்டது என்னும் தோற்றப்பாடே தெரிகின்றது. உண்மையில் தமிழர் தரப்பு இத்தகைய தோற்றப்பாட்டை உருவாக்கியிருக்க வேண்டிய அவசியமில்லை. மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் தற்போது எதிர்க் கட்சியும், ஆளுங்கட்சியும் சேர்ந்தியங்கும் சிங்கள தேசிய அரசாங்கத்திடம் இருக்கின்றது. நாம் ஒதுங்கியிருந்திருக்கலாம். அதன் மூலம் நடைமுறையிலுள்ள அரசியலமைப்புடன் நமக்கு உடன்பாடில்லையென்பதை உலகிற்குக் காட்டியிருக்கலாம். ஆனால் ததே கூட்டமைப்பு இணக்க அரசியல் என்ற கோட்பாடாக இதனை எண்ணிக்கொண்டு, தமிழருக்கு எவ்வித நன்மையையும் தராத புதிய அரசியலமைப்பை அதாவது அதன் சீர்திருத்தத்தோடு ஆதரித்திருப்பதைச் சரியான சாணக்கியமென்று ஏற்க முடியவில்லை.

இவ்வரசியலமைப்பால் எதிர்காலத்தில் சிங்களக் குடியேற்றங்களோ, பௌத்த குருமாரும் இராணுவத்தினரும் சேர்ந்து விகாரைகளையும் பௌத்த ஆலயங்களையும் தமிழர் காணிகளில் கட்டுவதோ குறைவடையப் போவதில்லை. அது என்றும்போல் நடைபெறத்தான் போகின்றது. தமிழர்கள் அரசியலமைப்பை ஆதரித்து விட்டார்கள் என்பதால் சிலவேளைகளில் அது மேலும் தீவிரமடையவும் கூடும்.

## அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

அரசியலமைப்பையல்ல அரசியலமைப்பில் 19ஆவது திருத்தச் சட்டத்தைத்தான் நாங்கள் ஆதரித்தோம் என்று ததே கூட்டமைப்பு சப்பைக் கட்டுக்கட்டிச் சமாளிக்க முடியாது. மாற்றப்பட்ட பகுதிகளை நாம் ஆதரிக்கும்போது மாற்றஞ் செய்யப்படாதவற்றையும் ஏற்றுக் கொள்வதாகவே பொருள்படுகின்றது. உண்மையில் எமது ஆதரவு இந்த மாற்றத்திற்குத் தேவைப்படவில்லை. நாம் சும்மா பார்த்துக்கொண்டு இருந்திருக்கலாம்.

கிட்டத்தட்ட எண்பது வீதமான சிங்களவர்களின் பிரதிநித்தித்துவத்தால் இயங்கிக் கொண்டிருக்கும் தற்போதைய தேசிய அரசாங்கம் வரப் போகும் பாராளுமன்றத் தேர்தலில் கட்சி பிரிந்து போட்டியிட்டாலும் தேசிய அரசாங்கமே மீண்டும் அமைக்கப்படக்கூடிய சாத்தியங்கள் இருப்பதால், தமிழர் பிரதிநிதித்துவம் செல்லாக் காசாகிப் போகவே வாய்ப்புகள் அதிகமுள்ளன. தற்செயலாக ஓர் தொங்கு பாராளுமன்றம் உருவாகி அதில் தொற்றிக்கொண்டு நாங்களுமிருக்கிறோம் எங்களையும் கவனியுங்கள் என்று கெஞ்சினாலும், பெரும்பான்மையின எதிராளிகள் எமது நலன்களைக் கருத்திலெடுக்க விடப்போவதில்லை. அதனால் இலங்கையின் பாராளுமன்ற ஜனநாயகத்தில் எமது பிரதிநிதித்துவதின் மூலம் பெரிய பயனை தையும் நாம் அடையப் போவதில்லை. தந்தை செல்வா இவற்றையெல்லாம் தீர்க்க தரிசனமாகச் சிந்தித்துத்தான் தமிழரசுக் கொள்கையை அதாவது ஒற்றையாட்சிக்கெதிரான கூட்டாட்சியை அதாவது சமஷ்டி அரசியலமைப்பை வலியுறுத்தினார். அன்றிலிருந்து இன்று வரை எமது நிலைப்பாடு அதுவாகவேயிருக்கிறது. நாம் எந்தக் காலத்திலும் இலங்கையின் அரசியலமைப்பை முழுமையாக ஆதரிக்கவில்லை. எமக்கு மாகாண சபைகளைப் பெற்றுத்தர உருவான 13ஆவது திருத்தச் சட்டம், மாவட்டசபை மசோதா போன்ற சமஷ்டியை நோக்கிய சிலவற்றை மட்டுமே ஆதரித்தோம்.

தற்போது எமது செல்வாக்கால் தெரிவு செய்யப்படக்கூடிய ஜனாதிபதியொருவரின் அதிகார பலத்தினுள் அடைக்கலம் பெறக்கூடிய அனுகூலநிலை மாற்றமடைந்து விட்டது. அதிகார பலம் மட்டுப்படுத்தப்பட்ட ஜனாதிபதியொருவரின் பலனற்ற ஆதரவில் தங்கியிருப்பதற்கு நாமே வழி சமைத்திருக்கிறோம், கிங் மேக்கர்களாய் இருந்திருக்க வேண்டிய நாம் அந்தத் தகைமையை இழந்துவிட்டோம்.

இது எந்த அளவுக்கு இலங்கை இந்திய ஒப்பந்தத்திலும், அதன்மூலம் உருவாக்கப்பட்ட 13வது திருத்தத்திலும் பாதிப்பை ஏற்படுத்துமென்பதை வரையறுப்பது கடினமாகலாம். ஜனாதிபதியால் தீர்மானிக்கப்படவேண்டிய வடகிழக்கு மாகாண சபைகளுக்கான மேலதிக அதிகாரங்கள், வடகிழக்கு மாகாண இணைப்பு, அதனை நிலைப்படுத்துவதற்காக வடகிழக்கில் நடத்தப்படவேண்டிய சர்வஜன வாக்கெடுப்பு போன்ற விடயங்களை இனிப் பாராளுமன்றமே கையாள வேண்டிய நிலைமையுருவாகி விடக் கூடும். அல்லது உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து வடகிழக்கு இணைப்பை இல்லாது செய்ததுபோல, 13வது திருத்தத்திலுள்ள வடகிழக்கு மாகாணசபைகளுக்கான பலசாதகமான அம்சங்களை பேரின வாதிகள் திருத்தம் 19யைப் பாவித்து இல்லாது செய்துவிடவும் கூடும். இது பற்றிய தெளிவான விளக்கங்கள் யாருக்கும் இல்லை. தமிழ் மக்களிடம் இது பற்றிய விளக்கங்களை ததே கூட்டமைப்பினர் முன்வைக்கவுமில்லை.

**தற்போது எமது செல்வாக்கால் தெரிவு செய்யப்படக்கூடிய ஜனாதிபதியொருவரின் அதிகார பலத்தினுள் அடைக்கலம் பெறக்கூடிய அனுகூலநிலை மாற்ற மடைந்து விட்டது. அதிகாரபலம் மட்டுப்படுத்தப்பட்ட ஜனாதிபதியொருவரின் பலனற்ற ஆதரவில் தங்கியிருப்பதற்கு நாமே வழி சமைத்திருக்கிறோம். கிங் மேக்கர்களாய் இருந்திருக்க வேண்டிய நாம் அந்தத் தகைமையை இழந்துவிட்டோம்.**

மொத்தத்தில் விளைவுகள் என்னவாகலாமென்று அறியப்படுத்தாமலேயே 19வது திருத்தத்தை, தனியே ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தையும் பதவிக் காலத்தையும் குறைத்துவிடும் நோக்கில் சிங்களவர்களுடன் சேர்ந்து ஏதோ ஜனநாயகம் மலர்ந்துவிடப் போகிறது என்ற நப்பாசையில் ததேகூ ஆதரித்திருக்கிறது. நடக்கப் போவது நல்லதோ கெட்டதோ, இதற்கான அதிகாரத்தை தமிழ் மக்கள் தற்போதுள்ள எமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கவேயில்லை என்பதே உண்மை. பொறுத்திருந்து பார்ப்போம்.

*தொடரும்..*



வெகுவிரைவில் தரணியெங்கும்...

# தமிழ்

வணக்கம் தமிழ் | ஞாபகம் வருதே | விம்பம் | உப்பு புளி காரம் |

| வெள்ளித் திரை | ஒளித்தடம் | மயக்கும் மாலைப் பொழுது | அரும்புகள் |

| நான் நீ ! | மருத்துவம் | நாம் யார் ? | நடந்து வந்த பாதை |

| வேங்கைகள் | பாட்டுக்குப் பாட்டு | யாதும் ஊரே | உண்மையின் வெளிச்சம் |

| தரிசனம் | நிகழ்வுகள் | இன்றைய பார்வை |

மற்றும் பல சுவையான நிகழ்ச்சிகள்...

**மேலதிக விபரங்களுக்கு**

Tel : **020 7043 4316**

Web : www.tamil.com

Facebook.com/tamiltelevisionnetwork | @tamiltvnetwork

# 16வது சைவ மாநாடு







த.செல்வரத்தினம்

பிரித்தானியா சைவ திருக்கோவில் ஒன்றியத்தின் 16வது சைவ மாநாடு கடந்த ஏப்ரல் மாதம் 18ஆம் 19ஆம் திகதிகளில் விமரிசையாக நடைபெற்றது. கடந்த காலங்களில் சைவமாநாடு பொதுவாக சைவ திருக்கோவில்களிலேயே நடைபெறுவது வழக்கம். இந்த வருடம் இம் மாநாடு கிழக்கு லண்டனில் உள்ள கற்பக விநாயகர் கோயில் வடமேற்கு லண்டனில் உள்ள ஈழபதீஸ்வரர் ஆலயம் ஆகியவற்றின் ஆதரவில் நடாத்திய படியாலும் அக் கோவில்களில் இடவசதி இல்லாத படியால் அவர்களுக்கு அண்மையிலுள்ள Woodford Green இல் Woodbridge High School இலும் வடமேற்கு லண்டனில் Alperton இல் உள்ள Alperton Community School இலும் நடைபெற்றது.

தமிழகத்திலிருந்து வருகை தந்த 57வது குரு மகா சந்நிதானம் கூனம்பிட்டி கல்யாணபுரி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ இராஜ சரவண மாணிக்க வாசக சுவாமிகள் தலைமையில் இரு நாட்களும் சைவமாநாடு மங்கள விளக்கேற்றல் நந்திக்கொடியேற்றல் சம்பிரதாயத்துடனும் வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச் சங்க மாணவர்களினாலும் ஈழபதீஸ்வர மாணவர்களினாலும் திருமுறை ஓதலுடன் ஆரம்பமானது. முதல் நாள் நிகழ்வில் இல்போட் செல்வ விநாயகர் ஆலயத் தலைவர் திரு செல்வராசா அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து செல்வ விநாயகர் ஆலயசிவாச்சாரியார் கைலை சிவஸ்ரீ நாகநாதசிவம் ஆசாரியார் அவர்களின் ஆசியுரை நடைபெற்றது. அதைத்தொடர்ந்து ஒன்றியத்தலைவர் திரு.கோபாலகிருஷ்ணன் அவர்களின் தலைமையுரை என்று நிகழ்ச்சியில் இருந்தாலும் மேடையில் கலந்து கொள்ளாமல் இடுப்பில் சால்வையைக் கட்டிக்கொண்டு மேற்பார்வை செய்து கொண்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பொன்னாடை போர்ப்பதற்கு மட்டும் மேடையில் காட்சி அளித்ததும் குறிப்பிடத் தக்கதாகும். அதைத்தொடர்ந்து சைவ முன்னேற்றச் சங்கத்தலைவர் திரு சு ஆனந்ததியாகர் மலர் ஆய்வு நடாத்தினார். மாநாட்டின் மூலப்பொருளான பெரிய புராணமும் சைவவாழ்வியலும் பற்றிய 63 நாயன்மார்களில் மிகமுக்கியமான 3 ஆண் நாயன்மார்கள் வலதுபுறமும் மற்றைய 3 பெண் நாயன்மார்கள் இடதுபுறமும் பிரித்தானியா சைவ திருக்கோவில் ஒன்றியத்தின் Logo வான நடனமாடும் நடராசர் உருவத்தைச் சுற்றி வட்டமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

## ◆ விழா மலர்

விளம்பரங்கள் தவிர்ந்த 134 பக்கங்களைக் கொண்ட மலரில் 42 பக்கங்களில் வாழ்த்துரைகளும் ஆசியுரைகளும் இடம் பெற்றுள்ளது. மாநாட்டின் 2ஆம் நாள் ஆய்வு செய்த திரு ம.பேரின்பநாதன் அவர்கள் மலர் உள்ளே இருந்த பெரியபுராணத்தை ஒட்டிய கட்டுரைகள் பற்றி விமர்சித்தார். ஆங்கிலத்தில் யோகாசனம் பற்றிய ஒரு கட்டுரையும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டில் நடந்த சைவப்போட்டியில் பரிசு பெற்ற பிள்ளைகள் விபரங்கள் படங்களுடன் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இருநாட்கள் நிகழ்ச்சியின் போது இப்பிள்ளைகளுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கியதோடு முதல் பரிசு பெற்ற பிள்ளைகள் மேடையில் பங்கு பற்றினார்கள்.

வாசகர்களின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு ஒரு பேப்பர் பத்திரிகையில் அமைவது போன்று, கட்டுரையின் முக்கிய கருத்துக்களைப் பெரிய எழுத்துக்களில் பிரசுரித்திருந்தால் வாசகர்களுக்கு இலகுவாக இருந்திருக்கும். அத்துடன் 9ஆவது சைவ மாநாட்டில் பிரசுரித்தது போன்று பொருளடக்கத்துக்கு ஒரு பக்கம் ஒதுக்கியிருந்தால் கட்டுரையைத்தேடிக் கண்டு பிடிப்பது இலகுவாக இருக்கும். மற்றும் 15ஆவது சைவ மாநாட்டு மலரில் 5 ஆண்டுகளுக்கு முன்னர் ஓர் அறிஞர் வழங்கிய ஒரு கட்டுரையைத் திரும்பவும் பிரசுரித்த தவறு இம்முறையும் நிகழாதிருந்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சி. நிகழ்ச்சி நிரல் பற்றிய பக்கங்கள் வேறு நிறத்தில் இருந்திருந்தால் அதனைக்கண்டு பிடிப்பது இலகுவாக இருக்கும் என எணண்ணுகின்றேன்.

செயலாளர் திரு க வி கணேசமூர்த்தி தனது முன்னைய அனுபவத்தின் மூலம் மாநாட்டை திறம் படச்செய்துள்ளார். 2ஆம் நாள் நிகழ்ச்சிகளை இளம் சந்ததியினரான திரு. கணேஸ்குமார் திறம்பட கூட்டத்தை நடாத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணம் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத்த தலைவர் பேராசிரியர் டாக்டர் மா வேதநாதன் 1ஆம் நாள் நிகள்வில் பெரிய புராணத்தில் சைவசித்தாந்தம் பற்றியும் 2ஆம் நாள் நிகள்வில் இலங்கையில் பெரிய புராணத்தில் பயில்நிலையும் பயன்பாடும் பற்றியும் பெரியபுராணத்தில் புலப்படும் தொண்டு நெறி பற்றியும் உரையாற்றினார். 1ஆம் நாள் நிகழ்வில் சிறப்புரை செய்த இளைய சந்ததியைச் சேர்ந்த திரு இந்துசேகர் அவர்கள் நடனமாடும் நடராசரின் தத்துவங்களை இன்றைய விஞ்ஞானிகள் அறிந்துள்ளமை பற்றி உரை செய்ததை அறியக்கூடியதாக இருந்தது.

அவரைத்தொடர்ந்து மாநாட்டின் கதாநாயகரான கூனம்பட்டி ஆதீனம் இராஜ மாணிக்கசுவாமிகள் அவர்களின் பேருரை நடைபெற்றது. பேருரையைத் தொடர்ந்து திரு கங்கை அமரனின் மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் இசையும் உரையும் நடக்க இருப்பதால் பேருரையைச்சுருக்கிக் கொண்டார். மேடையைத் தன் வசம் ஆக்கிக்கொண்ட திரு கங்கை அமரன் சினிமாவில் வரும் பக்திப்பாடல்களும் காதல் பாடல்களும் பாடி மக்களை கவர்ந்துள்ளார். இடைக்கிடையே தன்னைப் பற்றிய விளம்பரமும் செய்யவும் தவறவில்லை. 2 ஆம் நாள் நிகழ்வின் போது அறிஞர்களின் சொற்பொழிவுகளுக்கு நேரம் ஒரு தடையாக இருந்தது போன்று திரு கங்கை அமரனுக்குப் நேரப் பிரச்சனை ஏதும் இருக்கவில்லை.

மதியபோசனத்தின் பின்னர் மலேசியாவிலிருந்து வருகை தந்த மலேசியா சைவசமயசப் பேரவை பொதுச்செயலாளர் டாக்டர் அன்பரசன் அவர்கள் 1ஆம் நாள் பெரியபுராணத்தில் பெண்களின் பங்கு பற்றியும் 2ஆம் நாள் நிகழ்வின் போது பெரியபுராணத்தில் நீதி பற்றியும் சிவபெருமான் சுந்தரருடன் வழக்காடிய திறமை பற்றியும் இன்றைய வழக்கு முறையுடன் ஒப்பிட்டு சுவாரசியமாகவும் அழகாக உரையாற்றியுள்ளார்.

இதனை அடுத்து ஸ்ரீலங்கா பாராளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு இந்து மாமன்றத் தலைவருமான திரு சீ.யோகேஸ்வரன் அவர்கள் உரையாற்றும் போது பிரித்தானியா திருக்கோவில்கள் இலங்கைத்தமிழ் மக்களுக்கு ஆற்றும் சேவைகள் பற்றிக் குறிப்பிடத்தவறவில்லை. தொடர்ந்து சைவசித்தாந்த பண்டிதரும் கற்பக விநாயகர் ஆலய பிரதம சிவாச்சாரியருமான சிவஸ்ரீ பா.வசந்தன் குருக்கள் அவர்களும் உரை ஆற்றினார்கள். இதனைத்தொடர்ந்து மாலை நிகழ்வுகள் நடைபெற்றன. முக்கிய நிகழ்வாக பத்மஸ்ரீ நித்தியஸ்ரீ மகாதேவன் அவர்களின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. 2ஆம் நிகழ்விலும் நித்யஸ்ரீ மகாதேவனின் இசைநிகழ்ச்சி மண்டபத்தை நிறைவு செய்து மக்களை இசைமழையில் நனைத்தார் 17வது சைவ மாநாட்டிலும் இவ்வாறு கலை நிகழ்ச்சிகள் நடைபெறுமா என்பதுதான் மக்களின் எதிர்பார்ப்பு.

2 ஆம் நிகழ்வுகள் Wembley இல் ஈழபதீஸ்வர ஆலயம் சார்பில் திரு ந.சச்சிதானந்தன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து ஈழபதீஸ்வர ஆலய சிவஸ்ரீ சுரேஸ்வரக்குருக்களும் ஹரோ சித்தி விநாயகர் ஆலய சிவஸ்ரீ பராபரக்குருக்களும் ஆசியுரை நிகழ்த்தினார்கள். அதனைத்தொடர்ந்து Enfield ஆலய சிவஸ்ரீ கமலநாதக் குருக்கள் எல்லா திருக்கோவில்களும் பயன் படுத்த வேண்டிய பஞ்சாங்கத்தின் தேவை பற்றி உரை நிகழ்த்தினார். அதனைத்தொடர்ந்து சித்தாந்த ஆசிரியரும் ஆய்வாளருமான திரு சு யோ பற்றிமாகரன் அவர்கள் உரை நிகழ்த்தினார்.

**சைவத்திருக் கோவில் ஒன்றியத்துக்கும் சமூக சேவை பாராட்டுக்கும் என்ன தொடர்பு என்று மக்களுக்கு விளக்கம் போதவில்லை என நினைக்கின்றேன். ஒருவேளை சைவசமயத்தக்குச் தொண்டு புரிந்தவர்களைப் பாராட்டுவது பொருத்தமாக இருக்கும் என எண்ணுகின்றேன்.**


மாலை நிகழ்ச்சிகள் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் ஆலய தற்போதையத் தலைவர் திரு.இரத்தினசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் திரு கந்தையா தியாகமூர்த்தி அவர்களும் திரு நகுலேஸ்வரன் அவர்களும் உரை நிகழ்த்தினார்கள் அதனைத் தொடர்ந்து உயர்வாசற் குன்று முருகன் கோவில் தலைவர் திரு கு நித்தியானந்தன் தலைமையில் சமூக சேவை பாராட்டு நிகழ்வு நடை பெற்றது. சைவத்திருக் கோவில் ஒன்றியத்துக்கும் சமூக சேவை பாராட்டுக்கும் என்ன தொடர்பு என்று மக்களுக்கு விளக்கம் போதவில்லை என நினைக்கின்றேன். ஒருவேளை சைவசமயத்துக்குச் தொண்டு புரிந்தவர்களைப் பாராட்டுவது பொருத்தமாக இருக்கும் என எண்ணுகின்றேன். ஏப்ரல் 2ஆம் திகதி ஒரு பேப்பர் இல் திரு மு.நேமிநாதன் அவர்கள் குறிப்பிட்டது போன்று சைவ சமயத்தை வளர்க்க வேண்டிய வழிவகைகளில் ஈடுபட வேண்டுமே தவிர வெறும் கலை நிகழ்ச்சிகளை நடாத்துவதிலும் அரசியல் பிரச்சாரம் செய்வதிலும் சைவ திருக்கோவில் ஒன்றியத்தின் நோக்கத்தை அடையமுடியாது என எண்ணுகின்றேன். ஒன்றியத்தை வலுவடையச் செய்வதற்கும் பிரித்தானியாவிலும் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வதியும் எல்லா சைவ மக்களும் குழப்பமற்ற நிலையில் சைவசமய அனுட்டானங்களைக் கடைப்பிடிப்பதற்கும் பிரித்தானியாவில் உள்ள எல்லா சைவ ஆலயங்களும் ஒன்று சேர்வது நன்மை பயக்குமாக இருந்தாலும் புதிதாக இணையும் ஆலயங்கள் ஒன்றியத்தின் நோக்கத்துக்கு மாறாக சட்ட திட்டத்திற்கமையாது வேறு பாதையில் கொண்டு செல்வதைத்தடுக்க வேண்டிய வழிவகையைக் கடைப்பிடிப்பது நல்லது என்று கருதுகின்றேன்.

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....



seven | zero
graphic designers
020 7043 4310
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP
creative artwork from concept to design

# வட மாகாண முதலமைச்சர் இதைச் சொல்வாரா ? செய்வாரா ?



நரேந்திர மோடி புதிய பிரதமராக பதவியேற்றதும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு புதுடில்லிக்குச் சென்று சந்தித்தது. பல விடயங்களை பேசியதாகவும் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் நம்பிக்கை இருப்பதாகவும் சந்திப்பின் பின்னர் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் கூறியிருந்தனர். ஆனால், இன்று வரை எந்தவொரு நகர்வுகளையும் காணமுடியவில்லை. மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோதும் மூன்று தடவை சந்திப்பு இடம்பெற்றது. ஆனால், எதுவும் நடக்கவில்லை. மாறாக, வடக்கு கிழக்கு பகுதிகளில் 50 ஆயிரம் வீட்டுத் திட்டம் உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு அரசிடம் இந்திய மத்திய அரசு நேரடியாக உதவியளித்தது. இதைவிட அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் எதுவும் இந்தச் சந்திப்புக்களினால் இடம் பெற்றதாக இல்லை. மாறாக ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்ற பேச்சுக்கள்தான் தற்போது காணமுடிகின்றது.

## • 13ஆவது திருத்தம்

இந்தியாவின் அழுத்தங்களினால்தான் தேர்தல் நடத்தப்பட்டு இன்று வட மாகாண சபை இயங்குகின்றது என முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஞாபகமூட்டுகின்றார். ஆனால், மாகாண சபையின் செயற்பாட்டுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் விதிக்கப்படும் தடைகள் அல்லது ஜனாதிபதியின் நேரடியான அதிகாரங்களின் குறுக்கீடுகள் தொடர்பாக விக்னேஸ்வரன் இந்திய அரசுக்கு வெளிப்படுத்தினாரா என்பது சந்தேகமே. மாகாண சபையின் குறைபாடுகள் தொடர்பாக கூட்டமைப்பு இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுக்கு பல தடவை கூறியது என்பது வேறு. ஆனால், 2009ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான காலகட்டத்தல் அரசியல் தீர்வுக்கான ஆரம்பமாகக் கூறப்பட்டு புதிய நிர்வாகமாக அமைக்கப்பட்ட மாகாணசபை செயற்பட முடியாமல் உள்ளது என்ற தனது பார்வையை முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஒழுங்கு முறையாக வெளிப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

ஏனெனில், அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, விக்னேஸ்வரன் விடுதலைப் புலிகளுக்கு சார்பானவர் அல்ல என்பதும் தமிழ்த் தேசியம், தமிழ் ஈழம் என்ற கோட்பாடுகளை ஏற்றுக் கொணடவர் அல்ல என்ற கருத்தும் இந்தியா உட்பட சர்வதேச நாடுகளிடம் உண்டு. இரண்டாவது, நடைமுறை அரசியலமைப்பில் உள்ள சட்டங்களை கூட அரசு உரிய முறையில் செயற்படுத்த அனுமதிக்கவில்லை என்பதை முதலமைச்சராகவும் முன்னாள் நீதியரசர் என்ற முறையிலும் சுட்டிக்காட்டும் போது அரசினுடைய இனவாத செயற்பாடுகளை வெளிப்படுத்த முடியும். இனப்பிரச்சினை வரலாறு என்பது 2009ஆம் ஆண்டு மே மாதத்திற்கு பின்னரானது அல்ல. 1948ஆம் ஆண்டில் இருந்து இனப்பிரச்சினையின் வரலாற்றை ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு தனது அறிக்கையில் கூறியுள்ளது. ஆகவே, 1948ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சோல்பரி அரசியலமைப்பில் இருந்து தற்போது நடைமுறையில் உள்ள இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் உள்ள 13ஆவது திருத்தம் வரை தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளை விக்னேஸ்வரன் எடுத்துக் கூறும்போது அதற்கான பெறுமதி அதிகமாக இருக்கும்.

## • முதலமைச்சர் பதவி மாத்திரமல்ல

1920ஆம் ஆண்டு இலங்கைத் தேசிய இயக்கத்தின் பிளவுடன் இன முரண்பாடு தோன்றியதாக அரசியல் விஞ்ஞானத் துறை பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் தனது நூலில் கூறியுள்ளார். தந்தை செல்வா காலத்தில் நடத்தப்பட்ட அஹிம்சைப்போராட்டம் ஏன் தோல்விகண்டது, அதன் பின்னர் இளைஞர்கள் ஏன் ஆயுதம் ஏந்தினார்கள் என்பதை இதுவரை காலமும் தமிழ் அரசியல்வாதிகள் தான் கூறிவந்தனர். அதன்காரணத்தினால்தான் என்னவோ அவை தமிழ் இனவாத கருத்துக்களாக பார்க்கப்பட்டன. இன்றும் அவ்வாறான நிலைமைகள் தான் உண்டு. தமிழ்த் தேசிய கூட்டமைப்பையும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தற்போதைய அரசியல் செயற்பாடுகளையும் கூட புலிகளின் தொடர்ச்சியான அரசியலாகவே தென்பகுதி சிங்கள அரசியல் கட்சிகளும், ஏன் சர்வதேச சமூகமும் பார்க்கின்றது. ஆனால், புலிகள் இயக்கம் தோன்றுவதற்கு முன்னரே இருந்த இன முரண்பாடு ஆரம்பித்து விட்டது, தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றது என்பதை அவர்கள் ஏற்பதாக இல்லை.

> 1948ஆம் ஆண்டில் இருந்து இனப்பிரச்சினையின் வரலாற்றை ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு தனது அறிக்கையில் கூறியுள்ளது. ஆகவே, 1948ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சோல்பரி அரசியலமைப்பில் இருந்து தற்போது நடைமுறையில் உள்ள இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் உள்ள 13ஆவது திருத்தம் வரை தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதி களை விக்னேஸ்வரன் எடுத்துக் கூறும்போது அதற்கான பெறுமதி அதிகமாக இருக்கும்.

அந்தளவுக்கு ஜே.ஆர். காலத்தில் இருந்து இன்றைய மஹிந்த ராஜபக்ஷ அரசு வரை, இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுக்கு தமிழர்களுடைய அரசியல் கோரிக்கைகள் பயங்கரவாதமாக சித்தரித்திருக்கப்பட்டு வந்துள்ளன. 1948இல் இருந்து இலங்கையின் வெளியுறவுக் கொள்கையும் அவ்வாறு அமைந்துள்ளது. ஆகவே, விக்னேஸ்வரனுக்கு பாரிய பொறுப்பு ஒன்று உள்ளது. வெறுமனே வட மாகாண சபையின் முதலமைச்சர் மாத்திரமல்ல, வடக்கு கிழக்கில் வாழும் தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கு வரலாற்று ரீதியாக இழைக்கப்பட்ட அநீதிகளை இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுக்குச் சொல்ல வேண்டிய ஒரு தேவை உள்ளது. சாதாரண தமிழ் தேசிய அரசியல்வாதி என்ற கருத்தில் இருந்து விலகி இலங்கையின் முன்னாள் நீதியரசர் என்ற முறையிலும், முதலமைச்சர் என்ற ரீதியிலும் இலங்கையின் அத்தனை அரசியலமைப்புச் சட்டங்களையும் நன்கு தெரிந்தவர் என்ற முறையில் விளக்கமளிக்கும்போது அது ஏற்புடையதாகவே அமையும். அதனை தமிழ் இனவாத கருத்து என்று யாரும் முத்திரை குத்த முடியாது. ஏனெனில், அரசியல் யாப்பு ரீதியாக தமிழ் மக்கள் எவ்வாறு பழிவாங்கப்பட்டிருக்கின்றனர் என்பதை ஒரு சட்டப் புலமையாளன் வியாக்கியானம் செய்தும்போது அதில் நியாயம் இருக்கும்.

## • சம்பந்தன் கூறியது

புலிகள் நிராகரித்தார்கள் என்பதை விட இனப்பிரச்சினைக்கு தீர்வாக 13ஆவது திருத்தச் சட்டம் அமையாது என 1987ஆம் ஆண்டு தமிழ் கட்சிகள் கூறியிருந்தன. சம்பந்தன் நாடாளுமன்றத்தில் கூட சொல்லியிருந்தார். விக்னேஸ்வரன் 2001ஆம் ஆண்டு நிதியரசராக பதவியேற்ற போது மாகாண சபை முறை தீர்வு அல்ல என்று சிறந்த விளக்கம் ஒன்றையும் கொடுத்திருந்தார். புலிகள் பயங்கரவாதிகள் என்றும், பிரிவினையை கோருகின்றனர் என்றும் குற்றம் சுமத்தப்பட்டது. அதனை இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளும் ஏற்றுக் கொண்டன. பிரதமர் ராஜிவ் காந்தி கொலை செய்யப்பட்ட காரணத்தின் அடிப்படையில் புலிகள் மீது இந்தியா 1992இல் தடை விதித்தது. அதனை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்கா 1997இல் தடை வித்தது. பின்னர் இந்த நாடுகளை பின்பற்றி ஐரோப்பிய ஒன்றியம் 2002ஆம் ஆண்டு தடை வித்தது. ஆனால், ஒரு இயக்கம் மீது தடை விதிப்பதற்கான சரியான வழிமுறைகள் பின்பற்றப்படாமல் வெறுமனே ஏனைய நாடுகளை பின்பற்றி ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் புலிகள் மீது தடை விதித்தமை தவறான முடிவு என ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் கூறியுள்ளது. அதனை மீளாய்வு செய்வதற்கான கால அவசகாசமும் ஒன்றிய நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை, காங்கிரஸ் அரசு புலிகள் விடயத்தில் தவறு செய்துவிட்டது என்று முன்னாள் அமைச்சர் நட்வர்சிங் தனது நூலில் குற்றம் சுமத்தியிருந்தார். ஈழத், தமிழர் விடயத்தில் இந்தியா விட்ட பிழைகளை முன்னாள் இந்தியத் தூதுவர் தீக்சித் தனது நூலில் சுட்டிக்காட்டியிருந்தார். இவை சில உதாரணங்கள் மாத்திரமே.

> அரசியல் யாப்பு ரீதியாக தமிழ் மக்கள் எவ்வாறு பழிவாங்கப்பட்டிருக்கின்றனர் என்பதை ஒரு சட்டப் புலமையாளன் வியாக்கியானம் செய்தும்போது அதில் நியாயம் இருக்கும்.

எவ்வாறாயினும், தற்போது இறந்துபோன புலிகளை நியாயப்படுத்துவது அல்ல இங்கு பிரச்சினை. சோல்பரி அரசியலமைப்பில் இருந்து இன்றைய 13ஆவது திருத்தச்சட்டம் வரை தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றது என்பதையும், அரசியலமைப்பில் ஜனநாயகத்திற்கு முரணான சரத்துகள் உள்ளன என்பதையும் வெளிப்படுத்தும்போது 60 ஆண்டுக்கும் மேலாக இலங்கையில் இன ஐக்கியம் ஏன் சீர்குலைந்தது என்ற கேள்விக்கு இயல்பாகவே விடை கிடைக்கும். அத்துடன், புலிகள் பயங்கரவாதிகள் என்று கூறி தட்டிக்கழித்த இலங்கை அரசு, மிதவாத போக்குடைய தமிழ் இனவாத அரசியலில் ஈடுபடாத விக்னேஸ்வரனுடன் கூட இணங்கிப் போக மறுப்பதன் பின்னணியும் புரிய ஆரம்பிக்கும்.

*தினக்குரல் பத்திரிகைக்காக அ.நிக்ஸன் எழுதிய கட்டுரை இங்கு தரப்பட்டுள்ளது.*

*நன்றி - maatram.org*



# 100 நாள் ஆட்சி..

*(11ம் பக்கத் தொடர்ச்சி)*

பாதிக்கும் தரப்புக்கு அதாவது உலகம் முழுவதும் தெரியவந்ததும், ஆட்சி மாற்றத்துக்கு முன்னர் எந்தவொரு தரப்புக்கு எதிராக முழுக் குற்றச்சாட்டுக்களையும் தொகுத்தார்களோ, அந்தத் தரப்பு மீள வந்துவிடும் என வெருட்டியே தமிழர்களுக்கு எல்லையிடுகிறார்கள். இனியும் அதைத்தான் கேட்கப் போகிறார்கள். பொதுத் தேர்தல் வரையிலும் தமிழ் மக்கள் சுதாகரிக்க வேண்டும் என்பர்.

ஆனால் கடந்த தேர்தலில் தமிழர்கள் அளித்த வாக்குகள் தீர்க்கப்படாத பழிவாங்கல் உணர்ச்சி. அதையொரு புத்திசாலித்தனமிக்க முடிவென்று கூட நாம் எடுக்க முடியாது. அது மாற்றத்துக்கான வாக்குகள் என்பதை விட, ராஜபக்ச சகோதரர்களுக்கு எதிரானஉணர்ச்சி.

இதற்கு முன்னரும் சிங்கள தலைவர்கள் அடிக்கடி ஆட்சி மாற்றத்துக்குள்ளாகியிருக்கிறார்கள். அப்போது ஜனாதிபதிகளின் வெற்றியையும், தோல்வியையும் தீர்மானித்தது யுத்த களம்தான். யுத்தகளத்தில் அவர்கள் தோற்கையில் ஜனாதிபதிக்கான போட்டியிலும் தோற்றார்கள். தமிழ்மக்களைப்பொருத்தவரை, யுத்த களத்தில், ஒருகட்டத்தில் தோற்றுப் போனாலும், இன்னொரு கட்டத்தில் தம்மை வெற்றி கொண்ட அதே சிங்களத் தலைமையை வென்றார்கள். ஆனால்ராஜபக்சசகோதரர்களின் வருகை, தமிழர் பக்கமிருந்து வெற்றியை உறுதிப்படுத்திய தரப்பையே இல்லாமல் செய்துவிட்டது. ஆகவே தமிழர்களுக்கு இதுவொரு தீர்க்கப்படாத பழிவாங்கும் உணர்ச்சி. இந்தப் பழிவாங்கும் உணர்ச்சி நீண்டகாலத்துக்கு நீடிக்கப்போகின்றது.

இவ்வாறு தமிழ் மக்கள் எப்போதும் ராஜபக்சக்களுக்கு எதிராக இருக்கிறார்கள் என்பது மேற்குநாடுகளுக்கும், இந்தியாவுக்கும் சாதகமான அம்சம். இதை வைத்துக்கொண்டு இலங்கையில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த, அரசியல் தலைவிதியை தீர்மானிக்க தமிழர்களிடமிருந்து நிபந்தனையற்ற ஆதரவை அவர்கள் பெறுகின்றார்கள். கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் இதுவே நடந்தது. தமிழர்கள் எந்த நிபந்தனையுமின்றி வாக்களித்து பெரும் இராஜதந்திரத் தவறுக்குரியவர்களானார்கள். இதேநிலைமைதான் மீளவும் உருவாகிறது. அடுத்துவரும் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு வெளியில் நின்று தேர்தலில் போட்டியிட்டு, வென்றதன் பின்னர் அரசுக்கு வெளியில் நின்று ஆதரவு கொடுக்க வேண்டிவரும். இவ்வாறு ஆதரித்தால் மாத்திரமே ராஜபக்ச சகோதரர்களுக்கு எதிரான பொது எதிரணி நின்று பிடிக்க முடியும். எனவே சர்வதேசத்துக்குத் திரும்பத் திரும்ப தமிழ் மக்களின் தேவையிருக்கிறது. ஆனால் தமிழ் மக்களின் அடிப்படை உரிமை பற்றிபேசயாரும் தயாரில்லை. ஓர் எழுத்துமூலமான ஆவணம் கூட இல்லை. நூறு நாள் திட்டத்திலோ, அதற்குப்பின்னர் இனிவரப் போகின்ற பொதுத்தேர்தல் வரையிலான காலத்திலோ அதற்கான சாத்தியங்கள் இல்லை.

மேற்கு நாடுகளுக்கும், இந்தியாவுக்கும் ஒரு காரியம் நிறைவேறிவிட்டது. தமிழ் மக்களிடம் செல்வாக்குப்பெற்ற, தங்களால் கையாளக் கடினமான ஒரு தரப்பை, சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த, தங்களால் கையாளக்கடினமான தரப்பொன்றின் மூலம் தோற்கடித்தார்கள். பின்னர் சிங்கள மக்கள் மத்தியில் இருந்த கையாள இலகுவான தரப்பொன்றைப் பயன்படுத்தி, கையாள கடினமான தரப்பை தோற்கடித்தார்கள். இப்போது இலங்கைத் தீவு அவர்களுக்கு முழுமையாகத் திறக்கப்பட்டுவிட்டது. 2009 மே மாதத்துடன் தமிழ் பகுதிகள் அவர்களுக்கு திறக்கப்பட்டுவிட்டது. இப்போது முழு இலங்கையும் திறக்கப்பட்டுவிட்டது. ஆனால் இந்த நிலைமையைப் பாதுகாக்க வேண்டுமானால், ராஜபக்ச சகோதரர்கள் மீள எழாதபடிக்கு கீழே கொண்டு செல்ல வேண்டும். அதற்கான காட்சிகளையே இப்போது காண்கிறோம்.

அவர்களின் இப்போதைய முழுத் தேவையும் மாற்றத்தைப் பலப்படுத்துவதும், அதனைக் காப்பதற்கான பங்காளிகளைக் கூட்டுச்சேர்ப்பதும் ஆகும். அவர்களுடைய நிகழ்ச்சிநிரலுக்குள் இப்போது தமிழ் மக்கள் இல்லை. ஐநா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நீர்த்துப் போனமைக்கும், இனி கொண்டுவரப்போவதாக சொல்லப்படும் தீர்மானம் குறித்த காலப்பகுதியில் கொண்டுவரப்படமுடியாமல் இருப்பதற்கும் இதுவே காரணம். அப்படியொரு காரமான தீர்மானத்தைக் கொண்டுவந்தால் மாற்றத்துக்கான அணியில் இருப்பவர்களுக்கும் பிரச்சினை வரும். எனவே இந்த மாற்றத்துக்கான அணியைப் பாதுகாப்பவர்களுக்கு அவர்களைத் தண்டிக்க வேண்டிய, விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த இடத்தில் தமக்கு சார்பான ஆட்சிமாற்றத்திற்கானவர்களை பாதுகாப்பதா? தமிழர்களின் உரிமையைப் பாதுகாப்பதா என்கிற கேள்வி மேற்கு நாடுகளிடத்தும், இந்தியாவிடத்தும் எழுகிறது. கொழும்பை கையாளுவதுதான் அவர்களின் தேவையே தவிர, தமிழர்களல்ல. ரணில்- பிரபா உடன்படிக்கை தவிர இதுவரையான அனைத்து இனப்பிரச்சினை தீர்வு பேச்சுக்களிலும் கொழும்பை கையாளுவதுதான் மையமாக இருந்ததே தவிர, தமிழர்களல்ல. 2009க்குப் பின்னரான நிலைமையும் அதுதான். கொழும்பை கையாளுவதற்காகத் தமிழர் பிரச்சினையைக் கையிலெடுத்தார்கள். அதில் கணிசமான முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறார்கள். இப்போதும் மாற்றத்தின் உறுதித் தன்மையை பேணுவதாயின் தமிழர்களின் பிரச்சினை குறித்துப் பேசக் கூடாது. மொத்தத்தில் அவர்களினுடைய நிகழ்ச்சி நிரலுக்காகத் தமிழ் மக்களினுடைய நிகழ்ச்சி நிரல் பின்தள்ளப்படுகின்றது?.

இந்த இடத்தில் தமிழர்கள் விளங்கிக்கொள்ள வேண்டிய ஒரு விடயமும் இருக்கின்றது. மஹிந்த ராஜபக்சவை மாற்றுவதனால் மட்டும் இன முரண்பாட்டிற்குத் தீர்வு வந்துவிடப்போவதில்லை. மஹிந்த ராஜபக்ச பௌத்த மேலாதிக்கவாதக் கட்டமைப்பின் ஒரு கருவிதான். அந்த சிங்கள பௌத்த மேலாண்மைவாதக் கட்டமைப்பு எப்போதும் பலமாகவே இருக்கிறது. அது பலமாக இருக்கின்றபடியினால்தான் 19 ஆவது சீர்திருத்தத்தைக் கொண்டுவர முடியவில்லை. ராஜபக்சக்களை தண்டிப்பதனால் மட்டும் சிங்கள பௌத்த மேலான்மைவாதம் பலவீனப்பட்டுவிடும் என்று சொல்ல முடியாது. எந்த அரசு மாறினாலும் அந்த அடிப்படைக் கட்டமைப்பில் இருந்துதான் செயற்படமுடியும். ஆட்சியாளர் எவ்வளவுதான் முற்போக்குவாதிகளாக பீடமேறினாலும், அவர் சிங்கள மேலான்மைவாதத்தின் கைதியாகவே தொழிற்பட முடியும். அதனால்தான் நூறு நாள் வேலைத்திட்டம் தோல்வியை சந்தித்தது. அந்தத் தோல்வியை மறைக்கவே ராஜபக்சக்கள் மீதான கைதுகள் நடக்கின்றன. சிங்கள பௌத்த மேலான்மைவாதம் மிகவும் கட்டமைப்புப் பெற்ற வகையில் தொழிற்படுவதனால் இந்தக் கைதுகள் கூட ராஜபக்சக்களுக்கே சாதகமாக மாறிவிடும் வாய்ப்பு இருக்கின்றது?.

பௌத்த மேலான்மைவாதத்தை தோற்கடிப்பதன் ஊடாகவே நிலையான நல்லிணக்கத்தை, இனப்பிரச்சினை தீர்வு ஏற்படுத்த முடியும் என்ற சிந்தனை ஏற்றுக்கொள்ளத்தக்கவொன்று. அதுவே இந்தப் பிரச்சினையின் மூலத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ளவும் உதவுகின்றது. ஆனால் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற தமிழ் தேசிய கூட்டமைப்பு எவ்வாறான அரசியல் நிலைப்பாட்டுடன் இந்த அரசாங்கத்துக்கு தன் முழு ஆதரவையும் வழங்கி வரவேற்றது என்ற கேள்வியும், இனப்பிரச்சினை தீர்வுக்கு அப்படி என்னதான் இந்த அரசிடம் உண்டு என்பதையும் கேள்வியாக எழுப்பலாம். ஆனால் அதற்குபதில் தரக்கூடிய தரப்புக்களிடமிருந்து பதில் கிடைக்கவில்லை.

## புவிசார் அரசியலின் உச்சத்தில்தான் ஆட்சிமாற்றம் நிகழ்த்தப்பட்டது

*சட்டத்தரணி சி. யோதிலிங்கம்*

*ஆய்வாளரும், அரசியற் செயற்பாட்டாளருமான சட்டத்தரணி சிவசுப்பிரமணியம் யோதிலிங்கம் வழங்கிய கருத்தினை இங்கு தருகிறோம்.*

'புதிய அரசாங்கத்தின் 100 நாள் அரசியல் என்பது முழுக்க முழுக்க சிங்கள அரசியலையே மையமாகக் கொண்டிருந்தது. இந்த 100 நாட்களில்' பிரதானமாக நான்கு விடயங்கள் முக்கிய பேசுபொருளாக இருந்தன.

19 ஆவது திருத்தம், 20 ஆவது திருத்தம் என அழைக்கப்படுகின்ற தேர்தல் மறுசீரமைப்பு, மஹிந்தவின் மீள் எழுச்சி, ஜே.வி.பிக்குள் ஏற்பட்ட உடைவு என்பவையே அவை.

19 ஆவது சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில் இரண்டு விடயங்கள் முக்கியத்துவம் பெற்றவையாக இருந்தன. ஒன்று நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை மாற்றுதல், இரண்டாவது சுதந்திர ஆணைக்குழுக்களை உருவாக்குதல். இதில் சுதந்திர ஆணைக்குழுக்களை உருவாக்குவதில் முரண்படாத சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர், தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவந்த பின்னரே 19 ஆவது சீர்திருத்த சட்டத்துக்கு தாம் ஆதரவு வழங்க முடியும் எனக் கூறியிருக்கின்றனர். அதற்கு அவர்கள் முன்வைத்த காரணம் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் கீழ் எந்தவொரு கட்சியும் பாராளுமன்ற தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை ஆசனங்களைப் பெறுவது கடினம். எனவே அந்தக் கடினமான சூழலில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைதான் அரசாங்கத்துக்கு ஓர் அரசியல் உறுதிப்பாட்டை வழங்குகின்றது. ஆகவே நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை மாற்றும்போது தேர்தல் முறையை மாற்றாமல் வந்தால் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாதபோது கூட்டரசாங்கம் அமைக்க வேண்டிய நிலை வரும். கூட்டரசாங்கத்தில் இணைந்துகொண்ட கட்சிகளிடையே முரண்பாடுகள் ஏற்பட்டால் நாட்டினுடைய அரசியல் உறுதித்தன்மை பலவீனமடையும். ஆகவே நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை மாற்றுவதென்றால் தேர்தல் முறையையும் மாற்றவேண்டும் என அவர்கள் இதற்கு நியாயம் கூறுகின்றனர்.

**மஹிந்தவுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கடிகளிலிருந்து தப்புவதற்கும், அவருக்கு சார்பாக எழுந்திருக்கும் மக்கள் ஆதரவைப் பயன்படுத்திக்கொள்ளவுமே அவர் விரும்புவார். எனவே எதிர்வரும் தேர்தலில் அவர் போட்டியிடுவார் என்றே நான் கருதுகின்றேன். அதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தை எடுப்பதற்கு முயற்சி செய்தார். ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முந்திக் கொண்டார்.**

ஆனால் இதற்குப் பின்னால் அரசியல் உள்ளது போலுள்ளது. விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை ஐக்கிய தேசியக் கட்சிக்குத்தான் சாதகமானது. அந்தக் கட்சிக்கு சிங்கள மக்களைவிட ஏனைய தமிழ், முஸ்லிம் மக்களிடமும் கணிசமான வாக்கு வங்கி இருக்கின்றது. இதனாலே அவர்களின் வாக்குகள் அதிகரிப்பதற்கான சூழல் இருக்கின்றது. எனவே வாக்குவீதத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு தேர்தல் முறை எப்போதும் ஐக்கிய தேசியக் கட்சிக்குத்தான் சார்பாக இருக்கும்.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து நாம் இதனை அவதானிப்போமாக இருந்தால் 1956 ஆம் ஆண்டு தேர்தலைத் தவிர ஏனைய தேர்தல்களில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியமைத்தாலும் கூட வாக்குவீதம் ஐக்கிய தேசியக் கட்சிக்குத்தான் கூடுதலாக இருந்தது. குறிப்பாக 1970 ஆம் ஆண்டு தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி 91 ஆசனங்களைப் பெற்றிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு 18 ஆசனங்கள்தான் கிடைத்தது. ஆனால் வாக்கு வீதத்தின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சி 38 வீதமான வாக்குகளையும், சிறீலங்கா சுதந்திரக் கட்சி 37 வீதமான வாக்குகளையுமே பெற்றிருந்தது. ஆகவே இந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை தங்களுக்கு எப்போதும் சாதகமாக இருக்கும் என்பதனாலேயே ஜே.ஆர்.ஜெயவர்தனா இந்த முறையைக் கொண்டு வந்தார். ஆகவே இந்தக் காரணங்களினால்தான் சிறீலங்கா சுதந்திரக் கட்சி இப்போது இதனைக் கடுமையாக எதிர்க்கின்றது போல தெரிகின்றது.

**சீனா இவ்வளவு நீதி மூலங்களையும் இலங்கையில் செலவழித்துவிட்டு வெறுமனே பார்த்துக்கொண்டிருக்காது.**

மஹிந்தவின் மீள் எழுச்சியைப் பொறுத்தவரை, போர் வெற்றியின் கதாநாயகன் மஹிந்த ராஜபக்ச தான். அவர் சென்ற தேர்தலில் தோல்வியடைந்திருக்கலாம். ஆனால் சிங்கள மக்கள் மத்தியில் அவர் தோல்வியடையவில்லை. போர் வெற்றிக்குப் பின்னர் 2010 ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் கணிசமான வாக்குகள் மஹிந்த ராஜபக்சவுக்கு விழுந்துகொண்டிருந்தது. ஆனால் கடந்தமுறைநடந்த தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சிக்கு சொந்தமான வாக்குகள் மீளவும் அந்தக் கட்சியிடம் வந்தமைதான் காரணம். அத்துடன் வடக்கு, கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளும் ஒரு காரணம். ஆனால் கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வந்த வாக்குகள் மீளவும் மஹிந்த ராஜபக்சவை நோக்கி செல்வதற்கான ஏதுநிலைகள் உருவாகி வருவதாகத் தென்னிலங்கை அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். மஹிந்த ராஜபக்ச தமிழ் மக்களின் வாக்குளினால் தோற்கடிக்கப்பட்டமை சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

மஹிந்தவுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கடிகளிலிருந்து தப்புவதற்கும், அவருக்கு சார்பாக எழுந்திருக்கும் மக்கள் ஆதரவைப் பயன்படுத்திக்கொள்ளவுமே அவர் விரும்புவார். எனவே எதிர்வரும் தேர்தலில் அவர் போட்டியிடுவார் என்றே நான் கருதுகின்றேன். அதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தை எடுப்பதற்கு முயற்சி செய்தார். ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முந்திக் கொண்டார். ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தலைவர் பதவியை அவர் எடுத்துக் கொண்டார். ஆகவே மஹிந்த வெற்றிலைச் சின்னத்தைப் பயன்படுத்த முடியாது. இதனால் பொதுஜன முன்னணியின் சின்னமான கதிரை சின்னத்தில் மஹிந்த ராஜபக்ச போட்டியிடவே முயற்சிப்பதாகத் தெரிகின்றது. அப்படி போட்டியிட்டால் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் 75 வீதமான வாக்குகள் மஹிந்த ராஜபக்சவுக்கு விழுவதற்கே வாய்ப்புகள் உண்டு. எனவே மஹிந்த ராஜபக்சவின் மீள் எழுச்சி சாத்தியப்பட்டுக்கொண்டிருப்பதாகவே தெரிகின்றது. அதற்கான எாய்நகர்த்தல்களாகவே தெற்கில் இப்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் கொதிநிலை அவதானிக்கப்படுகின்றது. அத்துடன் ஜே.வி.பியிலிருந்து உடைந்து சென்ற சோமவன்சவும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிருப்தியாளர்களும் மஹிந்தவுக்கு ஆதரவளிப்பர் என்றே கருதுகின்றேன்.

இதில் புவிசார் அரசியல் விடயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். சீனா இவ்வளவு நீதி மூலங்களையும் இலங்கையில் செலவழித்துவிட்டு வெறுமனே பார்த்துக்கொண்டிருக்காது. எனவே அந்த நாடு எப்போதும் தன் விசுவாசியான மஹிந்த ராஜபக்சவுக்கு சாதகமாக இருக்கவே செய்யும். தென்னாசியாவைப் பொருத்தவரையிலும் சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் பெரும் பனிப்போர் நடப்பது அனைவரும் அறிந்ததே. மாலைதீவில் சீனாவுக்கு சார்பான தலைவர்தான் ஆட்சியில் இருக்கிறார். இந்தியாவுக்கு சார்பான தலைவர் தூக்கியெறியப்பட்டார். இலங்கையில் சீனாவுக்கு சார்பான தலைவர் தூக்கியெறியப்பட்டு, இந்தியாவுக்கும் மேற்கிற்கும் சாதகமான தலைவர் ஆட்சிக்கு கொண்டுவரப்பட்டார்.

எனவே இந்த ஆட்சிமாற்ற போட்டியும் நீடித்து நிலைக்கப் போகின்றது. உலகளவில் அமெரிக்கா - சீனப் பனிப்போரும், பிராந்திய அளவில் சீன - இந்திய பனிப்போரும், தேசிய அளவில் சிங்கள - தமிழ் பனிப்போரும் இலங்கையை மையப்படுத்தி உச்சம் பெற்ற ஒரு காலமாகவே இந்த 100 நாள் ஆட்சி இருந்தது?

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. 28 வயது, 5'8" EU visa Graduate working as a Team leader in a Super market in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5423

2. 37 வயது, 6'1" Divorced graduate discreation leave to remain visa eligible to apply permanent residence and living in uk for the past 17 years and doing business தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5420

3. 35 வயது, 5'8" Divorced British citizen self employed graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5418

4. 30 வயது, 6'1" work permit visa Engineer living in Singapore தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5414

5. 44 வயது, 5'7" Divorced German citizen driver living in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5410

6. 31 வயது, 5'8" Permanent residence graduate working as a support engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4927

7. 30 வயது, 5'10" US citizen graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5407

8. 30 வயது, 5'6" British citizen Doctor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5406

9. 51 வயது, 5'8" Divorced permanent residence in Ireland Graduate managing director in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5405

10. 30 வயது, 5'8" student visa Engineer in uk தகுந்த மணமகளை தேடுகின் றனர் Ref: 5403

11. 35 வயது, 5'6" student visa Graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5395

12. 53 வயது, 5'7" Permanent residence in uk widower living with his daughter and working as a caretaker in a school தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5383

13. 31 வயது, 6'0" Business visa graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5395

14. 38 வயது, 5'5" Divorced Born and brought up in uk Engineer working as a company director தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5393

15. 37 வயது, 5'6" living in Uk for the past 17 years Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4633

16. 33 வயது, 5'7" Permanent residence in uk working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5383

17. 31 வயது, 5'8" Student visa self employed graduate தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5378

18. 34 வயது, 5'8" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5372

19. 37 வயது, 5'3" British citizen working as a manager in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5371

20. 27 வயது, 5'10" 3 year Entreprenuer visa Engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5370

21. 37 வயது, 5'4" Asylum seeker living in uk for the past 14 years தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5364

22. 37 வயது, 5'11" British citizen working in a company தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5355

23. 37 வயது, 5'11" British citizen working in a IT company தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5352

24. 35 வயது, 5'6" Born and brought up in uk Accountant தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 4788

25. 31 வயது, 5'7" British citizen graduate self-employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5350

26. 32 வயது, 5'4" British citizen graduate working as a graphic designer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5348

27. 33 வயது, 5'9" Entrepreneur visa graduate working in a IT company தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5339

28. 32 வயது, 5'4" British citizen Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5338

29. 32 வயது, 5'4" Permanent residence Engineer தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5337

30. 29 வயது, 5'10" Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5336

31. 46 வயது, 6'0" Permanent residence working as machine operator in a company தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5334

32. 32 வயது, 5'10" HSMP visa graduate working in IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5197

33. 41 வயது, 5'1" Permanent residence graduate working in a retail company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5327

34. 29 வயது, 5'7" British citizen graduate working in a company தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5325

35. 33 வயது, 5'8" permanent residence self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5319

36. 31 வயது, 5'8" Born and brought up in uk Teacher தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5288

37. 32 வயது, 5'7" Graduate Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின் றனர் Ref: 5314

38. 26 வயது, 5'10" Graduate student visa working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5296

39. 35 வயது, 5'2" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5298

40. 35 வயது, 5'9" Asylum seeker Engineer in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5294

41. 31 வயது, 5'11" Work permit visa working as a civil engineer in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5290

42. 37 வயது, 6'0" British and Australia citizen divorced working in a IT department living in Australia தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5284

43. 28 வயது, 5'8" work permit visa Accountant தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5281

44. 46 வயது, 5'7" British Citizen working in a company தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5275

45. 34 வயது, 5'7" Graduate, Student visa in uk, working as a sale assistance, divorced தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5274

46. 52 வயது, 5'10" British citizen in uk graduate working in a medical sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5263

47. 33 வயது, 5'5" Permanent Resident in uk, working in a shop தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5267

48. 32 வயது, 5'5" Self employed living in srilanka தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5265

49. 23 வயது, 5'3" born and brought up in uk working in NHS தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5261

## மணமகன் தேவை

1. 29 வயது, 5'6" British citizen Graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5417

2. 27 வயது, 5'5" British citizen MBBS doctor தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 5413

3. 30 வயது, 5'1" British citizen Graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5400

4. 30 வயது, 5'10" German citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5399

5. 25 வயது, British citizen graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5398

6. 28 வயது, 5'2" British citizen graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5397

7. 30 வயது, 5'6" Graduate nurse living in sri lanka தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5391

8. 25 வயது, 5'4" German citizen doctor living in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5376

9. 42 வயது, 5'2' Permanent residence in uk divorced working in a factory தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5374

10. 27 வயது, 5'6" Born and brought up in uk lawyer தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5360

11. 29 வயது, 5'4" student visa graduate working as a accountant தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5354

12. 32 வயது, 5'3" British citizen Graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5345

13. 26 வயது, 5'3" British citizen Graduate Medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5343

14. 25 வயது, 5'0" British citizen Graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5331

15. 35 வயது, 5'2" Born and brought up in uk lawyer தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5329

16. 22 வயது, 5'2" இந்தியாவில் வசிக்கும் இலங்கை மணமகளுக்கு (Engineer) தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5317

17. 23 வயது, 5'2" British citizen Graduate working in a company மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5225

18. 28 வயது, 5'3" Discretion leave to remain visa 3 year visa eligible to apply permanent residence in uk graduate accountant தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 1243

19. 31 வயது, 5'2" British citizen Graduate working in a medical sector மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4388

20. 25 வயது, 5'0" பிறப்பிலிருந்து வாய் பேச முடியாத மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5299

21. 30 வயது, 5'0" Graduate working as a Technical officer in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5291

22. 21 வயது, 5'1" இந்தியாவில் வசிக்கும் இலங்கைப் பெண்ணுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5236

23. 30 வயது, 5'1" British citizen Graduate working as a Medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5282

24. 29 வயது, 5'5" Graduate divorced living in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5264

25. 40 வயது, 5'6" Teacher in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5259

26. 30 வயது, 5'4" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5252

27. 29 வயது, 5'3" lawyer working in Australia தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5246

28. 24 வயது, 5'5" Graduate german citizen தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 5245

29. 24 வயது, 5'5" Engineer living in India தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 4902

30. 24 வயது, 5'3" British citizen accountant working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5215

31. 43 வயது, 5'4" British citizen divorced working as a care coordinator in uk தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5189

32. 29 வயது, 5'5" British citizen doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5169

33. 33 வயது, 5'4" British citizen graduate student தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5162

34. 30 வயது, 5'7" British citizen chatered accountant in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5158

35. 29 வயது, 5'5" British citizen doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5154

36. 33 வயது, 5'7" Canadian citizen graduate working in a mediacal sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5125

37. 39 வயது, 5'3" German citizen graphic designer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4132

38. 29 வயது, 5'8" British citizen graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

39. 25 வயது, 5'3" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5126

40. 47 வயது, 5'6" British citizen working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5117

41. 30 வயது, 5'4" German citizen working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5089

42. 29 வயது, 5'5" British citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5086

43. 49 வயது, 5'3" british citizen divorced working as a cashier தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5077

44. 25 வயது, 5'3" British citizen graduate working in a private company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3575

45. 41 வயது, 5'5" british citizen divorced தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5075

46. 29 வயது, 5'3" british citizen accountant தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5073

47. 33 வயது, 5'0" Graduate, Working in Government sector in Colombo தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5049

48. 24 வயது, 5'3" british citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5070

49. 25 வயது, 4'7" asylum seeker in uk தகுந்த மணமகனை தேடுகின்றன ர் Ref: 5065

50. 40 வயது, 5'4" Graduate, Malaysian Nationality, PR in Australia, Working as a Doctor in Auatralia தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5010

51. 42 வயது, 5'2" British citizen divorced living with 2 children தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5064

52. 25 வயது, 5'5" British citizen, looking after the business தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5059

53. 26 வயது, 5'3" Graduate, British citizen தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 5054

54. 28 வயது, 5'2' Graduate, British citizen, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5053

55. 21 வயது, 5'3" Residing in Srilanka, studied computer course தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5052

56. 24 வயது, 5'2" Graduate, Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5047

57. 27 வயது, 5'0" Residing in Srilanka, Completed Olevel தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5042


58. 37 வயது, 5'2" Graduate, Working as a Teacher in Colombo தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5012

59. 35 வயது, 5'4" Graduate, Working as a Teacher in Srilanka தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4827

60. 35 வயது, 5'6' Canadian citizen accountant தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5020

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# குருதிக் கொழுப்பு (Cholesterol)




**மாசிலாமணி**

*(ஒரு பேப்பருக்காக)*

குருதிக்கொழுப்பு என்பது எமது ஒவ்வொரு உயிர்க்கலத்திலும் காணப்படும் பொருள். இது மெழுகுத்தன்மையும் கொழுப்புத்தன்மையும் கொண்டது. ஹோமோன் சுரப்பிகள் உற்பத்திக்கு இன்றியமையாதது. உயிர்ச்சத்து டியின் உற்பத்திக்கு இன்றியமையாதது. உணவுச் செரித்தலுக்கு தேவையான சில பொருட்களின் உற்பத்திக்கும் இன்றியமையாதது. உயிர்க்கலங்களின் வெளி உறைக்கு உருவம் கொடுப்பதும் இப்பொருளே. மொத்தத்தில் நாம் உயிர்வாழ இது இன்றியமையாத பொருள். எமது உடல் இதை உற்பத்தி பண்ணுகிறது. நாம் உண்ணும் உணவுகள் மூலமும் எமக்குக் கிடைக்கின்றது.

எமது குருதிபோல் உடல் முழுவதற்கும் இந்தக் குருதிக்கொழுப்பும் செல்கிறது. இதன் மெழுகொத்த தன்மைமையும் கொழுப்புத் தன்மையும் இதை நீர்த்தன்மை கொண்ட குருதியுடன் இரண்டறக் கலக்க விடாது. அதனால் சிறு லிப்போ புரதக் துகள்களாகவே இது உடல் முழுவதும் செல்கிறது. மறு வார்த்தையில் சொல்வதானால் லிப்போ புரதங்கள் இதன் காவிகளாகப் செயற்படுகின்றன.

குறைந்த அடர்த்திகொண்டவை, (எல்டிஎல்) உயர்ந்த அடர்த்திகொண்டவை (எச்டிஎல்) என இந்த லிப்பொ புரதங்கள் இருவகைப்படும். இதில் குறைந்த அடர்த்திகொண்ட லிப்போ புரதத்தினை தரம் குறைந்த புரதம் என்பார்கள். குறைந்த தரமோ கூடிய தரமோ முக்கியம் அல்ல, இரண்டினதும் அளவு ஒரு சீருடன் இருப்பதுதான் உடல் நலனுக்கு முக்கியம். உயர் அடர்த்தி லிப்பொ புரதத்தின் குருதிக் கொழுப்பு மற்றைய பகுதிகளிலிருந்து ஈரலுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. ஈரலின் செயற்பாட்டால் தேவையற்றவை அங்கிருந்து வெளியேற்றப்படுகிறது. இந்தச் செயற்பாட்டிற்கு வழிவகுப்பதால் எச்.டி.எல்லை நல்ல குருதிக் கொழுப்பு என்று அழைக்கிறார்கள்.

**குருதிக் கொழுப்பு விடயத்தில் நீரிழிவு நோய் உள்ளவர்களும் சிறுநீரகக் கோளாறு உள்ளவர்களும் கூடிய அவதானத்துடன் இருக்க வேண்டும்.**

உடலுக்கு அனுகூலமானது, இன்றியமையாதது குருதிக்கொழுப்பு. ஆனால் அதுவே அளவுக்கு மிஞ்சும்போது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். அது தேவைக்கதிகமாக இருப்பதைக் காட்டும் அறிகுறிகள் எதுவுமே எமக்கு தெரியாமல் இருப்பதுதான் இதிலுள்ள இன்னொரு ஆபத்தான அம்சம். ஆகையால் நாம்தான் மிகவும் அவதானத்துடன் எமது குருதியில் குருதிக்கொழுப்பு தேவைக்கதிகமாக இருக்கின்றதா என்பதை கண்டறிய வேண்டும். அப்படிக் கண்டறிய ஒரே ஒரு வழி, இரத்தப் பரிசோதனைக்கு உள்ளாகுதல்தான். அதுவும் அதிகாலை இடைவெளிவிடாது செய்ய வேண்டும். குருதிக் கொழுப்பு கூடுதலாக இருக்கும் என்று சந்தேகப் படுபவர்கள் மட்டும் தான் இரத்தப் பரிசோதனை செய்ய வேண்டும் என்பதல்ல. 20 வயதுக்கு கூடிய ஒவ்வொருவரும் ஐந்து ஆண்டுக்கு ஒருமுறையாவது குருதிக் கொழுப்பிற்கான இரத்தப்பரிசோதனை மேற்கொள்ளவேண்டுமென்று மருத்துவத்துறை சிபார்சு செய்கிறது.

குருதியில் கூடுதலான குருதிக்கொழுப்பு இருப்பதே இருதய நோயின் தொடக்கக் கல். கூடிய குருதிக்கொழுப்புடன் கல்சியம் மற்றைய கொழுப்பு வகைகளும் வேறு பொருட்களும் சேர்ந்து இரத்தம் இதயத்திலிருந்து வெளியேறும் குழாய்களின் சுவர்களில் படிவங்களாகப் படியத் தொடங்கும். குழாய்கள் சிறுத்து இரத்தம் வெளியேறும் பரப்பின் குறுக்கு விட்டம் குறைய வழி வகுக்கப்படுகிறது. சில ஆண்டுகளில் இரத்தக் குழாய்களின் உள் பக்கம் மேலும் சுருங்குவதுடன் படிந்த படிவம் காலப் போக்கில் வைரமடையவும் செய்கிறது. வைரமடையும் படிவங்கள் வெடிக்கும் சாத்தியமும் உண்டு. அப்படி வெடிப்பு ஏற்பட்டால் அதன் விளைவால் அவ்விடங்களில் இரத்த உறைவு ஏற்பட்டு ஓட்டம் தடைபடும் நிலைகூட ஏற்படலாம்.

இப்படியான இரத்த உறைவினால் இரத்த ஓட்டம் முற்றாகத் தடைபடும் அல்லது வெகுவாகக் குறையும். விளைவு மார்பில் வலி தோன்றும். கழுத்து, முதுகு ஆகியவற்றிலும் கூட வலி எற்படலாம். தடையை எடுக்க உடன் நடவடிக்கை எடுக்காவிட்டால் விளைவு பாரதூரமானதாகி இறப்பும் நிகழலாம். இக்கட்டுரை குருதிக்கொழுப்பின் தாக்கம்பற்றிய தகவல் என்பதால் விளைவுகள் பற்றிய விபரம் தேவையில்லை.

இந்தப் படிவங்கள் இருதயத்திலிருந்து வெளியேறும் குழாய்களில் மட்டுமல்ல மூளைக்குச் செல்லும் குழாய்களிலும் நிகழலாம். அப்படியான நிகழ்வு ஏற்படும்போது அது ஞாபக மறதி சம்பந்தப்பட்ட நோய்களை தோற்றுவிப்பதுடன் உறைவாக மாறும்பட்சத்தில் ஒரு பக்கக் கைகால்களை இழுக்கும் நிலையையும் தோற்றுவிக்கலாம்.

குருதியில் கூடுதல் குருதிக்கொழுப்பு உள்ள தம்பதியினர் பெற்றோராக வர விரும்பும்போது எடுக்கும் உணவுகளில் குருதிக்கொழுப்பை கூட்டாத உணவு வகையாகத் தேர்ந்து கொள்ள வேண்டும். பெற்றோராகும் வாய்ப்பை குருதிக் கொழுப்பு தாமதப்படுத்துவதாக ஆய்வுகள் கூறுகின்றன. பொரித்த பொருள்களில் குருதிக் கொழுப்பு அதிகரிக்கும். புட்டு என்றதும் கத்தரிக்காய் பொரிக்க முற்படுபவர்கள் அவர்களை அறியாமலே தங்கள் இரத்தத்துடன் கொலஸ்ரோலை கூட்டுகிறார்கள்.

குருதிக் கொழுப்பைக் குறைக்க நாம் உண்ணும் உணவை கவனத்துடன் தேர்ந்தெடுக்க வேண்டும். இறைச்சி வெண்ணை போன்ற பாலுணவுகளுடன் முட்டைக்கரு ஆகியவற்றக் குறைப்பதுடன் உணவின் வகைகளையும் கூட்டி நார்ச் சத்தையும் அதிகரிக்க வேண்டும். ஒழுங்கான தேகப் பயிற்சி மூலமும் மற்றைய வழிவகைகள் மூலமும் உடற்பருமனையும் எடையையும் குறைக்க வேண்டும். சிலருக்கு மரபுக் கோளாறு காரணமாகவும் குருதிக் கொழுப்பு கூடும் நிலை ஏற்படுவதுண்டு. அப்படியானவர்கள் நேரடி மருத்துவக் கண்காணிப்பின் கீழ் செயற்பட வேண்டும்.

குருதிக் கொழுப்பு விடயத்தில் நீரழிவு நோய் உள்ளவர்களும் சிறுநீரகக் கோளாறு உள்ளவர்களும் கூடிய அவதானத்துடன் இருக்க வேண்டும். கர்ப்ப காலங்களில் ஹோமோன்கள் கூடிக் குறைவதும் குருதிக்கொழுப்புக் கோளாறை உருவாக்கும். சில மருந்துகளைப் பயன்படுத்தும்போது மருத்துவ ஆலோசனை பெற வேண்டும். எல்டிஎல் எச்சிஎல்லைக் கூட்டிக் குறைக்கும் தன்மை அவற்றிற்கும் உண்டு. எல்டிஎல் 160 மில்லிக்கிராமிற்கு கூடினால்தான் கூடிய கொல்ரோல் என்பார்கள். இரண்டு வகையும் சேர்ந்து 200 மில்லி கிராம் வரை இருந்தால் அதை சீரான நிலையாகக் கொள்ளலாம். இந்த கொலஸ்ரோல் அளவு கூடிக் குறைதல் வயது, பால் ஆகியவற்றைப் பொறுத்தும் வேறுபடும்.

கூடிய கொலஸ்ரோல் உடையவர்கள் முன்னுரிமை கொடுத்துத் தவிர்க்கவேண்டியது புகைத்தல். புகைத்தல் நல்ல லிப்போ புரதமாக எச் டி எல்லின் அளவைக் குறைப்பதுடன் இரத்தக் குழாய்களின் உட்புறமுள்ள மேல் சவ்வுகளையும் பாதிப்படையச் செய்து இரத்த உறைவுக்கான சாத்தியங்களைக் கூட்டுகிறது. பக்கத்தில் உள்ளவர் புகைக்கும் புகையை உள் இழுப்பவர்களுக்கும் இப்பாதிப்பு ஏற்படுகிறது. புகை பிடிப்பதை நிறுத்தியவர் குருதியில் எச்டிஎல் அளவு கூடுவதற்கான தரவுகள் ஆய்வுகள் மூலம் பெறப்பட்டுள்ளது.

**குருதிக் கொழுப்பைக் குறைக்க நாம் உண்ணும் உணவை கவனத்துடன் தேர்ந்தெடுக்க வேண்டும். இறைச்சி, வெண்ணை போன்ற பாலுணவுகளுடன் முட்டைக்கரு ஆகியவற்றைக் குறைப்பதுடன் உணவின் வகைகளையும் கூட்டி நார்ச் சத்தையும் அதிகரிக்க வேண்டும். ஒழுங்கான தேகப் பயிற்சி மூலமும் மற்றைய வழிவகைகள் மூலமும் உடற்பருமனையும் எடையையும் குறைக்க வேண்டும்.**

ஸ்ரற்றின் வகை மருந்துக்கள் கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது. எனக்கு கொலஸ்ரோல் கூட இருக்கிறது. நாளாந்தம் சிம்வஸ்ரின் என்னும் மருந்து 40 மில்லிகிராம் தரப்படுகிறது. அதன் அளவு ஏன் 40 மில்லிகிராமாக உள்ளது என்பதன் விபரம் எனது குடும்ப மருத்துவருக்குத்தான் புரியும். அதை அறிய நான் விரும்பியதும் கிடையாது.

கட்டுரையை முடிக்குமுன் மருத்துவத் துறையில் முதுவர் (MD) பட்டம் பெற்ற ஒருவர் தன் சேவைகாலத்தில் தான் சத்துணவுகளை சிபார்சு செய்யும்போது சிலகாலம் குருதிக் கொழுப்பைப் பற்றி கவனம் செலுத்தாது விட்டமைக்காகக் கவலை தெரிவித்திருந்தார். அவர் அறிக்கையை வாசித்தேன். அதை உங்கள் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper

Exclusive offer for our Takeaway customers. If you order your takeaway meal through our new website www.fushia-restaurant.co.uk, we will give you a 30% Discount!.

This offer is only available to online orders until the end of March 2015 (T&Cs apply)

Slow Cooked Lamb shanks £9.95 Only

With a rich rosemary and mint sauce or spicy sauce



FUSHIA

TEL - 020 8680 8833

3, Brighton Road, South Croydon, Surrey, CR2 6EA

web : www.fushiauk.com Mail : info@fushiauk.com

ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name:

Address:

Postcode:

Telephone:

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், G11, Lombard House, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# அடுத்த பிறவியில் நான் தமிழனாக பிறக்க வேண்டும்


- நேதாஜி

இதை படித்த பிறகு தமிழன் என்ற பெருமையில் உடம்பு சிலிர்த்து போகும். அதிக நீளம் என கருதி நம் வரலாறை தெரிந்து கொள்ளாமல் பயணித்து விடாதீர்கள்

தமிழ் இனத்தின் வீரம் பற்றி அறிய நாம் மன்னர் காலத்திற்கு பின்னோக்கி பயணிக்க வேண்டியதில்லை. சம காலத்தில் வாழ்ந்த நம் தமிழ் இன மக்கள் பங்கெடுத்த நேதாஜி அவர்களின் இந்திய தேசிய ராணுவம் ஒரு சான்றே போதுமானது

இந்திய விடுதலைக்காக நேதாஜி மலேயாவிலும் பர்மாவிலும் செயல்பட்டார். அவருக்கு உதவியாக அங்கிருந்த தமிழ் இன மக்கள் முழுமையாக செயல்பட்டனர்

"இந்தியா விடுதலைப் பெற்றால்தான் ஆசியாவில் மற்ற நாடுகள் உடனே விடுதலை அடைய முடியும்" என்று நேதாஜி அறைக்கூவல் விடுத்தார்.

அந்த அறைக்கூவல் நம் வீர இனத்தின் காதுகளில் விழ, தமிழ்நாட்டிலும் மலாயாவிலும் பர்மாவிலும் இருந்த தமிழின மக்கள் இந்திய தேசிய ராணுவத்தில் உயிரை பொருட்படுத்தாமல் இணைந்தனர். பல உயர் பதவிகளிலும் இருந்தனர்.

அரக்கான் போரில் பல தமிழர்கள் வீர மரணம் அடைந்தனர். மடிந்த ஒவ்வொரு தமிழனும் தான் உயிர் போகும் வரை போராடியதாக நேதாஜியிடம் சொல்லுங்கள் என்று அருகில் இருந்தவரிடம் உயிர் பிரியும் வலியோடு கூறி விட்டு வீரமரணம் அடைந்தார்கள்.

ஒரு காலக்கட்டத்தில் 600க்கும் மேற்பட்ட தென்னிந்திய இ.தே.ரா. (இ.தே.ரா - இந்திய தேசிய ராணுவம்) வீரர்களை கைது செய்ய நேர்ந்தது. அப்போது நேதாஜி ஜெனரல் திலானை அழைத்து கூறினார் "இவர்கள் மிக சிறந்த வீரர்கள். இவர்கள் கடுமையுடன் இறுதிவரை போராடுவார்கள். இவர்கள் தாவறான புரட்சி செய்வதற்கு காரணம் இவர்கள் தலைவரின் தவறான போக்குத்தான். அதனால் நீ இவர்களுக்கு தலைமை ஏற்று வழி நடத்து" என்றாராம்.

பின் ஒருநாள் தலைவரான திலான் கூறுகிறார். "தமிழ் வீரர்களுக்கு நான் தலைவராக இருந்தது என் பெரும் பேறு இ.தே. ரா.த்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான்?

இ.தே. ரா.த்தில் தலைவராக இருந்த மற்றொரு வீரர் ஜெனரல் கியானி கூறுகிறார். "தமிழர்கள் மிக சிறந்த வீரர்கள், இறுதிவரை போரிட்டார்கள். எதிரியிடம் பிடிப்பட்ட போதும் இவர்கள் ஒருவரை ஒருவர் காட்டி கொடுத்ததே இல்லை என்பதுதான் குறிப்பிடத்தக்கது.

நேதாஜியின் இ.தே. ரா. கண்டு எரிச்சல் அடைந்த வின்ஸ்டன் சர்ச்சில் ரேடியோவில் கூறினார் "மலேயா ரப்பர் தோட்டத்தில் ரப்பர் பால் உறிஞ்சும் தமிழர்களின் ரத்தம் நேதாஜி மூளையில் கட்டியாக உள்ளது" என்றார்.

அதற்க்கு பதில் அளித்த நேதாஜி ?

**இந்த தமிழர்கள்தான் பின்னாளில் ஆங்கில ஏகதிபத்தியத்தின் ரத்தத்தை குடிப்பார்கள் ?**

என்று கூறினார்.

1945 இல் மார்ச் மாதம் நேதாஜி படையில் ஒற்றர்களாக இருந்த நான்கு தமிழ் வீரர்கள் தூக்கிலிடபட்டனர். இந்தியா விடுதலைப் பெற்ற பின்னரும் இவர்களைப் பற்றி நாம் அறியாது விந்தையிலும் விந்தை. ஒரு தமிழனாக பிறந்ததால்தான் ராமுத்தேவர், இராமசாமி ஒன்றியார் போன்றோர்கள் புகழ் அறியப்படவில்லை.

தலைசிறந்த படைத்தலைவர்களை உருவாக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் நேதாஜி 46 பேர்களைத் தேர்ந்தெடுத்து ஜப்பான் டோக்கியோவிற்கு ராணுவ பயிற்சி பெற்று திரும்ப அனுப்பினார். அதில் கூட 16 பேர்கள் தமிழர்கள். ஒரு ஈழத்தமிழர் உட்பட.

இ.தே. ரா. சேர ஆர்வம் கொண்டு ஒரே நேரத்தில் 2500 பேர் அணிதிரண்டனர். உடல் வலிமை இல்லாதவர்களும் கூட தங்களை இணைத்து கொள்ளுமாறு வலியுறுத்தினர். 14 வயது சிறார்களும் 16 வயது என்று பொய் கூறி கொண்டு இ.தே. ரா.வில் இணைந்தனர்.

ஒருவர் தன்னிடம் இருந்த 200 பசுக்களை நன்கொடையாக இ.தே. ரா.க்கு நேதாஜியிடம் கொடுத்துள்ளார். கிழிந்த சேலையுடன் வந்த மூதாட்டி ஒருவள் தன்னிடம் இருந்த மூன்று டாலரை கொடுத்துள்ளார். அதை கண்ணீர் மல்க நேதாஜி பெற்று கொண்டார்.

நேதாஜியை சுற்றி பலர் தமிழர்கள் இருந்தனர். அவருடைய சமையல்க்காரர் பெயர் காளி. நேதாஜியின் இறுதி கடிதத்தை எழுதியவர் திவி என்ற தமிழர். நேதாஜி சிங்கபூருக்கு வந்த போது அவரை வரவேற்றவர் சிதம்பரம் ஒரு தமிழர்.

ஜெர்மனியில் தமிழ் வானொலி நடத்தியவர் திரு நாயுடு. அவர் அக்காலத்தில் பிரான்சில் உள்ள பாரிசில் உணவு விடுதி ஒன்றை நடத்திய பெரிய வியாபாரி. நேதாஜியின் விருப்பத்திற்கு ஏற்ப உணவு விடுதியை மூடிவிட்டு ஜெர்மனியை அடைந்து தமிழ் நிகழ்சிகளை நடத்தினார். குண்டு மழை பொழிந்தபோதும் கூட தொடர்ந்து தமிழ் நிகழ்சிகள் நடத்தினார். நாலரை ஆண்டுகளில் ஒரே ஒரு நாள்தான் நிகழ்ச்சி நடக்கவில்லையாம். மலேயாவிலும் நேதாஜிக்கு அதரவாக யுவபாரதம், சுதந்திர இந்துஸ்தான் போன்ற தமிழ் இதழ்கள் வெளிவந்தன.

ராணி ஜான்சி படையின் தலைவியாக கேப்டன் இலட்சுமி இருந்தார். இந்த படையில் கேப்டன் ஜானகி தேவர் பெரும் பங்கு ஆற்றினார். இவர் இந்தியாவில் பிறக்காதவர், இந்தியாவை பார்க்காதவர். எனினும் வீரத்தமிழ் இன உணர்வோடு போராடினார்கள். விவசாய குடும்பங்களில் இருந்து வந்த இளம் பெண்கள் தங்கள் நீண்ட கூந்தலை கத்தரித்து விட்டு ராணுவ பயிற்சிக்கு பின் பர்மா போர் முனைக்கு சென்றனர்.

அங்கு அவர்கள் செவிலியர்களாக பணிபுரிய மறுத்து தூப்பாக்கி ஏந்தி ஆங்கிலேயருடன் போரிட விரும்பினார்கள். அத்தனை வீரம் மிகுந்த தாய் வழி வந்தவர்கள் நாம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் மார்பில் குடித்த பால் இன்னும் நம் மரபணுக்களில் கலந்திருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

*நன்றி - வெளிச்சவீடு*

# கோர்த்து விடும் செய்திகள்

## ■ ஜோன் கெரி போகின்றார்

அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஜோன் கெரி இலங்கை செல்கின்றார். ஆட்சி மாற்றம் இன்னும் முற்றுப் பெறவில்லையாம். பட்டு வியாபாரிகளுக்கு அப்படி இலகுவாக விட்டுவிட்டுப் போற எண்ணமும் இல்லையாம். செஞ் சோற்றுக் கடன் தீர்க்கும் பணியில் ரணில் உறுதியாக இருக்கின்றாராம். ஆனால் ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு கடையில் குரக்கன் சால்வையிலேயே கைவக்கும் நோக்குடன் செம்மணி அம்மணி இருக்கின்றாராம்.

எல்லாவற்றையும் ஒரு மூக்கணாங்கயிற்றில் கட்டத்தான் அமெரிக்க உயர் மட்டம் கொழும்பு செல்கின்றதாம். குரக்கன் சாலவைகளை ஒன்றன் பின் ஒன்றாக உள்ளுக்குள் போட்ட பின்னர்தான் பாராளமன்றத் தேர்தல் வைத்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்து, மீண்டும் முற்றிலும் புதிதான ஒரு அரசமைப்பு யாப்பு நிறைவேற்றி அமெரிக்காவின் செய்மதி நாடாக்கி....

பட்டுவியாபாரி விடுவானா....?

## ■ அம்மா உள்ளே நிச்சயமாம்

பலகோடி சேர்த்த அம்மா உள்ளே போவது நிச்சயமாம். கட்சி உடையும் ஆபத்து. கோபாலபுரத்தில் குதூகலம். பெரிய குடும்பகாரன் வீட்டில் குடிகாரன். காவிகள் கும்மாளம். தமிழிசைபாடிக் குடிகாரனை வளைக்கப் பார்க்குதாம் காவிக் கும்பல்.

அழுகுணி அரசியல்வாதி ஒருபக்கல் குடிகாரனை சந்திச்சு....குடிகாரன் காட்டில விஸ்கி மழைதான்....இப்படிப் போகுது அயல்நாட்டு அரசியல்.

## ■ எல்லை தாண்டினால் சூடுதானாம்


முதலில் தலை சொல்லிச்சு எல்லை தாண்டினால் சூடு என்று. பின்னர் அம்மணி சொன்னா அது சும்ம பகிடி என்று. இப்ப வால் சொல்லுது எல்லை தாண்டினால் சூடுதான் என்று. இதுதான் போடுற எலும்புத்துண்டுக்கு வால் ஆட்டுறதோ.

## ■ தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

புதிதாக வானொலிகள் தொலைக்காட்சிகள் வருவது வரவேற்கத்தக்கதே. ஆனால் அவை எப்படிப் போகிறது என்பதைப் பார்த்துத்தான் அவர்கள் பற்றிய மதிப்பீடு செய்ய முடியும். அடிக்கடி அரசியல்வாதிகள் சொல்லி ஏமாற்றிய வாசகம்

"நாம் யார் சார்பாகவும் இருக்க மாட்டோம். மக்கள் சார்பாக மட்டும் இருப்போம்." இதை இப்போது ஊடகங்களும் சொல்கின்றன.

*- ஊருளவாளி*




Door To Door
2 x Tea Carton for £ 19.50
GLEN CARRIERS
Most Trusted and Reliable Name in the Trade Since 1985
GlenCarriers
(Glen Carriers Forwarding Limited)
• இலங்கை உட்பட அனைத்து நாடுகளுக்கும் கப்பல் அல்லது விமான மார்க்கமாகவும் பொதிகள் குறைந்த விலையில், பாதுகாப்பாகவும், நம்பிக்கையாகவும் அனுப்பப்பட்டு, உரிய நேரத்தில் கையளிக்கப்படும்.
• 30 வருட கால அனுபவமும் திறனும் மிக்க உலகளாவிய சேவைக்கு பெயர் பெற்றது எங்கள் நிறுவனம்
இலங்கையில் எப்பாகத்திலும் நேரடி விநியோகம் செய்யப்படும்
Collection from £ 10 within London
Collection from your door point in any part of UK or Europe
Colombo Warehouse | Laksiri Seva Pvt Ltd. 66, New Nuge Road, Peliyagoda, Colombo Telephone: + 94 1129 177 29-31
Eastern Province Warehouse | Laksiri Seva Pvt Ltd. 26, Hmyl Lane, Main Street, Addappallam, Ninthavur. 0672 0510 50-51
Tel : 020 8743 7353 || 14 Allied Way, Off Warple Way, Acton, London W3 0RQ
Web : www.glencarriers.com
Email : info@glencarriers.com

திரை விமர்சனம்



# உத்தம வில்லன்

கோடிக்கணக்கான ரசிகர்களை தன்னகத்தே கொண்ட ஒரு மெகா ஸ்டாரின் நிஜ வாழ்க்கையில் நடக்கும் சந்தோஷம், கோபம், நெகிழ்ச்சி, தியாகம், இழப்பு, அன்பு என எல்லா உணர்ச்சிகளையும் திரைக்கதையாக்கி தந்திருக்கிறார் கமல்ஹாசன். மிகப்பெரிய நடிகனான மனோரஞ்சனுக்கு (கமல்ஹாசன்) அடிக்கடி தலைவலி வருகிறது. அடிக்கடி தலை வலி வருவது சரியில்லையே என்று தலையை ஸ்கேன் எடுத்துப் பார்க்கிறார் அவரது குடும்ப டாக்டரான அர்பணா (ஆண்ட்ரியா). அவருக்கு கள்ளக்காதலியும் கூட. மூளையில் கட்டி. மரணம் நிச்சயம் என்கிற அதிர்ச்சி செய்தி மனோரஞ்சனுக்கு தெரிய வருகிறது. தான் இறப்பதற்குள் தன் குருநாதரான மார்கதர்சியை (கே.பாலச்சந்தர்) வைத்து ரசிகர்கள் எல்லோரும் சிரிக்கும்படி ஒரு காமெடி படத்தை தந்து விட ஆசைப்படுகிறார். இந்த தகவலை தன்னை இந்த பெரிய ஹீரோ லெவலுக்கு கொண்டு வந்த தன் மாமனார் பூர்ணசந்தரராவிடம் (கே.விஸ்வநாத்), அவரது மகளும், கமலின் மனைவியுமான வரலட்சுமி (ஊர்வசி) மறைக்கிறார். இதனால் கோபப்படும் அவர்கள் கமலின் வீட்டை விட்டு வெளியேறுகிறார்கள். கமலின் குருநாதர் கே.பாலச்சந்தர் முதலில் இயக்க மறுத்தாலும் கமலுக்கு கேன்சர் என்கிற செய்தியை கேட்டு அதிர்ச்சியடைந்து அவர் ஆசைப்படி ஒரு படத்தை இயக்க சம்மதிக்கிறார். அப்புறம் என்ன கமல் கடைசி ஆசை நிறைவேறியதா? பிரிந்த குடும்பம் ஒன்று சேர்ந்ததா இல்லையா? என்பதே கண்களை குளமாக்கும் நெகிழ வைக்கும் காட்சிகளோடு முடியும் கிளைமாக்ஸ்.

தான் எப்போதுமே 'உலக நாயகன்' தான் என்பதை ஒவ்வொரு படத்திலும் ஒருபடி மேலே போய் நிருபித்து வருகிறார் கமல். எத்தனை விதமான காட்சிகள், அதற்கேற்றாற்போல் எத்தனை விதமான முகபாவங்கள்? அப்பப்பா இதெல்லாம் கமல்ஹாசன் என்கிற ஒரே ஒரு ஆளுமையால் மட்டுமே திரையில் காட்ட முடியும்.

மாமராரின் மிரட்டலுக்காக தன் முன்னாள் காதலியை பிரிந்த வேதனையையும், அவளுக்கு பிறந்த தன் மகள் பார்வதியை சந்திக்கும் போது கலங்குவதும் என்ன ஒரு உணர்ச்சிமிக்க காட்சிகள்.

"நான் கண்டிப்பா உன்னை கொலை செய்வேன்" என்று கோபத்தோடு போகிற மாமனாரையே பின்னர் காலில் விழ வைக்கும் போதும், எப்போதுமே விளையாட்டாக இருக்கும் மகனிடம் தனக்கு வந்த நோயைப் பற்றி சொல்லும் போதும் அதைக்கேட்டு மகன் கமலை கட்டிப் பிடித்துக் கொண்டு அழுவதுமான காட்சிகளில் எப்பேர்ப்பட்ட ரசிகனும் கண்கலங்கிப் போவான். இப்படி படம் முழுக்க கமலின் நடிப்புக்கு வலு சேர்க்கும் காட்சிகள் அதிகம். படத்தில் ஹீரோயின் என்று யாருமில்லை. பூஜாகுமார், ஆண்ட்ரியா இருவருமே ஒவ்வொரு கேரக்டராக வருகிறார்கள். பூஜாகுமார் ஒரு நடிகையாக வருவதால் அவருக்கு மட்டும் ஓப்பனிங் டூயட் பாடல் உண்டு. இரண்டாம் பாகத்தில் கே.பாலச்சந்தர் எடுக்கும் உத்தம வில்லன் படத்தில் பூஜா குமார் நடிப்புக்கு செம தீனி. அவரும் சளைக்காமல் நடித்திருக்கிறார். ஆண்ட்ரியா கமலின் குடும்ப டாக்டராக வருகிறார்.

மார்கதர்சி என்ற இயக்குனர் கேரக்டரில் வருகிறார் மறைந்த இயக்குனர் இமயம் கே.பாலச்சந்தர். நிஜத்தில் அவர் எப்படி கோபம் கலந்த கண்டிப்புடன் பேசுவாரோ அதை அப்படியே திரையில் கொண்டு வந்திருக்கிறார்கள். அவரும், கமலும் வரும் எல்லாக் காட்சிகளுமே ரகளையான ரசனை தான். தன் குருநாதர் என்கிற மரியாதையை அவர் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு காட்சியிலும் வெளிக்காட்டிய விதம் தான் ஒரு நல்ல சிஷ்யன் என்பதற்கு சான்று. இப்படத்தின் மூலம் கே.பி சாருக்கு பெருமை சேர்த்திருக்கிறார் கமல். அதோடு அவருடைய கடைசி படமாகவும் 'உத்தம வில்லன்' அமைந்தது கமல் செய்த பாக்கியம்.

கமலின் மாமனாராக வரும் கே.விஸ்வநாத், முன்னாள் காதலியின் கணவராக வரும் ஜெயராம், கமலின் மேனேஜராக வரும் எம்.எஸ்.பாஸ்கர் என மற்ற நடிகர்களும் தங்கள் கேரக்டர்களுக்கு சிறப்பான நடிப்பைக் கொடுத்து கைதட்டல்களை அள்ளுகிறார்கள். குறிப்பாக மேனேஜராக வரும் எம்.எஸ்.பாஸ்கர் சிறந்த குணச்சித்திர நடிகராக மிளிர்கிறார். கமலை வைத்து கே.பாலச்சந்தர் படத்துக்குள் எடுக்கும் படமான 'உத்தம வில்லன்' படத்தில் நாசர், முனைவர் கு.ஞானசம்பந்தம், சண்முகராஜன், வையாபுரி, அஜய்ரத்னம் என மற்ற நடிகர்கள் காமெடியுடன் நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

மிகப்பிரம்மாண்டமான அரங்குகளில் ஆர்ட் டைரக்டர்கள் லால்குடி என்.இளையராஜா, மோகன் இருவரின் உழைப்பு வீண்போகவில்லை. கலர்புல்லான, இரண்டு டோன்களில் ஒளிப்பதிவும் செய்திருக்கிறார் ஒளிப்பதிவாளர் ஷாம்தாத். ஜிப்ரானின் இசையில் அப்படி ஒரு முதிர்ச்சி. பாடல்கள் செவிகளை சேதப்படுத்தவில்லை. பின்னணி இசையில் நெகிழ வைக்கும் காட்சிகளில் தன்னையும் மறந்து ரசிகர்களின் கண்களில் கண்ணீர் வரும். எப்படிப்பட்ட கதையாக இருந்தாலும், அதில் தனக்கே உரிய நக்கல், நையாண்டி, காமெடியான வசனங்களோடு திரைக்கதையை அமைத்திருக்கிறார் கமல்ஹாசன். ஒரு மிகப்பெரிய நடிகனின் நிஜ வாழ்க்கை எத்தனை வலிகளும், வேதனைகளும் நிறைந்தது என்பதை நெகிழ்வாக தந்திருக்கிறார். கமலின் திரைக்கதைக்கு எந்த சேதாரமும் ஏற்படாத வண்ணன் மிக நேர்த்தியாக இயக்கி தந்திருக்கிறார் ரமேஷ் அரவிந்த்.

வெட்டு, குத்து, ரத்தம், வன்முறை, காதல், பேய் சீசன் என ஒரே மாதிரியான படங்களுக்கு மத்தியில் முதல் முறையாக எல்லா மனித மனங்களையும் அசைத்துப் பார்க்கும் விதமாக உணர்ச்சிகரமான திரைக்கதையுடன் கூடிய படத்தை தந்து ரசிகர்கள் மனதில் மீண்டும் சிம்மாசனமிட்டு அமர்ந்திருக்கிறார் 'உலக நாயகன்'.

*சவுண்ட் கமெரா அக்ஷன்*

# சினித்துளி

## குழந்தை நட்சத்திரங்களுக்குத் தடை!



சமீபகாலங்களாக குழந்தைகளை மையமாகக் கொண்டு நிறைய படங்கள் ரிலீஸ் ஆகிவருகின்றன. அதிலும் 'கோலிசோடா', 'வஜ்ரம்' என வன்முறையில் ஈடுபடுவது போன்று கதைகளும் அதிகம் வெளியாவது குறிப்பிடத்தக்கது. குழந்தைகள் நடிப்பில் வெளியான படங்கள் தேசிய விருதுகள் பெறுவதும் ஏற்றுகொண்டாக வேண்டும். இந்நிலையில் சிறுவயதிலேயே நடிக்க வருவதால் அவர்களின் வாழ்க்கை நிலை பாதிக்கப்படுகிரது என குழந்தைகள் நல சங்கள் பல இணைந்து மனு அனுப்பியுள்ளனர்.

இதனால் தமிழ்நாடு உரிமைகள் ஆணையம் சார்பில் விரைவில் நடவடிக்கை எடுக்க திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. பொருளாதார அளவில் மேமம்பாடான நிலை உள்ளதா என உறுதி செய்யவேண்டிய நிலை உள்ளதால் அதற்குரிய விதிமுறைகளை விரைவில் அறிவிக்க உள்ளனராம்.

## சிக்கலில் 'மாஸ்'



சூர்யா தற்போது வெங்கட் பிரபு இயக்கத்தில் 'மாஸ்' படத்தில் நடித்து வருகிறார். இந்த தலைப்பில் படம் வெளியானால் வரி விலக்கு கிடைக்காது என்பதால் வேற தலைப்பு வைக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் இப்படம் திகில் மற்றும் நகைச்சுவை படம் என்பதால் யு சான்றிதழ் கிடைக்கவும் வாய்ப்பிருக்காது என்பதால் படத்தலைப்பை மாற்ற உள்ளனர். இப்படம் மே மாதம் வெளியாகவிருக்கிறது. படத்தின் தலைப்பை மாற்றுகிறார்களா? அல்லது மாற்றாமல் அப்படியே வெளியிடுகிறார்களா? என்பது இனிதான் தெரிய வரும். தொடங்கும் போதே உருப்படியான தலைப்பை வைக்கலாமே ?

## மூன்று அடி குள்ள விஜய்



சிம்பு தேவன் இயக்கத்தில் விஜய், ஹன்சிகா, ஸ்ருதி ஹாசன், நந்திதா, ஸ்ரீதேவி, சுதீப் உள்ளிட்ட பலர் நடிப்பில் பிரம்மாண்டமாக உருவாகி வரும் படம் 'புலி'. இப்படத்தின் படப்பிடிப்புகள் ஆந்திரா மாநிலத்தில் நடந்து வருகிறது. இந்நிலையில் விஜய் இப்படத்தில் முதல்முறையாக குள்ளராக 3அடியில் நடிக்கிறாராம். இதற்காக அதிநவீன முறையில் காட்சிகள் அமைக்கப்பட்டு வருகிறதாம். கமல் 'அபூர்வ சகோதரர்கள்' படத்தில் நடித்தது போன்ற கெட்டப் எனக் கூறப்படுகிறது.

## மீண்டும் ஆண்பாவம்!



1985ம் ஆண்டு பாண்டியராஜன் இயக்கத்தில் வெளியாகி பெரும் வரவேற்பு பெற்ற படம் 'ஆண்பாவம்'. பாண்டியராஜன், பாண்டியன், ரேவதி, வி.கே.ராமசாமி நடிப்பில் வெளியான படம். இப்படத்தின் மூலம் சீதா தமிழ் சினிமாவில் அறிமுகமானார். கொள்ளங்குடி கருப்பாயி இப்டத்தில் பாண்டியராஜனின் பாட்டியாக நடித்திருப்பார். தற்போது இப்படத்தின் ரீமேக்கான 'ஆண்பாவம் 99%' என்ற பெயரில் பாண்டியராஜன் மீண்டும் இயக்க இருக்கிறார்.

பாண்டியராஜனின் மகன் ப்ரித்வி இந்த படத்தில் ஹீரோவாக நடிக்க இருக்கிறார். படத்திற்கான மற்ற நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் தேர்வு நடந்து வருகிறது.

MARSANS
SOLICITORS & ADVOCATES
"New Law Firm in the heart of London"

**Tamil Speaking Barrister and Solicitors**

Contact Marsans, Solicitors and Advocates for expert legal advice and assistance.

**Areas of law:**
- Immigration
- Civil/Commercial Litigation
- Business Crime /VAT
- Commercial & Residential Property
- India Desk

Languages: Tamil, Hindi, Telugu, Malayalam

Marasans have dual qualified lawyers with specialist knowledge to assist on India / UK related issues such as;
- Recovery of family properties
- Matrimonial /custodial disputes
- Immigration - Tier 4 and Tier 5 sponsor license
- Asset tracing
- Sponsor licences



FIRST FLOOR, 277-281 OXFORD STREET, LONDON, W1C 2DL DX 138882 MAYFAIR Mail : email@marsans.co.uk Web : www.marsans.co.uk
PHONE: 020 7499 0620 | MOB: 07837 450 397 | FAX: 020 7499 7109 | EMERGENCY: 020 7408 5080

# JSN HEAT SUPPLIES LTD

MERLYN · KUDOS · hansgrohe · Hudson Reed · KUDOS · GROHE · GRUNDFOS

## WIDE RANGE OF BATHROOMS, SHOWERS & KITCHENS

EUROSMART BASIN MIXER SMOOTH BODY £45.24 inc. VAT

EUROSMART BASIN MIXER POP UP WASTE £56.00 inc. VAT

EUROSMART BASIN MIXER + BATH SHOWER MIXER PACK £233.20 inc. VAT

COSMO SHOWER BUNDLE £432 inc. VAT

SINGLE LEVER BASIN MIXER LIMITED OFFER £14.99 inc. VAT

SINGLE LEVER BATH/SHOWER LIMITED OFFER £32.00 inc. VAT



SPECIAL OFFER Thermostatic 2 way outlet LIMITED OFFER £169 inc. VAT £149 inc. VAT

G1000 COSMO BSM WITH NEW TEMPESTA £201.00 inc. VAT

EUPHORIA SYSTEM 180 SHOWER SYSTEM £298.00 inc. VAT

COMPACT FURNITURE PACK 550x300mm basin unit, 500 x 300mm WC unit, Siamp Tru-Flow concealed Cistern, Rak compact pan & standard seat. £249 inc. VAT

KITCHEN AND BATHROOM FREE DESIGN AND QUOTATION. FITTING SERVICE AVAILABLE.



1200mm 6MM SAFETY GLASS CLEAR SEALED LIFETIME GUARANTEE SLIDING DOOR £189 inc. VAT

LED LAMP BULB WITH FITTING FIRE-RATE DOWN LIGHT Starts from £14 inc. VAT

ALL KINDS OF BOILER CONTROLS AND PARTS AVAILABLE AT SPECIAL PRICES

Vaillant · Roca · MAIN · Armitage Shanks · Glow-worm · Ideal Standard · AQUALISA · AQUALUX · mira · ARISTON · KESTON · saneux

• BATHROOMS • SHOWERS • GRANITE TILES • MARBLE TILES • PORCELAIN TILES ALL AT DISCOUNT PRICES

162 PINNER ROAD, HARROW HA1 4JJ TEL: 020 8427 0553



# sarasas

## SOUTH INDIAN RESTAURANT

- தென்னிந்திய, இலங்கை, வட இந்திய, செட்டினாட் மற்றும் சைனீஸ் உணவின் ருசியை அனுபவியுங்கள்.
- உங்கள் வீட்டுத் தோட்டத்தில் அல்லது நீங்கள் விரும்பும் இடத்தில் எமது தோசை தயாரிக்கப்படும்.
- சகல பாத்திரங்களும் நாம் கொண்டு வருவோம்.
- நீங்கள் எமது உணவை ருசித்து மகிழவேண்டியது மாத்திரமே






* Outdoor catering * Function hall * Party orders

புதிய விழாக்களுக்கான மண்டபம் Bar வசதியுடன் திறக்கப்பட்டுள்ளது









# SARASAS CATERING

எமது சேவை, கற்பனை, ருசியான உணவு, சிறந்த சமையல் ஆகியவற்றின் வெளிப்பாடாகும்

We make 30 different Types of Dosa

630-634 Uxbridge Road, Hayes, Middlesex, UB4 0RY

TEL : 020 8561 8188 for further enquiries please contact : 07939 246 552

Email: raj@sarasasrestaurant.com www.sarasasrestaurant.com

FREE CAR PARKING UPTO 100 CARS

Opening Times 12.00 noon to 11.00pm (7 days a week)

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
**Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
**சவுத்ஹோல் டிராவல்**
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற்ற ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறார்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

***Think Travel, Think Southall Travel***

www.southalltravel.co.uk

ATOL 5553 PROTECTED